திருக்கோயில்

ஜூலை 1980 ரூ. 1-25

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

மதுரை அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு, யுனெஸ்கோ டைரக்டர் ஜெனரல் டாக்டர் திரு எ. எம். எம். பவ், திருமதி. பவ், இருவரும் வருகை தந்து கோயிலைக் கண்டுகளித்தனர். அறங்காவலர் குழுத்தலைவர் திரு. வி. என். சிதம்பரம் அவர்களும், அறங்காவலர் திரு எம். கிருஷ்ண சுவாமிக்கோனார் அவர்களும், உடன் உள்ளனர்.

முகப்பு:

திருவரங்கம்
அருள்மிகு அரங்கநாத சுவாமி
திருக்கோயில் கோபுரத்தின் அழகிய தோற்றம்

திருக்கோயில்

ஆசிரியர்: ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

மாலை: 22 | இரவுத்திரி ஆண்டு-ஆடித் திங்கள்-ஜூலை-1980 | மணி: 10

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. *15—00* உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. *1—25* வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைத் குறிப்பிட்டு மாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. *9—60* ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா,. ரூ. *20—00*-ல் இருந்து ரூ.*25—00* ஆக ஜனவரி *1978* முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொருளடக்கம்

தமிழ்நாட்டுக் கோயில்கள்
—ஆசிரியர்

அத்வைத தத்துவம்
—டாக்டர் டி.எம்.பி. மகாதேவன், M.A, Ph.D.

பெரியாழ்வார் திருவுள்ளம்
—திரு ஏ.ஜே. இராமசாமி முதலியார்

ஆய்ச்சியர் குரவை
—திரு கா. அ. ச. ரகுநாயகன், M.A.

அனந்தாழ்வான்
—கவிஞர் திரு மனசை ப. கீரன், B.A., B.T.

உத்தர காண்டத்தின் தனித்தன்மை
—திரு செ. வேங்கடராமச் செட்டியார்

ஆண்டாள் நாச்சியாரின் வாக்கும் வாழ்வும்
—திரு கா. அ. மணவாளன், M.A.

சித்தமருத்துவத்தின் சிறப்பும் வரலாறும்
—டாக்டர் கே. வி. கிரி, R.I.M.P.

திருக்குறள்- ஒரு தெய்வீக நூல்
—புலவர் நா. மயில்சாமி

திருக்கேதார யாத்திரை
—பேராசிரியர் திரு மறை திருநாவுக்கரசு

சௌராட்டிரப் பிரபந்தம்
—திரு கே.ஆர். கிருஷ்ணமாச்சாரியார்

கலையின் தோற்றமும், வளர்ச்சியும்
—திரு க. சி. கமலையா, B.A.

சேக்கிழார் செந்தமிழ்
—திரு வி. நடேசனார், B.A., J.P.

அமுதனார் பெருமை
'மகாவித்துவான்'
—திரு பி.ப.அண்ணங்கராச்சாரிய சுவாமிகள்

திருத்தேவனார்தொகை எம்பெருமான்
—டாக்டர் ந. சுப்புரெட்டியார், M.A., Ph.D.

1—1—79 முதல் *30—6—80* வரை
நடைபெற்ற கும்பாபிஷேகங்கள்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

"தமிழ்நாட்டுக் கோயில்கள்"

(விழாக்களும், கலைகளும்)

(முற்றொடர்ச்சி)

விழாக்கள் :

விழாக்காலங்களில், இந்தியாவின் பல நகரங்களில், பல லட்சக் கணக்கான மக்கள் திரளாகக் கூடுகின்றனர். எண்ணற்ற பெரு நகரங்களிலும் கிராமங்களிலும், எத்தனையோ வகையான எண்ணற்ற பல விழாக்கள் நடைபெறுகின்றன. உறையூர்ப் பங்குனி உத்திர விழா, கருவூர் உள்ளிவிழா, மதுரை ஆவணி அவிட்டவிழா என்பன, தமிழகத்தின் மிகப் புகழ்பெற்ற, பழமையான பெருவிழாக்கள் என்று ,இறையனார் களவியலில், நக்கீரர் குறிப்பிடுகின்றார். திருஞானசம்பந்தர் திருமயிலாப்பூரில், சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்பே, ஐப்பசி ஓணவிழா, கார்த்திகைத் தீபவிழா, மார்கழித் திருவாதிரைவிழா, தைப் பூசவிழா, மாசி மகவிழா, பங்குனி உத்திரவிழா முதலிய விழாக்கள், சிறப்புற நடைபெற்றமையினைத் தம் தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளார். இவ்விழாக்கள் எல்லாம், தொன்றுதொட்டு வரும் நம் இந்தியப் பாரம்பரியப் பண்பாடுகளின் அழிவற்ற தொடர்ச்சியைப் பிரதிபலிக்கின்றன.

மதுரைச் சித்திரை விழா:

தென்னிந்தியாவில், தமிழ்நாட்டில், மதுரை மாநகரில், சித்திரை மாதத்தில் ஆண்டு தோறும் நடைபெற்று வருகின்றது, சித்திரைத் திருவிழா. இவ்விழாவிற்காக எத்தனையோ பல லட்சக்கணக்கான மக்கள், நீண்ட நெடுந் தொலைவுகள் பயணம் செய்துகொண்டு வருகின்றனர். கால்நடையாகவும், மாட்டு வண்டிகளிலும், மிதிவண்டி உந்து பேருந்து ஆகியவற்றிலும், இவர்கள் இவ்விழாவுக்கு வருகின்றனர். இங்கும் அங்குமாகப் பயணிகள் சாலை ஓரங்களில் தங்குகின்றனர். பல நூற்றாண்டுகளாக நம்முடைய பலவேறுவகையான உயிர்ப்புள்ள பண்பாடுகளைக் காப்பாற்றிக்கொண்டு, இந்தச் சாலைகளின் வழிநெடுக மக்கள் வந்து கொண்டிருக்கின்றனர். சில விழாக்கள் சிறியனவாக இருக்கின்றன. சில மிகப் பெரியனவாக இருக்கின்றன. மனித குலமாகிய பெருங்கடல் போன்ற இத்திரளில், புதிதாகப் பிறந்த குழந்தைகளும், முதல்முதலாகத் திருவிழாக் காண்பதற்குக் கொண்டு வரப்பெறுகின்றன. ஆண்களும் பெண்களும் ஆகிய பலரும்கூட, இங்கு முதன் முதலாகப் புதிது புதிதாக ஒவ்வோராண்டிலும், பல்லாயிரக்கணக்கில் வருகின்றனர்.

திருவிழாக்கள், பலருக்குப் பலவகைகளில் பயன்படும், மகிழ்ச்சி தரும். பள்ளி விடுமுறை நாட்களாகவோ, இன்பச் சுற்றுலாச் செல்லும் காலமாகவோ, தனிச் சிறப்பு விருந்து நாட்களாகவோ, கற்பனை வேட உடைகளில் நிகழும் கிராமிய நடனங்களின் பொழுது போக்குகளாகவோ, பலருக்குப் பலவகைகளில் திருவிழாக்கள் அமையும். ஆனால் முதன்மையாக விழாக்கள் என்பவை, சமய உணர்வூட்டும் நிகழ்ச்சிகளேயாகும். ஒருவகையில் கோயிற் பணிகளின் விரிவே விழாக்கள் எனலாம். ஒவ்வொரு விழாவும் கோயிலிலேயே தொடங்குகின்றது; கோயில்களாலேயே ஏற்பாடு செய்யப்படுகின்றது. விழாக்களைப் பற்றி உணர்வதற்கு, நாம் கோயில்களைப் பறறி உணர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

கலைகள் :

இந்து சமய மக்களுக்குச் சமயம் என்பது ஒரு கொள்கை மட்டுமன்று, ஒருவகை வாழ்க்கை நெறி முறையாகும். வாழ்க்கையின் நலங்கள் அனைத்தையும், இந்துக்கள் தெய்விகத்துடன் தொடர்புபடுத்துகின்றனர். இந்துக்களின் நம்பிக்கையின் படி, கலைகள் கடவுளிடமிருந்து தோன்றின; அதனால் அவைகளை இயல்பாகக் கடவுளைப் பெருமைப்படுத்துதற்கே பயன்படுத்துதல் வேண்டும். கோயில்கள் ஒரு நிறுவனமாக விளங்குவதற்கு, இதுவே உள்ளார்ந்த ஒரு பெருங் கொள்கையாகும். கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நடனக்கலை ஆகிய பலவகைக் கலைகளுக்கும், கோயில்களே ஒரு பெரும் நிலைக்களமாக விளங்குகின்றன. கோயில்களில் உள்ள சிற்பங்கள், உலகப் படைப்பின் விசித்திரங்கள் அனைத்தையும் முழுதாக நமக்கு நினைவூட்டுகின்றன. கோயிற் சிற்பங்களில் கடவுளரும் மனிதரும் உள்ளனர்; விலங்குலகம் அனைத்தும் உள்ளது; இவற்றில் அன்பும் பாசமும் இணைகின்றன; பக்தியும் பகைமையும்கூட, இந்து சமய இதிகாச புராணங்களாகிய பரந்த உலகத்தினின்று கோயிற் சிற்பங்களில் அழகுறத் தீட்டிக் காட்டப்பெறுகின்றன.

ஓவியம் :

காஞ்சிபுரம் கைலாசநாதர்கோயிலில், எட்டாம் நூற்றாண்டின் சுவரோவியத் துணுக்குகள் காணப்பெறுகின்றன. அவைகள், அஜந்தா சிற்பங்களை நினைவூட்டுகின்றன. கோயில்கள் செங்கல்லாலோ சுதையினாலோ அல்லது கருங்கல்லினாலோ, எதனால் அமைக்கப்பெற்றிருப்பினும், முதன்முதலில் முழுவதும் வண்ண ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்தன. மகேந்திரவர்மன் காலத்துச் சித்தன்னவாசல் ஓவியங்கள் கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. ஒரு குளத்தில் இரண்டு அன்னங்கள் இணைந்து நீந்துகின்றன. நடனப் பெண்கள் இருவர் அழகுற்றுத் திகழ்கின்றனர். ஒருத்தி தன் இடக்கையைக் 'கஜஅஸ்தம்' என்னும் நிலையிலும், வலக்கையின் உள்ளங்கையைச் சதுரநிலையிலும் வைத்திருக்கின்றாள். மற்றொருத்தி, தன் இடக்கையை 'லதா விரிசிகம்' என்னும் நடன நிலையில், அழகுற நீட்டிப் பெருமிதவுணர்வு தோன்ற விளங்குகின்றாள்.

தஞ்சைப் பெரிய கோயிலில் 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுவரோவியங்கள் வரையப்பெற்றுள்ளன. அவற்றில் வானுலக நடன மகளிர் நால்வர் உள்ளனர். இதோ இங்கே ஒரு நடனப்பெண்! இங்கு இராசராசசோழனும், அவனது குருவாகிய கருவூர்த் தேவரும் உள்ளனர். இதோ இங்கே சிவபெருமான், சங்காரக் கடவுளாக, உக்கிர ருத்திரமூர்த்தியாகக் காட்சி தருகின்றார்.

திருவரங்கத்தில் 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுவர்ச் சித்திரங்கள் உள்ளன. மதுரைக் கோயிலிலும், இந்நூற்றாண்டைச் சேர்ந்த வண்ண ஓவியங்கள் பல உள்ளன. சசீந்திரம் கோயிலிலும், இத்தகைய வண்ண ஓவியங்கள் காணப்படுகின்றன. கும்பகோணத்தில் இராமபிரானின் முடிசூட்டு விழா நிகழ்ச்சிகளை விளக்கும், வண்ண ஓவியத் தொடர்கள் பல உள்ளன. திருக்குற்றாலத்தில் சித்திரசபை என்னும் திருக்கோயில் ஒன்று உள்ளது. அக்கோயில் முழுவதிலுமே, எங்கும் சித்திரங்கள் தீட்டப்பெற்றுள்ளன. அங்குச் சித்திரங்களைத் தவிரத் தனியாக வேறு கடவுளர் வடிவங்கள் எதுவும் வைத்து வழிபடப்பெறவில்லை.

படிமக் கலை :

கோயில்களோடு தொடர்புடைய மிக முக்கியமான ஒரு கலை, திருவிழா நாட்களில் வீதிகளில் திருவுலாப்புறமாக எடுத்துச் செல்லப்பெறும் வெண்கலப்படிமங்களை வார்க்கும் படிமக் கலையாகும். இத்துறையில், தமிழ்நாடு 2500ஆண்டுகளுக்கும் முற்பட்ட பழமையான பாரம்பரிய நெறியைப் பெற்றுள்ளது. இதோ நாம் காண்கிற, ஐந்து சென்டி மீட்டர் உயரமுள்ள இந்தத் தேவியின் திருவுருவம், கி.மு. 7ஆம் நூற்றாண்டிற்கு உரியதாகும். இதோ இந்தப் பொன்முலாம் பூசப் பெற்ற போதிசத்வ மைத்ரேயரின் திருவுருவம், கி.பி.8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. தெய்வத் திருவுருவங்களை அமைக்கும் படிமக்கலைத் துறையும் கூட, 9ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டுவரையில், சோழர் காலத்தில்தான், மிகச் சிறந்த உயர்ந்த உச்சநிலையை அடைந்தது.

தெய்வத் திருவுருவங்களை வெண்கலத்தில் அமைக்கும் படிமக்கலை, இன்றும் வளர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற, ஓர் அரும்பெரும் கலையாகும் வெண்கலப் படிமங்கள் இன்றும் மிகுதியாக வார்க்கப்பட்டு வருகின்றன. முதலில் மெழுகினால் வடிவம் தயாரிக்கப்படுகின்றது. அது பின்னர் களிமண்ணுக்குள் வைத்து மூடப்பெறுகின்றது. பின்னர் அதனை நெருப்பில்வைத்துக் காய்ச்சி உருக்குகின்றனர். இந்தக் களிமண் அச்சில், உருக்கப்பெற்ற பஞ்சலோகங்கள் வார்க்கப்படுகின்றன. வெப்பம் தணிந்து குளிர்ந்த பிறகு, களிமண் அச்சு அகற்றப்படுகிறது. அதன் உள் வைக்கப்பெற்ற பஞ்சலோகப் படிமம், பின்னர் அழகுறச் செதுக்கி, நேர்த்தியாக இழைத்து மெருகேற்றப்பெறுகின்றது.

கடவுளரின் திருவுருவங்கள் அழகிய அணிகலன்களால் ஒப்பனை செய்யப்பெறுகின்றன. விலை உயர்ந்த பொன்னாலும் மணிகளாலும் புனையப்பெற்ற இவ் வணிகலன்கள், கடவுளருக்கு அடியவர்களால் அன்புடன் வழங்கப்பெறுவனவாகும். அரசன் முதல் ஆண்டிவரையில் பல நூற்றாண்டு காலமாக, இவ்வணிகலன்கள் கடவுளர்க்கு வழங்கப்பெற்று வருகின்றன. கோயில்களில், வழிபாட்டின்போது பயன்படுத்துவதற்கும், கடவுளின் திருவுருவங்களைப் புனைந்து அழகுசெய்தற்கும், கலைநலஞ்சான்ற வெள்ளிப்பாத்திரங்கள் முதலியனவும், கோயில்களில் அடியவர்களால் வழங்கப்பட்டுப் பயன்படுத்தப் பெற்று வருகின்றன.

மரவேலை :

மரவேலை என்பது மற்றொரு பழமையான கலையாகும். ஒருவகையில் கல்வேலையைக் காட்டிலும், மரவேலைக்கலை மிக்க பழமை வாய்ந்தது. கோயில்களில் மிகப்பெரிய மரக்கதவுகள் இருக்கின்றன. இதோ இங்கே நாம் காணும் கதவு காஞ்சிபுரம் கோயில் ஒன்றற்கு உரியது. 15 மீட்டர் உயரமுடையது. முதன்முதலில் கோயில்கள் மரத்தாலேயே அமைக்கப்பெற்றன. திருவிழாக்களில் பயன்படுத்தப்பெறும் மிகப்பெரிய தேர்கள், ஒரு காலத்தில் கோயில்கள் மரத்தினால் அமைந்திருந்த மரபினையே பிரதிபலிக்கின்றன. அத்தேர்களில், ஏராளமான வகைவகையான மரவேலைப் படிமங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. தெய்வங்களும் தேவதைகளும், ஆண்களும், பெண்களும், செடி கொடிகளும், விலங்குகளும், மரத்தால் அமைந்த தேர்களில் அழகுறச்செதுக்கப்பெறுகின்றன. புராண இதிகாசக் கதைகளும் இவற்றில் இடம்பெறுகின்றன. அழகிய நுண்ணிய வேலைப்பாடு அமைந்த தந்தச் சிற்பக் கலைப்பொருள்களும், திருவரங்கம், அழகர் கோயில் முதலியவற்றில் காணலாம்.

திருக்குட நீராட்டு :

ஒரு புதிய கோயில் கட்டப்படும்போது, அல்லது ஒரு பழைய கோயில் திருப்பணி செய்து புதுப்பிக்கப்படும்போது, திருக்குடநீராட்டு (கும்பாபிஷேகம்) என்னும் விரிவான ஒரு சடங்கு நிகழ்த்தப்படுகின்றது. கோயில்களைப் புனிதப் படுத்துவதற்காக இச் சடங்கு செய்யப்படுகின்றது. இதனைப் பெருஞ்சாந்தி என்று சம்பந்தரும், கடவுள்மங்கலம் என்று இளங்கோவடிகளும் குறிப்பிடுவர். கலைகளில் தொடங்கி, வழிபாட்டில் மக்கள் நிறைவு பெறுகின்றனர். திருமுழுக்கு ஆட்டுதல் வழிபாட்டின் ஒரு பகுதியாகும். உடலின் தூய்மை, உள்ளத்தின் தூய்மை ஆகிய இரண்டும், ஒருங்கே இன்றியமையாதன. ஒவ்வொரு நாளும் கடவுளின் திருவுருவம், மந்திர மறைகள் முழங்க, முறைப்படி நீராட்டப் பெறுகின்றது. இது திருமஞ்சனம் அல்லது அபிடேகம் எனப்படும். இதற்கு, நீர் பால் எண்ணெய் மஞ்சள் சந்தனம் பழக்கலவை பன்னீர்போன்ற பல பொருள்கள், பயன்படுத்தப் படுகின்றன. இதன்பின்னர்த் தொன்றுதொட்டு வரும் மரபு நெறியின்படி, திருநீறு சந்தனம் மலர்மாலைகள் ஆடைஅணிகலன்கள் முதலியனவற்றால் இறைவனுக்கு அலங்காரம் செய்யப்படுகின்றது. பின்னர் பலவகைத் தூப தீப ஆராதனைகள் செய்யப்படுகின்றன. ஒரு பேரரசனுக்குச் செய்யப்படுவது போல, கடவுளின் திருவுருவத்திற்கு வெண்குடை நிழற்றல், ஆலவட்டம் வீசுதல், சாமரை இரட்டுதல், கண்ணாடி காட்டுதல், படைக்கலன்கள் ஏந்துதல் முதலிய, பதினாறு வகையான உபசாரங்கள் செய்யப்படுகின்றன. இறுதியாகக் கற்பூரம் ஏற்றுதலுடன் வழிபாடு நிறைவு பெறுகிறது.

இசைக்கலை :

தியானத்தைப்போல இசைபாடுதலும், இறைவனின் அருளைப் பெறுவதற்கு உரிய ஒரு வழியாகும். இதனைப் பல அருளாளர்கள் கடைப்பிடித்துள்ளனர். அதனால் தேவாரம் திருப்புகழ் திவ்வியப்பிரபந்தம் முதலிய பக்திப் பாடல்களைப் பாடும் இசைவாணர் குழுவினரும், கோயில்களில் இருந்து பணியாற்றி வருகின்றனர்.

நாம் கோயில்களுக்குக் கடவுளைத் தேடிக் கொண்டு சென்று வழிபடுகின்றோம். ''இங்கு நம் இல்லங்கள்தோறும் எழுந்தருளிச், செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகன்'' என்று மாணிக்கவாசகர் பாடுவதுபோல, சில சமயங்களில் கோயில்களிலிருந்து கடவுளரும், மக்களாகிய நம்மை ஆட்கொள்ளுவதற்காக, நம்மைத் தேடிக்கொண்டும் எழுந்தருளி வருகின்றனர். திருவிழாக் காலங்களில் கோயில்களிலிருந்து கடவுளரின் வெண்கலப் படிமங்கள், மக்களுக்காகத் திருவீதியுலாவாகக் கொண்டு வரப்பெறுகின்றன. இதற்காக மரத்தாலும், பொன் வெள்ளி போன்றவற்றாலும் செய்யப்பெற்ற, பலவேறு வாகனங்கள் பயன்படுத்தப்பெறுகின்றன. இத்தகைய திருவீதி உலாக்களின் அடிப்படைநோக்கம், கடவுளைக் கோயிலுக்குச் சென்று காணமுடியாத பிணியாளர்கள், வயது முதிர்ந்தவர்கள், முடவர்கள், குழந்தைகள் போன்ற பலதிற மக்களும் கூடத் தரிசித்து மகிழும்படி, கடவுளை அவர்கள் பால் எடுத்துச் செல்லுதலேயாகும்.

தமிழ்நாட்டின் மிகச் சிறந்த முதன்மையான பழமை வாய்ந்த வாத்தியங்களில், நெடுந்தொலைவிலும் கேட்கக்கூடிய நாதசுரம் என்னும் வாத்தியம் சிறப்பு மிக்கதாகும். கோயிற் சடங்குகளில் மட்டுமின்றி, எல்லா நல்ல மங்கள நிகழ்ச்சிகளிலுமே, நாதசுர இசை இன்றியமையாத ஒரு சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது.

திருமயிலை அறுபத்து மூவர் விழா :

சென்னையில், திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலில், ஆண்டுதோறும் நிகழும் விழாக்களில், முதன்மையான ஒரு விழா, சிவனடியார்களாகிய அறுபத்து மூவர் திருவிழாவாகும். இவர்கள் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிற்கும், 9ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தினராவர். நாயன்மார்கள் எனப்படும் அறுபத்துமூவர், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், பலவேறு குலத்தினராய், பலவேறு நிலையினராய்த் தோன்றி வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள். அவர்கள், நம் பண்டைத் தமிழகத்துச் சான்றோர்கள், நற்பண்புகளுக்கெல்லாம் உறைவிடமானவர்கள். உயரிய கொள்கைகள் உடையவர்கள். மிகச் சிறந்த குறிக்கோள்களைக் கடைப்பிடித்தவர்கள். இறைவனிடத்திலும், மன்னுயிர்களிடத்திலும், பேரன்பு செலுத்தி வாழ்ந்தவர்கள். கொண்ட கொள்கையில் உறுதி தளராத உள்ளம் படைத்தவர்கள். உயிர் துறக்க நேர்ந்தாலும், கொண்ட கொள்கையினையும், தொண்டினையும் துறக்காதவர்கள். ஆண்மையும் அருளும் மிக்கவர்கள். பூசும் நீறு போல் உள்ளமும் புனிதம் வாய்ந்தவர்கள். புகழ்மிக்க இப்பெரு விழாவில், இவ் அறுபத்து மூவர்களின் திருவுருவங்கள், பல்லக்கில் வைத்துத் திருவீதிஉலாச் செய்யப்பெறுகின்றன. கபாலீசுவரரும் கற்பகாம்பாளும் உடன் வருகின்றனர். இவ்அறுபத்துமூவர் விழா, சென்னைத் திருமயிலையில் நிகழும் மாபெரும் சிறப்பு விழாவாகும்.

பல்லக்குகள், காவடிகள் :

பெரும்பாலும் கோயில் விழாக்களில், வீதியுலா நிகழ்ச்சிகளில், கோயில் யானையும் கலந்துகொள்ளும். கோயில் விழாக்களில், பூவினால்புனையப்பெறும்பூப்பல்லக்குகளும் உண்டு. பழநியில், மயில் இறகினால் அலங்கரிக்கப்பட்ட காவடி என்னும் பல்லக்குகளில், பாற்குடங்களை அடியவர்கள் எடுத்துவந்து, முருகனுக்குக் காணிக்கை செலுத்துவர். பழநியில் பக்தர்கள் பாற்காவடிகளை, ஏராளமாகக்கொண்டு வந்து செலுத்துகின்றனர். சென்னைக்கு அருகில் உள்ள திருத்தணிகை முருகன் கோயிலில், பல லட்சக்கணக்கான மக்கள் ஆடிக்கிருத்

திகை, தைக்கிருத்திகை, ஆண்டுப்பிறப்பு முதலிய நாள்களில் பெருந்திரளாகக் கூடுவர். அவர்கள் பூக்காவடிகள் எடுத்து வருவர். பக்திப் பரவசத்தின் மேலீட்டால் மக்களிடையில் ஆடலும் பாடலும் இவ்விழாக்களில் மிகப்பெரிதும் சிறப்பாக நிகழும்.

தெப்பவிழா :

திருவாரூரிலுள்ள கமலாலயம் என்னும் திருக்குளம், தமிழகத்திலேயே மிகவும் பெரியது. அது 32 ஏக்கர் பரப்புடையது. இங்கு நிகழும் தெப்போற்சவம், பெரும் புகழ் வாய்ந்ததாகும். கோயிலின் ஒரு மண்டபம் போலக் கைபுனைந்து இயற்றிய கவின்மிகு தெப்பம் ஒன்றில், கடவுளின் திருவுருவத்தை எழுந்தருள்வித்து, இன்னிசை இயங்கள் முழங்க, திருக்குளத்தைச் சுற்றிவரச் செய்தலே, தெப்போற்சவம் ஆகும். தமிழ்நாட்டின் பல திருக்கோயில்களில் தெப்போற்சவம் தைப்பூசத்தினை ஒட்டி நிகழும்.

தேர்விழா :

சில கோயில்களில் தங்கப் பல்லக்குகளும், வெள்ளித் தேர்களும், மிக விரிவான நுண்ணிய வேலைப்பாடு அமைந்த தங்கத் தேர்களும்கூட உள்ளன. கோயில்களில் ஆண்டுதோறும் நிகழும் திருவிழாக்களில், தேர்த் திருவிழாவும் ஒன்று. அது மக்களிடையே பெரும் மகிழ்ச்சியை விளைவிக்கும் பெரு நிகழ்ச்சியாகும். கோயில்களில், பலவகை அளவுகளில் சிறிய அல்லது பெரிய தேர்கள் உள்ளன. இத் தேர்த் திருவிழாவானது, பக்தர்கள் எத்தகைய சாதி குலம் நிலை மதிப்பு முதலிய வேறுபாடுகள் எதுவுமின்றி, திரளாகக் கூடித் தேர் இழுக்க முற்படுதலாகும். இங்ஙனம் இறைவனின் தேரை இழுப்பது, ஒரு பெரிய புனிதமான புண்ணியச் செயலாகக் கருதப்படுகின்றது.

மதுரை மீனாட்சியம்மை திருமண விழா :

மதுரைக் கோயிலில், அருள்மிகு மீனாட்சியம்மை சொக்கநாதரை மணந்து கொள்ளும் திருமணக்காட்சி, கம்பத்தடி மண்டபத்தில், சிறந்த அழகிய சிற்பமாக வடிக்கப்பெற்றுள்ளது. இச்சிற்பம், அனைவரும் கண்டு களிக்கத் தக்கது. ஒரு சிறந்த கன்னிப்பெண் திருமணம் செய்து கொள்ளும் மணமகள் ஆகும்போது, அவளது அழகிய முகத்தில் தோன்றும் மகிழ்ச்சி மிக்க பெருமிதத்துடன், ஒரு சிறிது நாண உணர்வும் கலந்து பொலிந்து விளங்கும் திறனை, இவ்வழகிய சிற்பம் மிகமிக அற்புதமாகச் செவ்விதின் வடித்துக் காட்டுகின்றது. சிற்பக்கலையில், இதனை ஒரு சிறந்த எழில் மிக்க அரும்பெரும் காவியம் எனலாம்.

மதுரைக் கோயிலில் ஆண்டுதோறும் மீனாட்சியம்மை திருமணத் திருவிழா, இந்துத் திருமணங்களுக்குரிய எல்லாச் சடங்குகளுடனும், சிறப்புற நிகழ்த்தப் படுகின்றது. மீனாட்சியம்மை ஆகிய திருமணப்பெண், மிகச்சிறந்த ஆடைஅணிகளால், ஈடும் எடுப்பும் அற்றமுறையில் ஒப்பனை செய்யப்பெற்று, பூக்களால் புனையப் பெற்ற ஊஞ்சலில் அமர்த்தப்படுகின்றாள். அருச்சகர்கள் திருமணச் சடங்குகள் புரிகின்றனர். தொன்றுதொட்டு வரும் மரபு நெறியின்படி, சொக்கநாதப் பெருமான் மீனாட்சியம்மைக்கு மந்திர மறைகள் முழங்கவும், இன்னியங்கள் இயம்பவும், தாலி என்னும் மங்கல நாணை அணிவிக்கின்றார். இத்திருமணக் காட்சி, பக்தர்களின் உள்ளங்களையெல்லாம் பரவசப்படுத்தி மகிழ்விக்கின்ற, கண்கொள்ளாக் கவின்மிகு பெருங்காட்சியாகும்.

கோயில்களே சமுதாயநல நிலையங்கள் :

இந்து சமயக் கோயில்கள், வானளாவி உயர்ந்த கோபுரங்களுடனும், விரிந்து பரந்த மண்டபங்களுடனும், நீர் நிறைந்து பொலியும் திருக்குளங்களுடனும், தொன்னெடுங் காலமாக, நிகர்அற்ற சமுதாயநலப் பெருநிலையங்களாக விளங்கி வருகின்றன. வழிபாட்டிற்காகவும், சமுதாய நிகழ்ச்சிகளுக்காகவும், ஆட்சிமுறைச் செயல்களுக்காகவும், மக்கள் திரண்டு கூடுகின்ற ஒரு பொது இடமாகக் கோயில்கள், தொன்றுதொட்டுப் பயன்பட்டு வருகின்றன.

உத்தரமேரூர் வைகுண்டப் பெருமாள் கோயிலின் மேற்குச் சுவரிலுள்ள பராந்தகச் சோழனின் கல்வெட்டுக்கள் இரண்டு, இந்நாளிற் போல முன்னாளில் நிலவிய ஊராட்சி முறை, ஊராட்சி வாரியங்கள், ஊராட்சித் தேர்தல்முறை, உறுப்பினர் ஆதற்குரிய தகுதிகள், உறுப்பினராக விரும்புவோர்பால் இருக்கக்கூடாத குற்றங்கள், என்பனவற்றைப் பற்றிய செய்திகளையெல்லாம் தெளிவுற விளக்குதல் காணலாம்.

கோயில்களில் சமுதாயப் பணிகள் :

(1) மழையின்றி வறட்சி ஏற்பட்டுப் பஞ்சம் நேர்ந்து மக்கள் வறுமையுற்று வருந்தும் காலங்களில் கோயில்கள் மக்களுக்கு உணவு தானியங்களை வழங்கின. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருவீழிமிழலையில்,

''அல்லார் கண்டத்து அண்டர்பிரான்
அருளால் பெற்ற படிக்காசு
பல்லாறு சென்ற வளம்பெருக
பரமன் அடியார் ஆனார்கள்,
எல்லாம் எய்தி உண்கஎன
இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லால் சாற்றிச் சோறிட்டார்
துயர்கூர் வறுமை தொலைத்திட்டார்''

என்று பெரிய புராணம் கூறுதல் காணலாம்.

(2) கோயில்கள், வறுமையில் வாழும் ஏழை எளிய மக்களுக்குக் கடனாகப் பணம் கொடுத்தும் உதவிகள் பல புரிந்தன. ஆலங்குடிக் கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டு, கி.பி. 1152-ஆம் ஆண்டில் சோழநாட்டில் பஞ்சம் ஏற்பட்டபோது, கோயில் பண்டாரத்திலிருந்து

1011 கழஞ்சு நிறையுள்ள பொன் நகைகளையும், 464 பலம் நிறையுள்ள வெள்ளிப் பொருள்களையும் கடனாகக் கொடுத்து உதவி, மக்களைப் பஞ்சத்திலிருந்து காப்பாற்றிய செய்தியினைக் கூறுகின்றது.

(3) கண்ணிழந்த குருடர்கள், கைகால்களை இழந்த முடவர்கள், மற்றும் பலவகைகளில் உறுப்புக்குறைந்தோர் ஆகியவர்களும் கூட, கோயில்களால் உதவி செய்து பாதுகாக்கப் பெற்றுவந்தனர். விழுப்புரத்திற்கு அருகில் உள்ள திருவாமாத்தூர்க் கோயிலில், 18 குருடர்கள் உண்டியும் உறையுளும் உதவிப், பாதுகாக்கப்பட்டனர். கோயில்களில் திருவிளக்கிடுவோர், மாலைகட்டுவோர், பரிசாரகம் புரிவோர், மெய்காவல் செய்வோர், திருப்பதிகம் ஓதுவோர், கணக்கெழுதுவோர், சுண்ணம் தீட்டுவோர், வண்ணம் புனைவோர், தச்சர், தட்டார், கன்னார், குயவர், தையற்காரர், நாவிதர், வண்ணார் முதலிய தொழிலாளர்கள் பற்பலர் நியமிக்கப் பெற்றிருந்தனர். இவர்களுக்குப் பரம்பரையாக வேலையும் மானியங்களும் கோயில்களில் அளிக்கப்பெற்றிருந்தன. இம்முறையில் கோயில்கள் தற்காலத்து ''எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்'' போல, வேலை வாய்ப்பகங்களாகவும் பெருந்தொண்டாற்றி வந்தன.

(4) தற்காலத்திலும், தமிழகக் கோயில்கள் சமுதாயநலப் பொதுப்பணிகள் பலப்பல புரிந்து வருகின்றன. சில கோயில்களில் வேதாகம பாடசாலைகளும், தேவார-திவ்வியப்பிரபந்தப் பாடசாலைகளும், நடத்தப்பெறுகின்றன. பழநியில் நாதசுரக் கல்லூரி ஒன்று நடைபெற்று வருகின்றது. பற்பல தொடக்கப்பள்ளிகளும், உயர்நிலைப்பள்ளிகளும், கல்லூரிகளும், தமிழகக் கோயில்களின் மூலம் நடைபெற்று வருகின்றன. கருணை இல்லங்களும், முதியோர் இல்லங்களும், செவிடர் ஊமையர் பள்ளிகளும், கோயில்களின் சார்பில் இயங்கி வருகின்றன. ஏழை எளிய மக்களின் நலங்கருதிக் கோயில்களிற் பலப்பல மருத்துவ மனைகளும், நடத்தப்பெற்று வருகின்றன, இவைகளால் பொதுமக்களுக்கு விளைந்துவரும் நலங்களுக்கு அளவேயில்லை.

முடிவுரை :

சிற்பங்கள், வண்ணஓவியங்கள், தெய்வத் திருவுருவங்கள், திருவிழாக்கள் முதலியன வற்றைத் தம் உறுப்பாகவும், சிறப்பாகவும் கொண்டுள்ள தமிழகக் கோயில்கள், எத்தனையோ பல நூற்றாண்டுகளாகத்தொடர்ந்து மக்கட் பணிகள் புரிந்து வளர்த்து வருகின்றன. சுருக்கமாகச் சொல்லவேண்டுமாயின், கோயில்கள் தமிழர் கலை நாகரிகப் பண்பாடுகளின் நிலைக்களமாகத் திகழ்ந்தோங்கி விளங்கி வருகின்றன எனலாம்.

இந்த இந்துசமயத் தமிழகப் பண்பாட்டு நெறியானது, எத்தனையோ பல அயலவர் தாக்குதல்களால் அவ்வப்போது பெரிதும் இடர்ப்பட நேர்ந்த போதிலும், அவற்றால் சோர்ந்து தளர்ந்து குன்றிவிடாமல், பிறசமயங்களிற் கண்ட நலன்களையும் ஏற்றுத் தழுவிக்கொண்டு, வளர்ச்சியுற்று வருகின்றது. இது ஒரு ஆற்றல்மிக்க உயிர்ப்புள்ள பாரம்பரிய நெறியாகும். இச்சிறந்த பாரம்பரிய நெறியானது, சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும், நிகழ்காலத்தின் வளமும், எதிர்காலத்தின் சிறப்பும் பெற்று வளர்ந்தோங்கி விளங்கும் என்பது திண்ணம்.

—தமிழாக்கம், ஆசிரியர்.

நூல் அறிமுகம்

வெள்ளிவிழா மலர் : அரியலூர் மணிவாசக மன்றம், தமிழகத்தில் சமயமும் தமிழும் வளர்க்கும் சிறந்த மன்றங்கள் பலவற்றில், தலைசிறந்த ஒன்றாகும்; தொடர்ந்து பல ஆண்டுகளாக இம்மன்றம் ஆற்றிவரும் அரும்பெரும் தொண்டுகள், அறிஞர்கள் அனைவராலும் வியந்து பாராட்டப் பெற்றன. தமிழகத்திலுள்ள பேரறிஞர்கள், சமயப் பெருஞ்சான்றோர்கள் ஆகிய அனைவரும், இம் மணிவாசக மன்றத்துடன் தொடர்பு கொண்டவர்களாவர். செந்தமிழ்ச் சைவப் பேரறிஞராக விளங்கியிருந்த, ''பெருஞ்சொல் விளக்கனார்'' திரு. அ. மு. சரவண முதலியார் அவர்களால், இம்மன்றம் தோற்றுவிக்கப் பெற்ற சிறப்புடையது. மன்றத்தின் சிறப்பினை இவ்வெள்ளி விழா மலர், தெள்ளிதின் விளக்குகின்றது. இம்மலரில் ஆசியுரைகள் 19, வாழ்த்துக்கள் 37, கட்டுரைகள் 44, கவிதைகள் 7, உரையாடல் 1 இடம் பெற்றுள்ளன. இம்மலரில் மொத்தம் 91 பெருமக்கள் பற்பல அரும் பொருள்களைப் பற்றி ஆய்வுரை வழங்கியுள்ளனர். தமிழ் மணமும், சைவமணமும், புலமை மணமும், ஆராய்ச்சி மணமும் வீசி, இவ்வெள்ளிவிழா மலர் கவின்மிக்குத் திகழ்கின்றது. நடராசர், தட்சிணாமூர்த்தி, மாணிக்க வாசகர், நால்வர் படங்களுடன், தமிழகத்திலுள்ள திருமடங்களின் தலைவர்கள் படங்கள் (13), மற்றும் 50-க்கு மேற்பட்ட தமிழறிஞர்களின் படங்கள், ஆகியவை இம்மலரை அணி செய்கின்றன. சிறந்த அரிய ஆராய்ச்சிமிக்க கட்டுரைகள் கொண்ட, ஓர் அரிய இனிய நல்ல நறுமலராக, அரியலூர் மணிவாசக மன்ற வெள்ளிவிழா மலர், விளங்குகிறது. சைவத் தமிழன்பர்களுக்கு, இம்மலர் ஒரு பெருங் கருத்துக் கருவூலம், அறிவுக் களஞ்சியம் எனலாம். அன்பர்கள் இதனை வாங்கிப் பயன்பெறுவார்களாக! கிடைக்குமிடம் : ''மணிவாசக மன்றம், அரியலூர்-621704—திருச்சி மாவட்டம்''.

—ஆசிரியர்.

அத்வைத தத்துவம்

''வேதாந்த வித்தகர்''

டாக்டர் திரு டி எம். பி. மகாதேவன், MA., .Ph.D.

அத்வைதம் :

அத்வைதம் என்பது வேதாந்த மதங்களுள் ஒன்று. ''பிரமம் இரண்டற்ற மூலப் பொருள்; பலவாகக் காணப்படும் உலகம் பொய்த்தோற்றம்; சீவன் பிரமத்தைவிட வேறன்று'' என்று அத்வைதம் கூறுகிறது. அத்வைதம் என்ற சொல்லுக்கு இரண்டற்றது என்பது பொருள். ஆசாரிய சங்கரர் இம்மதத்தின் கொள்கைகளைத் தாம் வரைந்த நூல்களில் தெளிவாக விளக்கியுள்ளார். இம்மதம் அவர் இயற்றியதன்று. உபநிடதங்களில் பல விடங்களில் அத்வைதம் போதிக்கப்படுகின்றது. முக்கியமாக யாக்ஞவல்கியரின் உபதேசங்களில் இதைக் காணலாம். சங்கரருக்கு முன்வந்த கௌடபாதர் அத்வைதக் கொள்கைகளை யுக்திகளைக் கொண்டு நிலைக்கச் செய்தார்.

நூல்கள் :

ஏனைய வேதாந்த மதங்களைப் போல அத்வைதமும், மூன்று பிரஸ்தானங்களை மூல நூல்களாகக் கருதுகின்றது. அவையாவன: உபநிடதங்கள், பிரம சூத்திரம், பகவத்கீதை என்பன. கௌடபாதர் மாண்டூக்கிய உபநிடதத்திற்கு வியாக்கியானமாகக் காரிகையொன்றை இயற்றியுள்ளார். சங்கரர் முக்கியமான உபநிடதங்களுக்கும், மற்ற இரண்டு பிரஸ்தானங்களுக்கும் பேருரை எழுதியுள்ளார். அத்வைதத்தைச் சுருக்கமாகவம் தெளிவாகவும் விளக்கி, அவர் வரைந்துள்ள விவேக சூடாமணி, உபதேச ஸாகஸ்ரி முதலிய தனி நூல்களும் உண்டு. பிரகதாரணியகம், தைத்திரீயம் முதலிய உடநிடதங்களுக்குச் சங்கரர் எழுதிய உரைகளுக்கு, அவருடைய சீடரான சுரேசுவரர் வார்த்திகங்கள் செய்துள்ளார். நைஷ்கர்ம்ய சித்தி என்பது சுரேசுவரருடைய மற்றொரு நூல். சங்கரரின் இன்னொரு சீடரான பதுமபாதர் தம் குருவின் சூத்திர பாடியத்திற்கு ஒரு வியாக்கியானம் எழுதினார். அவர் எழுதியதில் முதல் ஐந்து பாதங்களுக்குள்ள வியாக்கியானமே அழியாமல் வந்திருக்கிறது. ஆகையால் அதற்குப் பஞ்சபாதிகை என்ற பெயர் ஏற்பட்டது. இதற்குப் பிரகாசாத்மன் என்பவர் பஞ்சபாதிகா விவரணம் என்ற ஒருரை வரைந்துள்ளார். இதை அடிப்படையாகக் கொண்டு விவரணம் என்ற மரபு அத்வைதத்தில் தோன்றியது.

விவரணக் கொள்கைகளைத் திரட்டி விவரணப் பிரமேய சங்கிரகம் என்ற நூலைப் பாரதீ தீர்த்த வித்யாரணியர் இயற்றினார். இவருடையதே பஞ்சதசீ என்னும் காவியமும். அத்வைதத்தில் சங்கரருக்குப் பின்வந்த மற்றொரு மரபு பாமதீ என்பது. இதற்கு மூலநூல் வாஸ்பதி மிசிரர், சங்கரருடைய சூத்திர பாஷியத்திற்கு எழுதிய பாமதீ என்னும் வியாக்கியானம். அமலானந்தர் எழுதிய கல்பதரு பாமதீயின் விளக்கம். இதற்கு உரை, அப்பைய தீட்சிதரின் கல்பதருபரிமளம் என்பது. அத்வைத மதத்திலுள்ள பேதங்களை வகுத்துச் சித்தாந்த லேச சங்கிரகம் என்னும் நூலை அப்பைய தீட்சிதர் இயற்றினார். ஏனைய அத்வைத நூல்களின் முக்கியமானசில நூல்கள்; சர்வஞ்ஞாத்ம முனியின் சம்க்ஷேப சாரீரகம் ;அர்ஷரின் கண்டன கண்டகாத்யம்; சித்சுகரின் தத்வப்பிரதீபிகை; மதுசூதன சரசுவதியின் அத்வைத சித்தி; தர்மராஜரின் வேதாந்த பரிபாஷை; சதானந்தரின் வேதாந்த சாரம்! சமஸ்கிருதத்தைத் தவிர மற்றமொழிகளிலும் வேதாந்த நூல்கள் உண்டு. இந்தியில் நிச்சலதாசர் எழுதிய விசார சாகரம், விருத்திப் பிரபாகரம் என்னும் நூல்களும், தமிழில் தாண்டவராய சுவாமிகள் எழுதிய கைவல்லிய நவநீதம் என்னும் நூலும், மக்களுக்கு மிகவும் உபயோகமுள்ளவை.

ஆறு அளவைகள் :

அத்வைத மதத்தில் ஆறு அளவைகள் அல்லது பிரமாணங்கள் ஒப்புக் கொள்ளப்படுகின்றன. அவையாவன: பிரத்தியட்சம், அனுமானம், உபமானம். அர்த்தாபக்தி, அனுபலப்தி, சப்தம் என்பன. (1) பிரத்தியட்சப் பிரமாணம் என்பது, சாதாரணமாக இந்திரியங்களுக்கும் விஷயங்களுக்கும் உள்ள சேர்க்கை. இதனால் ஏற்படும் ஞானம்பிரத்தியட்சஞானம். உதாரணமாகக் கண்களுக்கும் ஒரு விஷயத்தின் உருவத்திற்கும் சம்பந்தம் உண்டாகும்போது காட்சி யேற்படுகிறது. வெளியேயுள்ள பொருள்களை யறிவதற்குத் இந்திரியங்களின் உதவி வேண்டும். நம் மனத்திலுள்ளவற்றை உணர்வதற்கு மனமேதான் காரணம். இதற்கு மானதப் பிரத்தியட்சம் என்று பெயர்.

2. அனுமானம் என்பது ஒரு குறியின் ஞானத்தின் வாயிலாக, அது எதைக் குறிக்கின்

றதோ அதையறிவது. புகையைக் கண்டு, நெருப்பை அனுமானிக்கிறோம். குறிக்கு ஏது வென்றும், குறிக்கப்படும் பொருளுக்குச் சாத்தியம் என்றும் பெயர். இவ்விரண்டுக்கும் உள்ள சம்பந்தம் வியாப்தி. விரிவாகவுரைக்கப்படும் அனுமானத்திற்கு ஐந்து அவயவங்கள் உள்ளன. உதாரணமாக: குன்றில் நெருப்பு உள்ளது. (பிரதிஞ்ஞை); அங்கே புகை யிருப்பதால் (ஏது); எங்கெங்குப் புகையுளதோ அங்கங்கு நெருப்புளது, அடுக்களையிலுள்ளது போல (உதாரணம்); நெருப்பால் வியாபிக்கப்பட்ட புகை குன்றில் உளது (உபநயம்); ஆகையால் குன்றில் நெருப்புளது (நிகமனம்).

3. உபமானம் என்பது இரண்டு பொருள்களை ஒப்பிட்டுப் பார்ப்பது. இதனால் ஏற்படும் ஞானம் உபமிதி. கவயம் என்ற விலங்கு பசுவைப் போன்றது என்று ஒருவன் கேள்வியினால் தெரிந்து கொள்கிறான். பின்னர் வனத்திற்குச் சென்று கவயத்தைப் பார்க்கிறான். அப்பொழுது, தான் காணும் விலங்கைப் போலுள்ளது பசு என்று உணர்கிறான்; இது உபமிதி ஞானம்.

4. அர்த்தாபத்தி என்பது, ஒரு விஷயம் நேரிடையாக விளங்கவில்லை யானால், அதை விளக்கக்கூடிய ஒன்றைக் கற்பிப்பது. ஒருவன் பகற்பொழுதிலே சாப்பிடுவதில்லை; ஆனால் இளைக்காமல் இருக்கிறான். இவ்விரண்டையும் பொருத்துவதற்காக ''அவன் இரவில் உண்கின்றான்'' என்று ஊகிக்கின்றோம்.

5. அனுபலப்தி என்பது ஒரு பொருளின் இன்மையை உணர்வது. ''தரைமீது குடம் இல்லை'' என்று குடத்தின் இன்மையை அனுபலப்தி மூலம் அறிகின்றோம்.

6. சப்தம் என்பது கேள்வி ஞானம். பதங்களின் சேர்க்கைகளாகிய வாக்கியங்களினின்று அறிவு ஏற்படுகின்றது. சப்தப் பிரமாணம் மற்றப் பிரமாணங்களை விட முக்கியமானது; ஏனெனில், ஆத்ம ஞானம் உபநிடத வாக்கியங்களிலிருந்துதான் ஏற்படவேண்டும். மீமாம்சகர்கள் வேதங்களின் தாற்பரியம் கர்மம் என்று வாதிக்கின்றார்கள். ஏனென்றால், அவர்களுடைய கொள்கைப்படி செயலையொட்டியே ஒரு வாக்கியத்திலுள்ள பதங்கள் பொருளைத் தெளிவுறுத்துகின்றன. வேதாந்திகளோ என்றால், செயலோடு சம்பந்தப்படாத ஒரு பொருளையும் வாக்கியத்தினின்று அறியலாம் என்கிறார்கள். மிகவும் ஒளி பெற்றவன் சந்திரன் என்றபோது, சந்திரனின் சொரூபத்தை உணர்கிறோம்; இங்குச் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. உபநிடதங்கள், ஆத்ம பிரம்ம வஸ்துவை இவ்வாறே உணர்த்துகின்றன.

அறிவது என்ற வியவகாரத்தில் நான்கு கூறுகள் உள்ளன. (1) அறிபவன், (2) அறியப்படும்பொருள், (3) அறியும் வழி (4) அறிவு. இந்நான்கும் ஒரே ஆத்ம வஸ்துவின் பேதங்கள் என்பது அத்வைதத்தின் கொள்கை. ஆத்ம சைதன்னியம் அந்தக்கரணத்தில் பிரதிபலித்து, அறிபவன் (பிரமாதா) என்ற பெயரை அடைகின்றது. அறியப்படும் பொருளிலும், அதே சைதன்னியம் உள்ளது (விஷயம்). அஞ்ஞானத்தால் இவ்விரண்டும் வேறாகக் காணப்படுகின்றன. பிரமாண வியவகாரத்தால், இவ்விரண்டிற்கும் சம்பந்தம் ஏற்படுகின்றது. இதை ஏற்படுத்தும் கருவி விருத்தியென்னும் மனத்தின் பரிணாமம். விருத்தியிலும் (பிரமாணம்) சைதன்னியம் விளங்குகின்றது. விருத்தியின் வியாபாரத்தினால் ஞானம் (பிரமிதி) உதிக்கின்றது. இதுவும் ஆத்ம சைதன்னியமே. இவ்வாறு பிரமாண வியவகாரத்தை ஆராய்ந்தாலும்கூட ''ஆத்மாவொன்றே உளது; அதன் சொரூபம் ஞானம்'' என்பது விளங்கும்.

ஞானமும் அஞ்ஞானமும் :

இனி, உண்மை எது, பொய் எது என்று விசாரிப்போம். உண்மை என்பது ஞானத்தின் தன்மை. ஒரு ஞானம் பொய்யாவது, ஞானத்தின் வெளியேயுள்ள சில சந்தர்ப்பங்களினால் ஆகும். இதை சம்ஸ்கிருதத்தில் ''ப்ராமாண்யம் ஸ்வத: அப்ராமாண்யம் பரத'' என்பார்கள். பொய்ஞ்ஞானம் என்பதே அஞ்ஞானம். முத்துச்சிப்பியை வெள்ளியென்று மதிப்பது அஞ்ஞானத்தால். அஞ்ஞானத்தின் விஷயத்தில் சொரூபத்தைப் பற்றிய விவாதம் இந்திய தரிசனங்களிடையே யுண்டு. (1) பௌத்த மதத்தின் ஒரு சாராரான சூனியவாதிகள், இல்லாதது தோன்றுகின்றது என்று கூறுகிறார்கள் (அஸத்க்யாதி). (2) பௌத்த மதத்தின் மற்றொரு சாராரான விஞ்ஞான வாதிகள், உள்ளே விஞ்ஞான ரூபமாயுள்ள பொருள் தவறாக வெளியே தோன்றுகின்றது. என்கிறார்கள் (ஆத்மக்யாதி) (3) மீமாம்சை மதத்தின் ஒரு சாராரான பிரபாகரர்களும், சாங்கியர்களும் இவ்வாறு உரைக்கின்றனர். ''இது வெள்ளி'' என்று சொல்லும்போது, இது என்ற ஞானமும், வெள்ளியென்ற ஞானமும் தனித்தனியே உண்மைதான் இது என்பதை நேரிடையே பார்க்கிறோம். முன்பார்த்த வெள்ளியை நினைவு கூர்கின்றோம் (ஸ்மரிக்கிறோம்.) தவறாக இவ்விரண்டையும் சேர்த்து ''இது வெள்ளி'' என்று நினைக்கிறோம். இதுவே அஞ்ஞானம் (அக்யாதி). (4) மீமாம்சை மதத்தின் மற்றொரு சாராரான பாட்டர்களும் நையாயிகர்களும் பொய்யென்பது ஒன்றை மற்றொன்றாக மதிப்பது என்று கருதுகிறார்கள். கடையிலுள்ள வெள்ளியை இங்கே காண்கிறோம். இதற்குக் காரணம் முத்துச் சிப்பிக்கும், வெள்ளிக்கும் உள்ள ஒப்பு, சாதிருசியம் (அன்யதாக்யாதி). (5) அத்வைதிகள் இவ்வாறு பகர்கின்றனர்; பொய்யாகத் தோன்றும் வெள்ளி உள்ளதும் அன்று, இல்லாததும் அன்று. அது தோன்றுவதால், 'அது இல்லை' என்று சொல்லிவிடலாகாது. முத்துச் சிப்பியின் உண்மை ஞானம் உதயமாகும்போது, வெள்ளி மறைந்துவிடுவதால் அதை உள்ளது என்றும் கூறமுடியாது. ஆகையால் அது அநிர்வசனீயம் (விவரிக்க முடியாதது); அவித்தையினால் உற்பத்தி செய்யப்பட்டது; ஞானத்தினால் அழிவையடைவது (அநிர்வசனீயக்யாதி). க்யாதி என்பது மெய் பொய்யைப் பற்றிய வாதம்.

—தொடரும்

பெரியாழ்வார் திருவுள்ளம்

''முதுபெரும்புலவர்''
(திரு. ஏ. ஜே. இராமசாமி முதலியார்)

முன்னுரை:

மங்கல குண வடிவழகனான இறைவன், நித்தியசூரிகளும் அடியார்களும் பேரின்பம் நுகர்ந்திருக்க, அவர்களைப்போல் இவ்வுலகிலுள்ள இல்லறத்தாரும் அந்தமில் பேரின்பம் பெறக்கூடியவர்களாக இருந்தும், சிறகிழந்த பறவைகளைப் போல இருக்கின்ற நிலைமையையும், தன்னை வணங்க வைத்த கரணங்கள் என்பதையும் உணராமல் ,பழத்தை அறுக்கும் கத்தியைக்கொண்டு பசுவின் வாலை அறுப்பாரைப் போலப் பிறவியென்னுங் பெருங்கடலின் கரைகாணாது தடுமாறுவதையுங் கண்டு, அவர்களையெல்லாம் ஆட்கொள்ள வேண்டிப் பகவான்தானே இராமகிருஷ்ணாதி அவதாரம் எடுத்துப் படமுடியாத துன்பங்களை எல்லாம் அனுபவித்துத் திருத்தப் பார்த்தவிடத்தும், அவர்கள் நல்வழியில் வாராமையை எண்ணிப், பார்வை மானைக் கொண்டு கானக மானைப் பிடிப்பாரைப்போல, ஆழ்வார்களை இப்பாரில் மக்களாகப் பிறக்க வைத்தார். திருமாலின் ஆணைப்படி, மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களும் இங்குத் தோன்றினார்கள் என்று, பெரியவாச்சான்பிள்ளை என்னும் நாலாயிரத்திவ்வியப் பிரபந்த உரையாசிரியர் கூறுகிறார்.

இங்ஙனம் போந்த ஆழ்வார்கள் பன்னிருவர்களுள், திருமாலின் திருமேனி அழகில் ஈடுபட்டு, நீர்ப்பண்டமாக மனமுருகித் தடுமாறிப் பல்லாண்டு பாடியருளிய, விஷ்ணுசித்தர் என்னும் பெரியாழ்வார் திருவுள்ளம் எத்தகையது என்பதைப் பற்றிச் சிறிது விளக்க விழைவதே இக்கட்டுரையின் கருத்தாம்.

பெரியாழ்வார் காலம்:

விஷ்ணுசித்தர் தாம் அருளியுள்ள பிரபந்தத்தில் அபிமானதுங்கன், நெடுமாறன் என்னும் இருவர் பெயர்களைக் குறிக்கின்றார். அவர், அபிமான துங்கனைப்பற்றி, ''அல்வழக்கொன்றுமில்லா அணிகோட்டியர் கோனபிமானதுங்கன்'' என்றும், ''நளிர்ந்த சீலன் நயா சலன் அபிமானதுங்கனை நாடொறும்'' என்றும் கூறியுள்ளார். நெடுமாறனைப்பற்றி, ''கொன்னவில் கூர்வேற் கோன்நெடு மாறன் தென்கூடற்கோன்'' என்றும், ''பருப்பதத்திற் கயல்பொறித்த பாண்டியர் குலபதிபோல்'' என்றுங் கூறியுள்ளார்.

இதனில் நெடுஞ்சடையன் என்பவனை, நெடுமாறன் என்று கொள்வதற்கு ஆதாரங்கள் உள்ளன. மேற்கூறிய இரண்டு சொற்களும் நெடுஞ்சடையனை எவ்வாறு குறிக்குமெனின்? பாண்டிய அரசர் அனைவரும் சிவபக்தர்களாகவே இருந்திருக்கின்றனர். ஆனால் நெடுஞ்சடையன் மட்டுந்தான் வைணவனாகத் தோன்றுகின்றான். இதனைச் சாசனங்களாலும் அறியலாம். ''குரு சரிதங் கொண்டாடி'' என்று ஒரு சாசனத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றது. குரு என்பது பெரியாழ்வாரைக் குறிக்குமென்று சில ஆராய்ச்சியாளர் கூறுகிறார்கள்.

''பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று'' அருளிச்செய்த செய்யுளாலும், இது நன்கு விளங்குகிறது. பட்டர்பிரான் என்பது, ஈண்டுப் பெரியாழ்வாரைக் குறிக்கும். நெடுஞ்சடையன் முதலில் சைவனாகத்தான் இருந்தான் என்பது, வேள்விக்குடி சாசனத்தால் புலனாம். கி.பி.769, 770 ஆனைமலைக் கல்வெட்டுக் காலத்தில், பாண்டிய அரசன் பரம வைணவன் ஆயினான்.

நெடுஞ்சடையன் பெரியாழ்வாரை ஞானாசிரியராகக் கொண்டது, வேள்விக்குடிச் சாசனத்திற்குப் பின்னும், ஆனைமலைச் சாசனத்திற்கு முன்னும் இருக்கவேண்டும். இவற்றால் பெரியாழ்வார் கி.பி. 769, 770க்கு முன்னரே இருந்தாரென்றறியலாம். மாறன் என்பதற்குப் பாண்டியன் என்னும் ஒரு பொருளும் உண்டு. நெடுமாறன் என்பது பெருமை பொருந்திய பாண்டியன் என்றாகும்.

பெயர்:

பட்டர்பிரான், விஷ்ணுசித்தன் என்னும் பெயர்கள் பெரியாழ்வாரைக் குறிப்பனவாம். ஒவ்வொரு பதிகத்தின் ஈற்றிலும் ''வில்லிபுத்தூர் விஷ்ணுசித்தன்'' என்று, அவரே தம் பெயரை அமைத்திருப்பதால், அஃது அவருடைய பெற்றோர்களால் அவருக்கு அமைக்கப் பெற்றிருக்க வேண்டும். அல்லது அவரே விரும்பி அமைத்துக் கொண்டிருக்கவேண்டும். பொதுவாக விஷ்ணுசித்தன் என்றுமட்டும் தம்பெயரைக் கூறிக்கொண்டதால், இவர் சாதிச் செருக்கற்றவர், தூய உள்ளம் படைத்தவர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாம்.

பெயர்க்காரணம்:

பெரியாழ்வார் என்னும் பெயர், அவருக்கு எவ்வாறு ஏற்பட்டது என்பதைப் பற்றி மணவாள மாமுனிகள் தாம் இயற்றியுள்ள உபதேச ரத்தினமாலையுள்,

''மங்களா சாசனத்தின் மற்றுமுள்ள ஆழ்வார்கள்
தங்களார் வந்தளவு தானன்றிப்—பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான்
பெரியாழ்வார் என்னும் பெயர்''

என்று சிறப்பித்தலால், இனிது விளங்கும். திருவில்லிப்புத்தூர் விஷ்ணுசித்தர் என்று அவரைக் கூறுவதால், அவர் ஊர் வில்லிப்புத்தூர் என்பது திண்ணம். அவருக்கும் மற்றை ஆழ்வார்களுக்கும் உள்ள வேற்றுமை: அவர் இறைவனுடைய மேன்மையையே தமக்குப் புருஷார்த்தமாக (முத்தியாக) நினைத்திருப்பார். மேலும் பகவானுக்கு என்ன தீங்கு வருமோ என்று வருந்தி, அதைப் போக்குவதில் மனம் வைப்பார். மற்ற ஆழ்வார்கள் தங்களுக்கு எல்லா நன்மைகளும், மேன்மையும் எம்பெருமானாலே உண்டாகவேண்டுமென்று நினைத்திருப்பார்கள். தங்கள் பயத்தை நீக்கிக்கொள்ள இறைவனையே வேண்டுவார்கள்.

திருப்பல்லாண்டு :

பெரியாழ்வார் பாடியுள்ள திருப்பல்லாண்டு, வடமொழி வேதங்களுக்கும் நம்மாழ்வார் அருளிய தமிழ்மறையாக விளங்கும் திருவாய்மொழிக்கும்கூட, மேலானதாகும். எங்ஙனமெனில், வேதங்களைச் சிலர்தான் கற்க முடியும். திருவாய்மொழி பலரும் படித்துக் கொள்ளக் கூடியது என்றாலும், அதுவும் அறிஞர்களுக்குத் தான் இயலும். ஆனால் திருப்பல்லாண்டை யாவரும் எளிதாகப் படித்துக் கொள்ளலாம். திருவாய்மொழியில் கூறப்பட்டுள்ள ''உணர்ந்துணர்ந்து'' ''முனியே நான்முகனே'' ''நீராய் நிலனாய்..'' என்னும் பாக்களோடு ஒற்றுமைப் படுத்தித் திருப்பல்லாண்டு பாடப் பெற்றுள்ளது. திருவாய்மொழிக்குப் பெருக்கமும் சுருக்கமுமின்றித் திருப்பல்லாண்டு அமைந்துள்ளது. இன்னது கூறிற்று என்று கருதுவதற்கியலாததாய் இருக்கும் பிரணவம் (ஓம்) போலன்றியும், எல்லா வேதங்களின் உட்பொருள்களையும் இது தன்பால் அடக்கிக்கொண்டு மேலான பகவத் தொண்டைப்பற்றிப் பன்னிரு பாக்களால் நன்கு விளக்குகின்றது. மேலும் வேதத்தையோதுவதற்கு முன்பும் பின்பும் ஓம் என்பது ஓதப்படுவதுபோலத், தமிழ் மறையாகிய நாலாயிரத் திவ்வியப்பிரபந்தங்கள் ஓதுவதற்கு முன்னும் பின்னும் திருப்பல்லாண்டு கூற வேண்டுமென்று, முதலாசான் நாதமுனிகள் அவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் சிறப்பு யாதெனில், ''பீதகஆடைப் பிரானார் பிரம குருவாகி நின்றுபோதில் கமலவன்நெஞ்சம் புகுந்து, பரமன் பாடுவித்துக் கொண்டான்'' என்று பெரியாழ்வாரே கூறுகிறார். பெரியாழ்வார் பிரபந்தம், மன இருளைக்கடியும் தீபம்; நெடும் பிறவி நஞ்சுக்கு நல்ல அமுதம், பரசமயப் பஞ்சுப்பொதிக்குத் தீப்பொறி. ஆதலால் இதனைப் படித்துப் பொருளறிந்து நல்லாற்றின் ஒழுகுவது சாலச் சிறந்ததாம். திருப்பல்லாண்டு பன்னிரண்டு பாக்களையுடையது. இதன் சிறப்பைப் பற்றி மணவாள மாமுனிகள், அறிவிப்பது இங்கு நோக்கத்தக்கதாகும்.

''கோதிலவாம் ஆழ்வார்கள் கூறு கலைக்கெல்லாம்
ஆதி திருப்பல்லாண் டானதுவும்-வேதத்துக்கு
ஓமென் பதுபோல உள்ளதுக்கெல்லாம்
சுருக்காய்த்
நான்மங் கலம்ஆத லால்''

திருப்பல்லாண்டு:

இராமபிரான் கானகம் ஏகியபோது தாயார்களும் இருடிகளும் மக்களும் சீதாபிராட்டியும் அவருடைய வடிவழகில் ஈடுபட்டு மங்களா சாசனம்(பல்லாண்டு)கூறியுள்ளார்கள் என்றும்; கண்ணபிரான் அவதரித்த காலத்திலும், வசுதேவரும் தேவகியும் கம்சன் பயத்தால் கண்ணனைப் பார்த்துச் சங்கு சக்கரங்களை மறைத்துக்கொள்ளும்படி வேண்டினார்கள் என்றும், நூல்களால் அறிகின்றோம். அதைப் போலப் பெரியாழ்வார் பக்திமேலீட்டால் பரமன் வடிவழகில் ஈடுபட்டுச் சூரிய சந்திர காந்தக் கற்கள் சூரிய சந்திரர்களைக் கண்டு உருகுவதுபோல, ஆழ்வாரும் மனமுருகித் திருப்பல்லாண்டு பாடியருளினார்.

திருப்பல்லாண்டு என்னும் முதற் பிரபந்தமே, பெரியாழ்வார் திருவுள்ளத்திற் பொங்கித் ததும்பிப் பூரணமாய் நிறைந்தொளிரும் அரிய கருத்துக்களை ''அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்'' என்பதற்கு ஒப்பாய் விளங்குகிறது என்பதைக் காணலாம். பெரியாழ்வார் ''பல்லாண்டு பல்லாண்டு'' ''அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி'' என்னும் இவ்விரண்டு பாசுரங்களால், மங்களாசாசனம் (பல்லாண்டு) பாடுகின்றார். ''வாழாட் பட்டு நின்றீர்'' ''ஏடுநிலத்தில் இடுவதன்முன்னம்'' ''அண்டக் குலத்துக்கு'' ஆகிய இச் செய்யுட்களால் மங்களத்திற்குத் துணை சேர்த்துக் கொள்கின்றார். இது நாம் பெரும்பேறு, எல்லோரும் பெற்று உய்ய வேண்டுமென்பதைக் காட்டுகின்றது. ''எந்தை தந்தை தந்தை'' ''தீயிற் பொலிகின்ற'' ''நெய்யிடை'' என்னுமிவை முறையே ஐஸ்வர்யார்த்தி-செல்வத்தையே போக்கியமாக நினைத்திருப்பவர்; கைவல்லிய நிஷ்டர்-ஆத்மாவையே பேரின்பமாக நினைத்திருப்பவர். பகவத் கிருபார்த்திகள் -தம்நலம் கருதாது பகவானுக்குத் தொண்டு புரிவதே மேலானது என்று, பகவானுடைய உகப்பையே விரும்பியிருப்பவர்கள். இவ்வாழ்வார் எல்லாரையும் திருத்திப் பகவத் பக்தியில் ஈடுபட்டுப் பல்லாண்டு பாடுகிறார்.

மேலும் ஆழ்வார் திருமாலின் மேலான வடிவழகைத் தம் ஊனக்கண்களாலும் ஞானக் கண்களாலும் உள்ளும் புறம்பும் கண்டு, இத்திருமேனிக்கு என்ன தீங்கு நேரிடுமோ

என்று கனிந்த உள்ளத்தினராய், நீர் வேட்கையுடையவன் தண்ணீர் நாடிப் பல்கால் தண்ணீர் தண்ணீர் என்று கூறுமாப்போல, பல்லாண்டு பல்லாண்டு ஒரு குறைவுமின்றி வாழக் கடவதாம் என்றுரைத்து, அதனோடு அமையாமல், மேலும் பல்லாயிரத்தாண்டென்று அதற்குப் பின்னரும் மனம் சாந்தமுறாமல், பல கோடிநூறாயிரம் என்று வினை முடிவு கூறாமல் கூறியுள்ளார். வினைமுடிபு கூறாமைக்குக் காரணம், வாழ்வாயாக என்று வினைமுடிவு கொடுத்துவிட்டால், காலவரையறை ஏற்பட்டு விடுமென்றஞ்சி அவ்வாறு கூறியிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

''பல்லாயிரத்தாண்டு'' என்றது பிரமனின் ஆயுளைக்குறிக்கும் என்று உரையாசிரியர்கள் கூறுகின்றார்கள். ஆழ்வார் பயத்தைப் போக்க, இறைவன் ஆழ்வாரை நோக்கி, நீர் ஏன் கவலைப்படுகின்றீர்? ''எம் மல்லாண்ட திண்டோளைப் பாரும்'' என்று காட்ட, அதற்கு இவர் வீரனான மகனைக் கண்டதாய் இவன் போரை மதியாமல் போரிற் புகுவானே என்று கலங்குவதுபோல, இவரும் அத்தோள் அழகிற்கும் என்ன தீங்கு நேருமோ ?என்று அஞ்சிப் பல்லாண்டு பாடுகின்றார். காதில் தோடு வாங்கினாலும், தோடிட்ட காது என்றறிவதுபோல, இவர் மல்லாண்ட தோளை ஞானத்தால் அறிந்து கூறுகின்றார். பகவான் திருமேனி அழகில் ஈடுபட்டு, ''நீயே உன்னைக் கண்ணாடி முன் காண்கில், உன்னை மயக்குவிக்கும் உன் வடிவழகு'' என்கிறார்.

பக்தர் இழியுந்துறை உன்னுடைய பாதம். அழகிய செவ்விய திருவடி ஆதலால், அவை எஞ்ஞான்றும் அழகும் தேசும் குறைவின்றி, மங்களமல்லாதவை ஒழிகைக்கும், இல்லாத நலங்கள் உண்டாவதற்கும் திருக்காப்பு(பாதுகாவல்) புரிக என்று, ஆழ்வார் தம் நலம் விழையாது, இறைவன் நலமொன்றே எக்காலத்தும் எவ்விடத்தும் நன்றாம் என்று, திருப்பல்லாண்டு பாடுகின்றார். இதனால் ஆழ்வார் திருவுள்ளம் திருமால் திருவுள்ளத்தின் பாங்கிற்கு இயைந்துள்ளதை அறியலாம்.

''இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத் தமியர் உண்டலுமிலரே'' என்பதற்கேற்ப, இவர் நான்பெற்ற பேறு இவ்வுலகம் பெற்றுய்யப் பண்டைக் குலத்தைத் தவிர்த்துத் தொண்டக் குலத்தவராகச் செய்து பருகும் நீரும், உண்ணுஞ்சோறும், தின்னும் வெற்றிலையும் (தாரக போஷக போக்கியமாய்) உள்ளவை எல்லாம், கண்ணன் என்று உபதேசித்தார். நாம் வெளிப்படையாகக் காணும் உடல், ஐம்பொறிகள் முதலியவற்றிற்குள் கண்ணுக்குத் தோன்றாத சூக்கும ஐம்பூதங்களும் பொறிகளும் இருக்கின்றன. நம் பூதவுடல் அழிந்த போதிலும் இந்தச் சூக்கும உடல், ஊழிக்காலம் வரையிலும் உயிருடன் கூடியே இருக்கிறது. வீட்டை அடையும்போது பூமண்டலம்வரையில்; உயிரை இந்தச்சூக்கும உடல் தொடர்ந்து வந்து, பரமபதத்திற்குப் புகுத்துதற்கு முன் மூலப்பிரகிருதியுடன் சேர்ந்து விடுகிறதென்பது வைணவக் கொள்கை. கைவல்லியர்களுக்கு இந்தச் சூக்கும உடல் மூலப் பிரகிருதியில் கலந்து கைவல்லியமோக்கம் உண்டாய் விட்டதாகில், பிறகு பகவானை அடைய முடியாதாகையால் ''ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து சேருங்கள்'' என்கிறார்.

நம்மை அனுபவிப்பதே நமக்கு இன்பம் என்று இருப்பவர் கைவல்லியர். ஆண்டாள் ''போதுவீர் போதுமினோ'' என்று அழைத்தவாறு, அனைவரையும் அழைத்து, ஆழ்வார் காரணங் காட்டித் திருத்தி நாராயணனுக்குப் பல்லாண்டு கூறுமாறு பணிக்கின்றார். இவனையடைய ஆர்வமே போதும். நமக்குத் தாய் தந்தை மற்றெல்லாமாகவும் இருப்பவன் நாராயணனே ஆவான் என்று, பலரையும் சேர்த்துக் கொண்டு பல்லாண்டு பாடுகிறார். வைணவர்கள் தங்கள் இல்லந்தோறும் தவறாமல் இப்பல்லாண்டை ஓதிவருகிறார்கள். அடையப்படுபவனாகிய பகவானையும், அடைபவனாகிய சீவனையும், அடைவதற்குரிய வழியையும், அடைவதனால் உண்டாம் பலனையும், அடைவதற்குத் தடையாய் உள்ளதையும், மனிதராயுள்ளவர் முக்கியமாக அறியவேண்டும். இதனை அர்த்தபஞ்சகம் என்பர். பெரியாழ்வார் அருளிய திருப்பல்லாண்டில், நாம் அறிதற்குரிய அர்த்தபஞ்சகம் என்னும் ஐந்துபொருள்களும்கூட உள்ளன.

''உண்ணாநாள் பசியாவ தொன்றில்லை
ஓவாதே நமோ நாராயண என்று
எண்ணாநாளும் இருக்கு எசுர் சாம
வேத நாள்மலர் கொண்டுன் பாதம்
நண்ணா நாள் அவை தத்துறுமாகில்
அன்றெனக் கவை பட்டினிநாளே''

என்று கூறியுள்ளதைக்கொண்டு, இவருடைய மனம் வாக்கு காயம் எத்தகையவை என்பதை நாம் எண்ணியுணரலாம்.

''உண்டோ திருப்பல்லாண்டுக்கு ஒப்பதோர்
கலைதான் ?
உண்டோ பெரியாழ்வார்க்கு ஒப்பொருவர்?''

என்று பிரபந்தத்தின் மேன்மையையும், அதைச் செய்தவர் உள்ளத்தையும் வியந்து புகழ்ந்து மணவாள மாமுனிகள் கூறுவதிலிருந்து, பெரியாழ்வார் உள்ளக்கிடக்கையை நாம் நன்கு அறியலாம்.

முடிவுரை:

உயிர்க்கன்றுக்குப் பால் சுரந்தளிக்கும் பசு தன் தோற்கன்றுக்கும் இரங்கிப் பால் சுரந்து கொடுப்பதுபோலப், பகவான் மெய்யடியார்களாகிய ஆழ்வார்களுக்குப் பக்தி என்பதைப் பரிந்தளித்து ஆட்கொண்டதுபோலப், பக்தியில்லாத நாமும் திருப்பல்லாண்டை நாடோறும் தவறாமல் மனமொன்றப் பாடி வருவோமாகில், நமக்கும் வைகுந்தத்தில் பல்லாண்டு பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்தும் பெரும் பேறும் உண்டாம் என்பது, உள்ளங்கை நெல்லிக்கனியாம்.

ஆய்ச்சியர் குரவை

திரு. கா. அ. ச. ரகுநாயகன், எம்.ஏ.,
(திருப்பத்தூர், வ.ஆ.மா.)

கண்ணகியும் கோவலனும் கவுந்தி அடிகளின் துணையுடன் மதுரையை அடைந்தார்கள். புறஞ்சேரியில் அவர்கள் தங்கியிருந்த போது அங்குவந்த மாதரி என்னும் ஆயர் முதுமகளிடம் கண்ணகியை அடைக்கலமாகத் தந்த பின்னர், கவுந்தி அடிகள் தம் வழிச் சென்றனர். கண்ணகியும் கோவலனும் உடன் வர, மாதரி தன் ஆயர்சேரி அடைந்து, அங்கே அவ்விருவரையும் தனி மனை ஒன்றில் இருக்கச் செய்தாள். மாதரியின் மகள் ஐயை என்பாள் கண்ணகிக்குத் துணையாக இருந்தாள். சிலம்பினை ஏந்தி மதுரை நகர்க்குள் சென்ற கோவலன் கொலைக் களப்பட்டான்.

தன் அரும்பெறல் மனைவி கண்ணகியைப் பிரிந்து அவளை வருந்தச் செய்தான் கோவலன்; போற்றாவொழுக்கம் புரிந்தான்; பெற்றோர் அளித்த வான்பொருள் அனைத்தும் இழந்தான் பின்னர் மனம் திருந்தித் திரும்பினான்; மனைவியின் காற்சிலம்பை விற்று அதனை முதலாக வைத்துத் தான் இழந்த பொருளை மீண்டும் பெற வேண்டும் என எண்ணினான்; அந்த எண்ணத்தோடு மதுரையை நோக்கி வந்தான்.

மனம் திருந்தி வந்த கணவனை ஏற்றாள் கண்ணகி. அவன் 'எழுக' என எழுந்தாள்; அவன் பின்னே நடந்தாள். புகாரை விட்டுப் புறப்பட்டபோது, அந்நாள்வரை அவளைத் தனிமையில் காத்து வந்த அவளுடைய மாமிக்கும் அன்னைக்கும் அவள் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. கண்ணகிக்கு மதுரை புதிய ஊர். மாதரி முதலிய ஆயர்மக்கள் அனைவரும் அவளிடம் அன்பு பாராட்டினார்கள். எனினும் அவர்கள் அனைவரும் அவளுக்குப் புதியவர்களே; முன்பின் அறியாதவர்களே.

ஆயர் சேரியிலிருந்து கோவலன் கண்ணகியைப் பிரிந்து சென்றான். பிரிவதற்கு முன் கண்ணகியிடம் அவன் பேசிய பேச்சு உள்ளத்தை உருக்குவது. தன் உள்ளம் திறந்து பேசினான்; தன் தவறுகளுக்கு வருந்தினான்; தன் நிலைக்குத் தானே இரங்கினான். கண்ணகியும் அவனிடம் மனம் திறந்து பேசினாள். அன்றே அவ்விருவரும் தம் வாழ்க்கையில் உள்ளத்தால் ஒன்றினார்கள்.

பிரிந்து சென்ற கணவனின் வருகைக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கிறாள் கண்ணகி. கணவனைத் தவிர உற்றார் ஒருவரும் அங்கில்லை. கணவனைக் காணவேண்டும் என்று அவள் உள்ளம் துடிக்கிறாள்; அவன் மீண்டு வந்தபின் தான் அவனைப் பிரியவே கூடாது என்று எண்ணுகிறாள். தன் அருகிலேயே அவன் இருக்க வேண்டும் என்ற ஆவல் அவள் உள்ளத்தில் எழுகிறது. கணவன் வரக் காணோம். நேரம் செல்லச் செல்ல அவள் ஆவல் உச்சநிலை அடைகிறது.

கோவலன் கொலைப்பட்டுவிட்டான், இந்தச் செய்தியைக் கண்ணகிக்கு அறிவிக்க வேண்டும். தன் கணவன் கொல்லப்பட்ட அக் கொடுஞ் செய்தியைக் கண்ணகி எவ்வாறு ஏற்பாள்? அதனை அவள் அறியும் காட்சியை மக்கள் காண ஆற்றார்; அறிஞர்களும் அதனைப் படித்து நிலைகுலைவர். இந்த அவலச்சுவையைத் தணிக்க வேண்டும்.

எனவே, காட்சிப் போக்கை மாற்றிக் காண்போர்க்கும் கற்போர்க்கும் வேறுசுவையை இடையில் அளிக்க வேண்டும். ஆசிரியர் இளங்கோ வடிகள் ஓர் உத்தியைக் கையாள்கிறார்; 'ஆய்ச்சியர்குரவை' என்னும் ஒரு காட்சியை இடையில் அமைக்கிறார். வீரமும் காதலும் விரவிய காட்சியாக அது அமைகிறது.

ஆடு மாடுகளை மேய்த்து அதன் பயனாய்க் கிடைக்கும் பால், தயிர், வெண்ணெய், நெய் ஆகியவற்றைத் தாமும் உண்டு, பிறர்க்கும் அளிப்பது ஆயர்களின் தொழில். ஆப்போல மக்களுக்குப் பாலூட்டலின் ஆயர் எனப் பெயர் பெற்றனர் போலும். உழைப்பும் ஓய்வும் ஒருங்கிணைந்தது ஆயர்தொழில். ஆண்களும் பெண்களும் உழைக்கும் வாய்ப்புடையது அத்தொழில். ஓய்வு நேரத்தில் ஆடிப்பாடி அகமகிழ்ந்திருப்பர் ஆயர்.

பெண்கள் எழுவரேனும் ஒன்பதின்மரேனும் கூடி வட்டமாய் நின்று கை பிணைந்து ஆடும் ஒருவகைக் கூத்தினைக் 'குரவைக்கூத்து' என்பர். ஆயர் குலப்பெண்கள் ஆடும்குரவைக்கு 'ஆய்ச்சியர் குரவை' எனப் பெயரிடுகிறார்

இளங்கோவடிகள். ஆட்டத்துக்கு ஏற்ற தாளத்தில் பாட்டும் பாடுவார்கள். பாட்டின்பொருள் காமமும் வெற்றியுமாக அமையும்.

பாண்டியன் அரண்மனையில் முரசு ஒலிக்கிறது. மாதரி துயில் நீங்குகிறாள். அரண்மனைக்கு நெய் கொடுக்கும் முறை அன்று அவளுடையது. கையில் மத்தும் கயிறும் ஏந்திய வளாய்த் தன் மகள் ஐயையை அழைத்தவண்ணம் மாதரி அரங்கில் தோன்றுகிறாள். 'ஆய்ச்சியர் குரவை' இவ்வாறு தொடங்குகிறது.

தயிர் கடைவதற்கு வந்த மாதரிக்குப் பல உற்பாதங்கள் தோன்றுகின்றன. உறையிட்ட பால் தோயவில்லை; ஆனேற்றின் கண்களில் நீர் வடிகிறது; வெண்ணெய் உருகவில்லை; ஆட்டு மறிகள் துள்ளி விளையாடவில்லை; ஆவினம் நடுங்கி அலறுகின்றது. அவற்றின் கழுத்திலிருந்து மணிகள் அற்று வீழ்கின்றன. இவற்றையெல்லாம் கண்ட மாதரியின் உள்ளத்தில் 'துன்பம் ஏதோ வரப் போகிறது' என்ற உணர்வு ஏற்படுகிறது. தெய்வத்தின் துணையை அவள் நாடுகிறாள்.

ஆவினங்கள் துன்பம் தீர வேண்டும் எனக் குறித்துக் குரவை ஆட்டத்துக்கு ஏற்பாடு செய்கிறாள். 'பலராமனோடும் பின்னைப் பிராட்டியோடும் கண்ணன் ஆடிய குரவை ஆடுவோம்' என்று மாதரி கூறுகிறாள். 'கண்ணகியும் நம் குரவையைக் காணட்டும்' என்று தன் மகளிடம் சொல்கிறாள்.

ஐயையின் வயதுடைய இளம் பெண்கள் எழுவரை ஆயர்சேரியிலிருந்து தெரிந்தெடுக்கிறாள் மாதரி. இவர்கள் எழுவரும் வீரக்குடியில் வந்தவர்கள். ஒவ்வொரு பெண்ணுடனும் ஓர் ஆனேறு வளர்ந்து வருகிறது. அந்த ஆனேற்றை அடக்கிச் செலுத்த வல்ல ஆண்மகனே அந்தப் பெண்ணே மணத்தற்கு உரிமை பெறுவாண்.

இளம் பெண்கள் எழுவரையும் மாதரி ஒழுங்குபடுத்தி வட்டமாக நிறுத்துகிறாள். ஏழிசையின் பெயர்களை அவர்கள் எழுவர்க்கும் 'படைத்துக் கோள்' பெயராக இடுகின்றாள். மேற்குத் திக்கு நோக்கி நின்ற பெண்ணைக் 'குரல்' என்று அழைத்தாள். அவளுக்கு இடப்புறமாகத் தொடங்கி வரிசையாகத் துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் இசைப் பெயர்களை மற்றையோர் அறுவர்க்கும் சூட்டினாள். 'குரல்' என்ற பெயர் கொண்ட பெண்ணே இந்தக் குரவையில் கண்ணன். இளி பலராமனாகவும், துத்தம் பின்னையாகவும் இருப்பர்.

துழாய் மாலை ஒன்றைக் கண்ணன் என்னும் பெண்ணின் தோள்மேல் இட்டு மாதரி குரவையைத் தொடங்கி வைக்கிறாள். 'நப்பின்னைப் பிராட்டியின் அழகில் மயங்கிய கண்ணன், தன் மார்பில் இருக்கும் திருமகளைக் கண்ணெடுத்தும் பார்க்காமல் விட்டானே!' என்று அவள் வியந்து பேசுகிறாள். பெண்கள் எழுவரும் கை கோத்து நிற்கிறார்கள்.

'கொல்லைப்புறத்தில் வஞ்சனையாக வந்து தோன்றிய குருந்த மரத்தினை முறித்த மாயவனை முல்லைப் பண்ணினால் பாடுவோம்' என்று கண்ணன் என்பாள், பலராமன் என்பாளை நோக்கிக் கூறுகின்றாள். கண்ணன் பாடுகிறாள்; மற்றவர் ஆடுகிறார்கள்.

குரல்-கண்ணன் என்ற பெயர் கொண்ட அப் பெண் பாடிய பாட்டு :

''கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
கொன்றையம் தீங்குழல் கேளாமோ தோழீ''

வஞ்சனைகளை வென்ற கண்ணனுடைய மாயச் செயல்களில் ஈடுபட்டு மயங்கிய பெண்கள், அவன் தங்கள் ஆனிடையே வர வேண்டுமென்று விரும்புகிறார்கள். அப்படி அவன் வரும்போது அவன் ஊதும் குழலிசையைக் கேட்கவேண்டும் என்றும் ஆவல் கொள்கிறார்கள். அந்த விருப்பத்தால் அவர்கள் உள்ளத்தில் எழும் ஏக்கத்தை இப்பாடல் வெளியிடுகிறது. இப்படி மூன்று பாடல்களைப் பாடி அவர்கள் குரவை ஆடுகிறார்கள்.

கண்ணனுடைய வடிவழகும், பின்னைப் பிராட்டியின் முகத்தழகும் அவர்கள் உள்ளத்தில் மாறிமாறித் தோன்றுகின்றன. 'கண்ணனின் அழகுக்குப் பின்னையின் அழகு ஒன்றும் குறைந்துவிடவில்லை' என்று தம் குலக்கொழுந்தைப் புகழ்ந்து பாடுகிறார்கள்.

தொழுனை ஆற்றில் நீராடச் செல்கிறாள் பின்னைப் பிராட்டி. கண்ணன் அவள் ஆடையை எடுத்து ஒளித்து வைக்கிறான். ஆடையை ஒளித்து வைத்த கண்ணன், பின்னையின் மேனி அழகில் சொக்கி விட்டான். கண்ணனின் நெஞ்சைக் கவர்ந்து விட்டாள் பின்னை. பின்னையின் ஆடையையும் வளையையும் கவர்ந்து கொண்டான் கண்ணன். இப்படி ஒருவரை ஒருவர் காதலால் விழுங்கி நிற்கும் அழகைப் பாடிக் குரவை ஆடுகிறார்கள் ஆயர் மகளிர்.

பின்னைப் பிராட்டி அந்தக் குரவைக் கூத்தில் 'கண்ண'னுக்கு இடப்புறமும், 'பலராம'னுக்கு வலப்புறமுமாக நின்று ஒருமுறை ஆடுகிறார். அடுத்து கண்ணனுக்கு வலப்புறமும், பலராமனுக்கு இடப்புறமுமாக மாறி நின்று ஆடுகிறாள். இப்படி அவள் மாறி மாறி ஆடி வரும்போது, அவள் அடி வைப்புத் தாள ஒழுங்கிற்கு ஒரு சிறிதும் மாறுபடாமல் ஒத்து வருவது வியப்பாக இருக்கிறது. இசைக் கலையில் வல்லவரான நாரதமுனிவரே அங்கு வந்து அவளுடைய தாள அடி ஒழுங்கைக் காத்து நிற்கின்றாரோ என்று ஆயர் பெண்கள் வியக்கின்றார்கள்.

மதுரை ஆயர் சேரியில் பெண்கள் எழுவர் கூடி ஆடும் இந்தக் குரவைக் கூத்தைக் கண்டு நிலை கொண்டிருக்கும் மாதரி, உண்மையாகவே திருவாய்ப் பாடியில் கண்ணனும் பலராமனும் நப்பின்னையும் இணைந்து விளையாடுவதாக எண்ணிக் களிக்கின்றாள்; யசோதைப் பிராட்டி

யும் அங்கு வந்திருந்து அந்தக்கூத்தைக் காண்ப தாக மாதரியின் மனத்திரையில் தோன்றுகிறது. இதுவரை காமம்பொருளாகப்பாடிய பெண்கள் இனி வெற்றியைப் பொருளாகப் பாடத் தொடங்குகிறார்கள். வெற்றியைப் பற்றி எண்ணியவுடனே தமிழ் மன்னர் மூவேந்தர் பெற்ற வெற்றிகள் நினைவில் எழுகின்றன. பாடுவோர் மதுரைப் பெண்களாதலின் முதலில் பாண்டியனைப் பாடுகிறார்கள்.

வெற்றிகள் பலவற்றைப் பெற்றிருக்கும் பாண்டியன் அவற்றின் அடையாளமாகத் தன் மார்பில் ஒரு மாலை அணிந்துள்ளான். அது இந்திரனிடம் பெற்ற வெற்றிக்குக் கிடைத்த மாலையாகும். இது தவிர முத்துமாலை ஒன்றையும் அவன் அணிந்திருக்கிறான். சந்தனம் பூசி மணங்கமழும் அவன் மார்பில் இவ்விரு மாலைகளும் அணி செய்கின்றன. சந்தனம் அவன் நாட்டில் பொதிகைமலையில் விளையும் தனிச் சிறப்புடையது. அதுபோலவே முத்தும் அவனுக்கே உரிய கொற்கைத் துறையில் கடலில் கிடைப்பது. சந்தனத்தையும் முத்தையும் தனி உரிமையுடன் பெற்றுள்ள பாண்டியன் மார்பில் இந்திரனுடைய பூணாரம் வெற்றிச் சிறப்பைக் காட்டி விளங்குகிறது.

இப்படிப் பாண்டியனாக வந்து வெற்றிச் சிறப்போடு மக்களைக் காக்கும் மன்னன் யார் என அறிவீரோ ? அவன் துவராபதியில்தோன்றி ஆனிரைகளை மேய்த்துக் குருந்த மரத்தை முறித்தானே, அந்தக் கண்ணனே ஆவான். அந்தப் பாட்டு :

'கோவா மலையாரம் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன்
மார்பினவே
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக் குருந்தொசித்தான் என்பரால்'

இப்படிப் பாண்டியனின் வெற்றிச் சிறப்பைப் பாடுகிறார்கள். பின்னர் சோழனும் சேரனும் அவர்கள் பாட்டில் இடம் பெறுகிறார்கள். தம் ஆயர் குலத் தெய்வமாகிய திருமாலே பாண்டியனாகவும் சோழனாகவும் சேரனாகவும் வந்து தோன்றி மக்களைப் புரக்கின்றான் என்பது அவர்கள் நம்பிக்கை. 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே' என்று ஆழ்வாரும் அருளிச் செய்தார் அன்றோ ?

பண்டொரு நாள் கண்ணன் வடமலையை மத்தாகவும், வாசுகி என்னும் பெரிய பாம்பைக் கயிறாகவும் கொண்டு கடலைக் கடைந்தான்; கடலின் அடிவயிறே அப்போது கலங்கிவிட்டது. அப்படிக் கடலைக் கலக்கிய அவன் கைகள், யசோதைப் பிராட்டி தயிர்கடையும் கயிற்றினால் கட்டப்பெற்றன என்பது மாயமே! அது நமக்கு மருட்கை அளிக்கின்றது என்றுகண்ணன் புகழைப் பாடுகிறார்கள். உலகையெல்லாம் உண்ணும் திறலுடைய கண்ணன், வெண்ணெயைத் திருடி உண்டான் என்பது நம்பத் தக்கதா? அது மாயமே !

தன் இரண்டு திருவடிகளைக் கொண்டு மூவுலகையும் முன் அளந்தானே, அந்தக் கண்ணனின் திருவடிகளோ இப்போது பாண்டவர்க்காகத் தூது நடந்தன ? இது என்ன மாயம்! இவ்வாறு கண்ணனுடைய மாயைச்செயல்களை ஆயர்சேரிப் பெண்கள் எண்ணி எண்ணி வியந்து பாடுகிறார்கள். மேலும் கண்ணனுடைய வெற்றி, அவன் மேனியழகு, அவன் ஆற்றிய அரிய செயல்கள் ஆகியவற்றை வகைப்படுத்தி மூன்று பாடல்களில் பாடிச் சுவைத்து இன்புறுகின்றனர். கண்ணன் திருமேனியை அவர்கள் சுவைக்கும் பாங்கைக் கேட்போம் :

'பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன
கண்ணே'

இப்பாடலும் மற்ற இரண்டும், மக்கள் தம்முடைய ஐம்பொறிகளாலும் பயன் பெற வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. ஐம்பொறிகளுள்ளும் சிறப்புடையன செவி, கண், நா ஆகும். இவைகளால் பயன்பெறத் தவறினால், அவைகள் பொறிகள் எனத் தகா என்பதை ஆசிரியர் வலியுறுத்துகிறார். குரவை ஆடிப் பாடித் தம் தெய்வத்தைப் போற்றிய பெண்கள், அத்தெய்வம் தம் ஆனிரைக்கு உற்ற துன்பத்தை நீக்கிடுக என்று வேண்டுகிறார்கள். பாண்டிய மன்னன் அரண்மனையில் ஒலித்த முரசொலியுடன் தொடங்கிய இக்காட்சி, அந்த முரசின் வெற்றிச் சிறப்பைக் கூறி முடிகிறது. இளங்கோவடிகள் இயற்றிய காப்பியத்தை 'முத்தமிழ்க் காப்பியம்' என்று போற்றுவார்கள். அது மூவேந்தவர்க்கும் உரியது என்பதையும் அறிவோம். இளங்கோவின் உள்ளம் விரிந்து பரந்தது என்பதை நாம் அறிய வேண்டும்.

எல்லாத் தெய்வங்களுக்கும் அக்காப்பியத்தை உரியதாக்கியுள்ளார் ஆசிரியர். திருமாலும் சிவபெருமானும் ஒரே சீராய்ப் போற்றப்படுகின்றனர். முருகனும் கொற்றவையும் இந்திரனும் வேறு பல சிறுதெய்வங்களும் அக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளனர். அவரவர்க்குரிய சிறப்புகளும் வழிபாடுகளும் பொருத்தமாக அமைந்துள்ளன. சமண சமயக் கொள்கைகள் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. புத்தக் கொள்கையைத் தழுவிச் செல்லும் மாந்தர்களும் சிறப்பிடம் பெற்றுள்ளனர்.

'ஆய்ச்சியர் குரவை' என்னும் இப்பகுதியில் ஆசிரியர், திருமாலை மிகச் சிறப்பான முறையில் போற்றுவதைக் காண்கிறோம். ஆய்ச்சியர் வாயிலாகவெளிப்படும் பாடல்கள், சொல்லழகும் பொருளழகும் இழைந்து நம் பக்திச் சுவையைப் பெருக்குகின்றன; அவற்றின் இன்னோசை நம்மைப் பெருமிதத்தில் ஆழ்த்துகின்றது; அவற்றின் சொல்லும் தொடரும் கருத்தும் நமக்கு ஆழ்வார் பாடல்களை நினைவூட்டுகின்றன. ஆழ்வார்களின் காலத்துக்கு முன்னே தோன்றிய இப்பாடல்களும், அவர்தம் அருளிச் செயல்களைப் போலவே போற்றத்தக்கவையாகும்.

***

அனந்தாழ்வான்

[கவிஞர் திரு. மனசை ப. கீரன், B.A., B.T.]

இராமாநுசர்:

ஒரு சமயம் அதாவது சுமார் 850 ஆண்டுகளுக்கு முன்னர், இராமாநுசர் (கி. பி. 1017-1137) திருவரங்கத்தினின்று பெரிய பெருமாளிடத்தில் விடை பெற்று, அங்கங்கே வழியில் உள்ள பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு, காஞ்சிபுரம் சென்று சேர்ந்தார். அங்குப் பெருந்தேவித் தாயாருடன் உறைகின்ற தேவப் பெருமாள் கோயிலை வழிபட்டு மகிழ்ந்தார். பின்னர்த் திருவேங்கடமலையை வணங்க விரும்பி வழிக்கொண்டு, அங்குச் சென்று சேர்ந்தார். அங்கிருந்த அன்பர்கள் பலரும் பெருந்திரளாகக்கூடி, அவரை எதிர்கொண்டு வரவேற்றுச் சிறப்பித்துப் பணிந்து இறைஞ்சி மகிழ்ந்தனர். அப்போது அவ்வன்பர்கள் அனைவரும், இராமாநுசரைப் பெரிதும் பணிந்து வணங்கி நின்று, தாங்கள் எல்லாம் ஈடேறும்படி உபதேச முறையில் தமக்கு ஏதேனும் ஒரு பொருள் குறித்து விளக்கிச் சொற்பொழிவு ஆற்றியருளுமாறு, பெரிதும் விண்ணப்பித்துக் கொண்டனர். எம்பெருமானார் என்னும் இராமாநுசர், அங்ஙனமே அவர்தம் விண்ணப்பத்திற்கு மனமிரங்கி இசைந்தருளினார்.

''அகல கில்லேன் இறையும் என்று
அலர்மேல் மங்கை யுறைமார்பா!
நிகரில் புகழாய்! உலகம் மூன்று
உடையாய்! என்னை ஆள்வானே!
நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே!
புகல்ஒன் றில்லா அடியேன்உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே''

எனவரும் நம்மாழ்வார் திருவாய்மொழிப் பாசுரத்தை எடுத்துக் கொண்டு, இராமாநுசர் அதன் பொருளை விளக்கி வருங்கால், அதனோடு துவயம் என்னும் மந்திரத்தின்பொருளை இணைத்து, விரிவாக விளக்கிச் சிறந்தசொற்பொழிவு நிகழ்த்தியருளினார். அதன்கண், திருவெட்டெழுத்து மந்திரம், சரம சுலோகம் ஆகியவற்றையும்கூட, இடையிடையே இயைத்து விளக்கியருளினார். இராமாநுசரின் அவ்வுபதேசச் சொற்பொழிவு, ''உடல் குளிர, உயிர் தழைக்க, உணர்ச்சி ஓங்க, உளம் கனிய, மெய்யன்பர் உள்ளமெல்லாம் கடலனைய பேரின்பம் துளும்பச் செய்து'' அனைவரையும் எல்லையற்ற மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

அனந்தாழ்வான் :

அப்போது அந்தப் பெருங்குழுவில், இராமாநுசரின் திருவடி சம்பந்தம் பெற்ற பலருள், தலைசிறந்த அனந்தாழ்வான் என்னும் சிறந்த அன்பர் ஒருவர் இருந்தார். அவர் அடைந்த மகிழ்ச்சிக்கும், நன்றிப் பெருக்கிற்கும் எல்லையே இல்லை. அங்குத் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான அன்பர்களின் சார்பில், அவர்களின் உள்ளத்துணர்ச்சிகளை எல்லாம் திறம்பட எடுத்துப் புலப்படுத்தும் முறையில், அனந்தாழ்வான் நன்றியுரை நவிலத் தலைப்பட்டார். அந்நன்றியுரை ஈடும் எடுப்புமற்று, சமய இலக்கிய வரலாறுகளிலேயே தலைசிறந்த தொன்றாக, என்றும் நிலைபெறும் வகையில், தனிப் பெருஞ் சிறப்புடையதாக அமைந்துவிளங்கியது. இராமாநுசரின் அரிய அருளுபதேசச் சொற்பொழிவுக்கு நன்றியுரை நவில எழுந்த அனந்தாழ்வான்.

''பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
இருகணிள மூங்கில் வாங்கி-அருகிருந்த
தேன்கலந்து நீட்டும் திருவேங்கடங் கண்டீர்
வான்கலந்த வண்ணன் வரை''

என்னும் பூதத்தாழ்வார் பாசுரத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு, தமது நன்றியுரையினை நவிலத் தொடங்கினார்.

பூதத்தாழ்வார் திருவேங்கடமலையின் சிறப்பினை வருணித்து, அருளிச் செய்தது அப்பாசுரம். ''மதநீர் பெருகப் பெற்ற ஓர் ஆண் யானையானது, தனது துணையாகிய ஒருபெண் யானைக்கு இனிய உணவு கொடுத்து, அதனை மகிழ்ச்சியுறச் செய்ய விரும்பி, மூங்கிற் குருத்தைத் தரித்துத் தேனிலே தோய்த்து அப் பெண் யானையின் வாயின்கண் பிழிந்து ஊட்டுகின்ற திருவேங்கடமலையே, நீலமேக நிறத்தனான திருமால் எழுந்தருளியிருக்கும் மலையாகும்'' என்பது இப்பாசுரத்தின் பொருள்.

உள்ளுறை பொருள்நலம் :

பூதத்தாழ்வார் அருளிய இப்பாசுரத்திற்கு, அனந்தாழ்வான் தம்முடைய நுண்மாண் நுழைபுலத் திறனால், சமயோசிதமாகச் சிறந்த முறையிலும், பொருந்தும் வகையிலும், பின்வருமாறு நயஞ் செறிந்த உள்ளுறை நலம் அமையும்படி, பொருள் விளக்கம் செய்தருளினார்.

''நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியாகிய பசுந்தமிழின், ஆனந்தம் மதநீராய்ப் பெருகப்பெற்ற இராமாநுசராகிய யானையானது, தன் அன்பர்களாகிய பிடியானைகளுக்கு முன்னே நின்று, முற்றொடரும் பிற்றொடரும் ஆக அமைந்துள்ள துவயம் என்னும் மந்திரமாகிய இருகண் மூங்கிலை வளைத்து,

அதன் அருகில் உள்ள எட்டெழுத்துத் திருமந்திரம்-சரமசுலோகம் என்ற இரு தேன்களையும் கலந்து விரித்துரைத்து விளக்கி ஊட்டி அருளிய திருவேங்கடமலையே, திருமாலின் திருமலையாகும்'' என்பது, அனந்தாழ்வான் அழகுறக் கூறியருளிய நுண்பொருள். இதன் பொருத்தமும் சிறப்பும் நுண்ணிதின் எண்ணி எண்ணி இன்புறற்பாலன.

பொருத்தமும் சிறப்பும்:

(1) அவரது கருத்தின்படி, இப்பாசுரத்தில் ''பெருகுமத வேழம்'' என்பது இராமாநுசரைக் குறிப்பதாகும். திருவரங்கத்து அமுதனார், ''பண் தருமாறன் பசுந்தமிழ் ஆனந்தம் பாய் மதமாய் நின்றிட எங்கள் இராமாநுச முனிவேழம்'' (64) என இராமாநுசரை மத யானையாக உருவகம் செய்திருத்தல் காணலாம்.

(2) ''பிடி'' என்பது பெண் யானைக்குப் பெயர். அஃது இங்கு இராமாநுசரின் உவப்புக்குரிய அன்பர்களையும், அடியார்களையும் உணர்த்தும்.

(3) ''இருகண் இளமூங்கில்'' என்பது இரண்டு பகுதிகளாய் உள்ள 'துவயம்' என்னும் மந்திரத்தைச் சுட்டும்; மூங்கிலானது முத்துக்கள் தோன்றுதற்கு இடமாக இருக்கும். அதுபோல, அருட்பொருள்கள் பலவற்றை உள்ளடக்கி உணர்த்திக் கொண்டிருக்கும் சிறப்புடைமை பற்றித் 'துவயம்' என்னும் மந்திரம், மூங்கிலாக உருவகிக்கப் பெற்றது. முற்றொடர் என்றும், பிற்றொடர் என்றும், இரண்டு கூறுகளாக விளங்குதலால், 'துவயம்' என்னும் மந்திரம் 'இருகண் இளமூங்கில்' எனப் பெற்றது.

(4) ''அருகிருந்த தேன் கலந்து'' என்பதில், திருவெட்டெழுத்து ஆகிய மந்திரம் ஒரு தேனாகவும், கீதையின் உள்ளீடான 'சரம சுலோகம்' ஒரு தேனாகவும் குறிப்பிடப் பெற்றன. திருவெட்டெழுத்தும், சரம சுலோகமும் துவயத்தின் இருபுறத்தும் அருகில் உள்ளவையாதலின் 'அருகிருந்த தேன்' எனச் சிறப்பிக்கப் பெற்றன.

(5) இங்ஙனம், ''இராமாநுசர் ஆகிய மதயானை, தனது அன்பர்களாகிய பிடியானைகளுக்கு, துவயம் என்னும் மூங்கிலை வளைத்து, திருமந்திரமும் சரமசுலோகமும் ஆகிய இரு தேனையும் கலந்து ஊட்டினாற் போன்று, உபதேசச் சொற்பொழிவு நிகழ்த்தியருளிய இடம் திருவேங்கடமலை ஆதலின், அது முன்னையிலும் பன்மடங்கு தெய்விகச் சிறப்போங்கித் திருமாலுக்குரிய திருமலையாகும் பேறு பெற்றது'' என்பது, இப்பாடலின் முடிந்த முடிபான திரண்ட கருத்தாகும்.

முடிவுரை:

இராமாநுசரின் இணையற்றஅருட்பெருஞ் சொற்பொழிவோ, அனந்தாழ்வானின் நயஞ் செறிந்த நல்லபெரு நன்றியுரையோ, இவற்றுள் எது சிறந்தது என்று நம்மனோர் இயம்புதல் இயலுமோ? இரண்டிற்குமே இணையில்லை என்பது தேற்றம்.

பட்டரின் விளக்கம்

பரிவதி லீச னைப்பாடி,
விரிவது மேவ லுறுவீர்,
பிரிவகை யின்றிநன் னீர்தூய்ப்,
புரிவது வும்புகை பூவே

எனவரும் திருவாய்மொழிப் பாசுரத்திற்குப் பொருள் விரித்துரைத்து விளக்கிக்கொண்டு வரும்போது, 'புரிவதுவும் புகை பூவே' என்ற பகுதியை எடுத்துக்கொண்டு பட்டர், ''இவ்விடத்தில் அகிற்புகை என்றோ, கருமுகைப்பூ என்றோ சிறப்பித்துச் சொல்லாமையால். ஏதேனும் ஒரு புகையும், ஏதேனும் ஒரு பூவும் எம்பெருமானுக்கு இட அமையும்; செதுகையிட்டுப் புகைக்கலாம். கண்டகாலிப் பூவும் சூட்டலாம்'' என்று சுவையாகச் சொற்பொழிவு நிகழ்த்தினராம். அதை நஞ்சீயர் கேட்டு, கண்டகாலிப் பூவை இறைவனுக்குச் சூட்டுதலாகாது என்று நூல்கள் விலக்கிக் கூறியிருக்க, இங்ஙனமும் தாங்கள் அருளிச் செய்யலாமோ? என வினவினார்.

அதற்குப் பட்டர், ''நூல்கள் விலக்கி இருப்பது உண்மைதான். கண்டகாலிப்பூ இறைவனுக்கு விருப்பம் இல்லாதது என்ற காரணம்பற்றி, நூல்கள் அதனை விலக்கவில்லை. அப்பூவைப் பறித்தால் அடியார்களின் கையில் முட்குத்துமே என்று அடியார்கள் பால் கொண்ட பரிவினால், நூல்கள் அதனை விலக்கினவே யன்றி, இறைவனுக்கு விருப்பம் இல்லாதது, அவன் வெறுக்கும் பூ என்பது எதுவும் இல்லை'' என்று அருளிச் செய்தாராம். இதனால் அவர் இறைவ்னின் சிறப்பியல்பையும், நூல்கள் கூறும் விதிகளின் கருத்து நுட்பத்தையும், அழகுற விளக்கியருளிய மாட்சிமை, வியந்து போற்றற்பாலது.

—**ஆசிரியர்**

உத்தர காண்டத்தின் தனித்தன்மை

பேராசிரியர் திரு. செ. வேங்கடராமச் செட்டியார், சிதம்பரம்

(முற்றொடர்ச்சி)

மக்களுக்காகவே மன்னவன் என்ற மாண்புறு கொள்கை நிலைபெற, இராமன் செய்துள்ள செயல் யாவரும் வியக்கும் இயல்பினதாகும். இராமன், சீதையைக் கண்டு காதல் கொண்டு, எடுத்து வளைக்க இயலாத வில்லையும் முரித்து மணந்து கொண்டவன். பிரிதலில்லாப் பொருங்காதலன். அரசைத் தம்பிக்குக் கொடுத்துவிட்டு, அயோத்தி நீங்கி வனம் புகுந்த காலத்தும் சீதையைப் பாராட்டி விளித்து, வனத்திலுள்ள இனிய காட்சிகளையெல்லாம் காட்டுகின்றான். சீதையை அழைக்கும் முறையிலேயே தன் காதல் உள்ளம் நன்கு புலப்பட, ''அருந்ததியனையாளே! அமிழ்தினும் இனியாளே! எழுதரு மெழிலாளே! அகில் புனை குழல்மாதே! அன்னமென்னடையாய்! அணங்கினும் இனியாய்! வாள்புரை விழியாய்! என்றெல்லாம் விளித்துச் சீதையோடு இனிதின் விளையாடியவன் இராமன்! சித்திரகூட மலையில் உள்ள பலவகையான இயற்கைக் காட்சிகளைச் சீதைக்குக் காட்டும்போது, ஒவ்வொரு காட்சிக்கும் ஒவ்வொரு வகையாகச் சீதையை விளிக்கின்றான்.

இத்தகைய தன் காதல் மனைவியாகிய சீதை, இராவணனால் கவரப்பட்ட பின்பு, அவளதுபிரிவாற்றாமையால், இராமன்வருந்திய வருத்தம் சிறிதன்று. மேகத்தினை நோக்கியும், மயில் பூங்கொடி மான் கொன்றைமரம் முல்லைக்கொடி இந்திரகோபம் விடை மின்னல் முதலியவற்றை நோக்கியும், இராமன் இரங்கிக் கூறும் சொற்களை நோக்கினால், சீதையின் பால் அவன் வைத்த காதலின் பெருமை நன்கு புலப்படும்.

இத்தகைய காதலைச் சீதையின்பால் கொண்டிருந்த இராமன், இராவணனைக் கொன்ற பின் சீதையைக் கண்டபோது, காதல் எட்டுணையும் காட்டாது, இராவணனுக்குரிய இலங்கையில் சீதை இதுகாறும் இருந்ததையே தவறாகக் கொண்டு வெகுண்டு கூறியதும்; சீதையின் கற்பில்மாசு இல்லை என்பதை உலகம் அறியத் தீப்புகுந்து காட்ட வேண்டும் என்று கூறியதும், அவ்வாறே சீதை எரி புகுந்து தூயவள் என்பதை நிறுவிக் காட்டிய பின்பும், அங்கியங் கடவுளும் பிரமனும் உருத்திரனும் அவள் தூய்மையைப் பற்றிச் சான்று கூறியபின்பே, அவளை மனைவியாக ஏற்றுக் கொண்டதும், நோக்கும்போது, இராமனுக்குக் கற்பில் கருத்தூற்றம் பெரிதும் உண்டு என்பது தெளிவாகும்.

இவ்வளவு பெரிய சோதனைக்குப் பின்னரே, சீதையை அரசியாகக் கொண்டு அயோத்தியில் ஆட்சி புரிகின்றான் இராமன். யாவரும் போற்றத்தக்க இராமன் ஆட்சியில் நாட்டு மக்களுக்கு ஒரு குறையிருந்தது. அது யாதெனின்? தீவினையை நயந்து செய்யும் இராவணனது இலங்கையில் சிறையிருந்த சீதையை, அயோத்திக்கு அரசியாகச் செய்தது பொருத்தம் இல்லை என்பதேயாகும். நாட்டு மக்களின் இத்தகைய கருத்தை இராமன் அறிந்தபோது பெரிதும் வருந்துகின்றான். சீதையின் கற்பில் எவ்வளவு மாசில்லை என்பதை அவன் உள்ளம் அறியும். பல்லாண்டு பழகிய இராமனுக்குச் சீதையின் கற்பில் சிறிதும் ஐயம் இல்லை. ஆயினும் தன் நாட்டு மக்களை அவ்வாறு நம்பச் செய்ய இயலாது. நாகரிகமும் அன்று. அரசனுக்குக்காதல் மிக்க மனைவியினும் நாட்டு மக்களே உயிராவர்; ஆதலின், குற்றமற்ற சீதையைத்-தன் குலம் விளக்கும் கருவினைக் கொண்டுள்ள சீதையை-வனத்தில் விடுத்து நாட்டு மக்களின் குறையைப் போக்குவதே கடமை; என்ற உணர்ச்சி மேலிட்டுத் தன் உயிரினுமினிய சீதையை - பிரிய இயலாச் சீதையை வனத்தில் கொண்டுபோய் விடச் செய்கின்றான். இதனால் நல்லரசனின் ஆட்சி இத்தகையது என்பதைக் காட்டி, காதல் மனைவியினும் நாட்டு மக்கள் கருத்தையே பெரிதென மதித்த இராமனது சீரிய கொள்கையை உலகிற்கு எடுத்துக் காட்டுவது, உத்தரகாண்டத்தின் தனித்தன்மையாகும். இங்கு இங்கிலாந்தின் அரச குடும்பத்தில் பிறந்து எட்டாம் எட்வர்டு சக்கரவர்த்தியாய்ப் பட்டம் ஏற்கத் தகுதியுடைய வின்சர்கோமகன், காதலியையே சிறப்பாக

மதித்து, தன்னாட்டினை - அரசாட்சியை- மதியாது விடுத்த நிலையினையும், இங்கு நினைவுகூர்ந்தால், இராமனின் பெருமை புலப் படும்.

ஒரு நூலின் பெருமையையும், பழமையையும் புலப்படுத்துவது, அந்நூலினை எடுத்தாளும் புலவர்களேயாம். பன்னிரண்டாம் நூற்றாண் டில் வாழ்ந்த ஒட்டக்கூத்தரால் இயற்றப்பெற்ற உத்தரகாண்டம், பதினான்காம், நூற்றாண் டில் வாழ்ந்து சிலப்பதிகாரம் என்னும் செந் தமிழ்க் காப்பியத்திற்கு உரைவரைந்த, அடி யார்க்கு நல்லார் என்ற பெரும் புலவரால் உரையில் மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள் ளது என்பது, அவ் உத்தரகாண்டத்தின் பெரு மையை - பழமையை மலைவிளக்காக்கியது எனலாம்.

இராவணனின் சிற்றன்னையாகிய கும்பி நசி என்பவளை, மது என்னும் அசுரன், ஆளற் றம் பார்த்துக் கவர்ந்து சென்ற செய்தியை, வீடணன் வாய்க் கேட்டுச் சினமிக்கு நால்வகைப் படையோடும் அம்மதுவின் மேல் போர்க்குப் புறப்பட்டு வந்த இராவணனை வணங்கி, கும்பி நசி புலம்பிச் சொல்லும் கருத்து, பாராட்டு தற்குரிய கருத்தாக அமைந்துள்ளது. இராவ ணன் வரத்தாலும் வலிமையாலும் படைபலத் தாலும் மிக்கவன்; அவன் போர்க்கு வந்தால் தன்னை இராக்கத மணமுறையில் மணந்து கொண்ட மது என்னும் தன்கொழுநன் மாண்டு போதல் உறுதி; இதைத் தெளிந்த கும்பிநசி, இராவணனின் திருவடியில் வீழ்ந்து அழுது கொண்டு சொல்கின்றாள் :

''மக்களிழந்த இடும்பையினும்
மனையாளிழந்த இடும்பையினும்,
மிக்க இடும்பை வேல்வேந்தே!
விதவை யிடும்பை யெனவிளம்பத்
தக்க அதனால்என் கழுத்தில்
தாலி நீ தந்தருள்''
—திக்கவிசய ப.38

என்பது அவள் வேண்டுகோளாகும். நம் நாட்டுப் பெண்டிர் கணவனுக்குப் பின்பு இருந் தால் அவர்கள் அனுபவிக்கும் அவலநிலையை இப்பாடல் நன்கு புலப்படுத்துகின்றது. இப் பாடலின் கருத்தாழத்தை யறிந்த அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரப் பதிகத்தில் ''ஆரஞர் உற்ற வீர பத்தினி'' என்ற அடியின் உரையில், ''ஆரஞர்-பெரியவருத்தம்; அஃதாவது கண வனை இழத்தல்'' என்று விளக்கம் கூறிவிட்டு 'மக்களிழந்த இடும்பையினும்' என்று தொடங் கும் இப்பாடலை மேற்கோளாகக் காட்டியுள் ளார் என்பது, நினைவில் கொள்ளத்தகும். இத னால் அடியார்க்கு நல்லார் காலத்திலேயே, இவ்வுத்தர காண்டம் புலவர் போற்றும் புகழ் படைத்திருந்தமையும், இப்பாடலின் அருமை அறிஞர்களால் உணரப்பட்டிருந்தமையும், நன்கு புலப்படும்.

இராவணன் பிறப்புப் படலத்தில், ஒரு பெண்ணுக்குக் கணவனாக வருபவன் என்ன என்ன வகையில் சிறப்புடையவனாக இருக்க வேண்டும் என்று, குலத்துளோரும் தந்தையும் தாயும் மணமகளும் எதிர்பார்ப்பார்கள் என் பதை, ஒட்டக்கூத்தர் மிகப் பொருத்தமாகச் சிந்தித்துச் சொல்கின்றார். ஒவ்வொருவர் மனமும் ஒவ்வொரு வகையில் எதிர்பார்க்கும். ஒரு குலத்துப் பெருமக்கள், அந்தப் பெண்ணை மணப்பதற்கு வருபவன், நல்ல குலத்துப் பிறந்த வனாக இருக்க வேண்டும் என்று எண்ணுவார் களாம். மணமகனின் கல்வியைப் பற்றியோ, செல்வநிலையைப் பற்றியோ, அவனழகும் இளமையும் பற்றியோ, குலத்துளோர் சிந்திக்க மாட்டார்களாம். அவர்கள் நோக்கமெல்லாம் மாப்பிள்ளை நல்லகுடிப் பிறப்புள்ளவனாக இருக்க வேண்டும் என்பதேயாம்.

ஆனால், பெண்ணின் தந்தையோ, தன் மகளை மணக்க வருகின்றவன் கல்வியறிவு நிரம்பியவனாக இருக்க வேண்டும் என்று, கல்வியறிவு ஒன்றினையே நோக்குவானாம். மணமகனது குலம், செல்வம், அழகுபற்றி ஒன்றும் சிந்திக்க மாட்டானாம். ஆனால் பெண்ணைப் பெற்ற தாயுள்ளமோ, தன் பெண் ணுக்குக் கொழுநனாகவருகின்றவன், கொழுத்த செல்வமுடையவனாக இருக்கவேண்டும் என்றே விரும்புமாம். மணமகனின் குலம் பற்றியோ, கல்வி நலம் பற்றியோ, அழகு பற்றியோ அத் தாயுள்ளம் சிந்திப்பதில்லையாம். ஆனால் மணமகளோ, தன்னை மணக்கவரும் கொழு நன், இளமையும் எழிலும் உடையவனாக இருக்கவேண்டும் என்ற ஒரே நோக்கமே உடைய வளாக இருப்பாளாம். குலமும் கல்வியும் செல்வமும் பற்றி மிகுதியாகச் சிந்திக்கவே மாட்டாளாம்.

மணகனைத் தேர்ந்தெடுப்பதில் குலத் தோரும் தந்தையும் தாயும் மணமகளும் கொள் ளும் மனநிலையை நன்காராய்ந்து ஒருவரோடு ஒருவர் வேறுபட்ட கருத்தினராயேயிருப்பர் என்பதை :—

குலம்வேண்டும் என்றிருப்பர் குலத்துள்ளார்:
கல்வியினாற் குறையா ஞானப்
பலம்வேண்டும் என்றிருப்பர் தந்தைமார்;
பரந்தபெருஞ் செல்வ முள்ள
தலம்வேண்டும் என்றிருப்பர் தாய்மார்கள் ;
யவ்வனமும் அழகும் சார்ந்த
நலம்வேண்டும் என்றிருப்பர் நறியகுழற்
கன்னியர்கள் நலத்தின் மிக்கார்
—(இராவணன் பிறப்பு—60)

என்று ஆசிரியர் ஒட்டக்கூத்தர், நன்கு தெளி வாக்கியுள்ளார். மணமகனுக்குக் குலநலமும் கல்விநலமும் செல்வநலமும் இளமையழகு நல மும் ஆகிய நான்கும் இருந்தாலொழிய, இந்த நால்வகையினரையும் மனநிறைவு செய்யவிய லாது என்பது தெளிவு. மண்டோதரியைப் பெற்ற மயன் இந்த நால்வகையாரின் மன நிலைய நினைத்தே, இவ்வாறு சொல்கின்றான். இந்த நால்வகைச் சிறப்பும் நிரம்பிய மண மகன் இவ்வுலகத்தில் கிடைத்தல் அரிது ஆத லின், பெண்ணைப் பெற்றவர் அடையும் பெருந்துயரையும் பேசுகின்றான்.

''இந்நான்கும் உடையாரைக் கிடையாதிவ்
வுலகந்தன்னில் என்றால், அந்தோ
பெண்பெறுகை தனைப்போலப் பெரியதுயர்
தானுண்டோ பேசுங்காலே''

என மயன் மனம்நொந்து கூறியிருப்பது, இக்காலத்து வாழ்வோர்க்கும் பொருந்திய சொல்லாக அமைந்துள்ளது காணலாம். ஒரு பெண்ணைப் பெற்றவனே இப்படிச் சொல்வானாயின், பெண்கள் பலரைப் பெற்றவர் துயரம் சொல்லில் அடங்குமோ ?

ஆண் மகனாகப் பிறந்தவர்கள், பிறந்த வீட்டுக்கு மட்டுமே விளக்கம் தருவார்கள்; ஆனால், பெண்ணாகப் பிறந்தவர்கள் பிறந்த குடியும், புக்க குடியும் விளக்கமுறச் செய்வார்கள் என்பார்கள். இந்நூலாசிரியர் அதற்கு மேலும் ஒன்று கூட்டிச் சொல்கின்றார். ''பெண் பிறக்கத் தந்தை குலமும், தாய்க்குலமும் புக்க குலமும் இவை விளங்கும்'' எனச் சுமாலி தன் மகள் கைகசியைப் பார்த்துக் கூறியதாகச் சொல்கின்றான். பெண்ணுக்குத் தந்தை மரபும், தாயின் மரபும் வெவ்வேறு ஆதலின், அவ்விரு மரபும் ஒரு பெண்ணின் ஒழுக்கத்தால் பெருமை பெறும் என்பதை இங்கு விளக்கி, ஆண்மகனைக் காட்டிலும் பெண்ணாகப் பிறந்தவளின் பெருமையைச் சிறப்பித்துக் காட்டியுள்ளார் ஒட்டக் கூத்தர்.

இராவணன் எமனோடு போர் செய்யச் செல்கின்ற பொழுது, எமலோகத்தில் உள்ள சுவர்க்க நரகக் காட்சிகளையும் காண்கின்றான். பெண்ணாசை நீங்கினவர்களும், உடம்பின் நிலையாமையை உணர்ந்து அறங்களைச் செய்தவர்களும், நல்ல நெறியில் வாழ்க்கையை நடத்தினவர்களும், சுவர்க்கத்தில் இனிமையாக வீற்றிருப்பதைக் காண்கின்றான். மற்றும் பூதானம், கோதானம், போன்ற தானங்களைச் செய்தவர்கள். பசிப்பிணி தீர அன்னதானம் செய்தவர்கள், சுவர்க்கத்தில் வீற்றிருக்கின்றார்கள். தவமுனிவர்கள் தங்குவதற்கு மடம் கட்டிக் கொடுத்தும், மறைநூலுணர்ந்த அந்தணர்க்கு மனைகளைக் கட்டிக் கொடுத்தும், வேனிற் காலத்தில் மக்கள் தாகம் தணியுமாறு தண்ணீர்ப் பந்தல் வைத்தும், குளிர் காலத்தில் துறவியர்க்குப் போர்வையினைக் கொடுத்தும், விருந்தினர்கள் தங்குவதற்கு இடமளித்தும் உதவுகின்ற புண்ணியவான்கள், சுவர்க்கத்தில் அழகிய மணி மண்டபத்தில் இனிதாக வீற்றிருத்தலைக் காண்கின்றான்.

நீதிமன்றத்தில் வழக்குரைக்க வருபவரிடம் பணம் பறித்து உண்டவர்களும், பொய்வழக்கை மன்றத்தில் உரைத்தவர்களும், தன் மனைவியோடு மனம் ஒன்றி வாழாமல், தனக்கு வரும் பழியும் பாவமும் பாராமல், பிறர்மனைவியரை விரும்பிக்கூடி மகிழ்பவர்களும்; உயிரைக் கொன்று அதன் உடம்பைத் தின்றவர்களும், பிறர் குற்றம் கூறுபவர்களும், நன்றி மறந்தவர்களும் நரகத்தில் கிடந்து துன்புற்று நடுங்குவதை, இராவணன் காண்கின்றான். பசுவதை சிசுவதை முதலிய பெரிய பாவத்தைச் செய்தவர்கள், அங்குத் துன்பத்தால் பதைபதைப்பதையும், இறைவன் திருநாமத்தைச் சொல்லாத பாவிகள், தங்கள் வாய்வழியாகப் புழுக்களைச் சொரிந்து கொண்டு, நரகத்தில் கலங்குவதைக் காண்கின்றான்.

எமதருமனின் உலகக் காட்சியை, இராவணன் காண்கின்ற முறையில், நமக்குப் புலவர் கூறுவன சிறப்பாக உள்ளன. உத்தரகாண்டத்தில் இத்தகைய காட்சிகளைக் காட்டுதல், மக்கட்கு நலமிகப் பயக்கும் என்று கருதி, ஒட்டக் கூத்தர் இங்ஙனம் காட்டுகின்றார் எனலாம்.

உத்தரகாண்டத்தில் இராமன் அசுவமேத யாகம் செய்ததும், அந்த யாகத்திற்குக் குசலவர்கள் வந்து இராமன் கேட்குமாறு வான்மீகியின் இராமாயணப் பாடல்களைப் பாடியதும், பாடியவர்கள் தம்மக்களே என்பதையுணர்ந்த இராமன் வான்மீகிக்குத் தூதுவனை அனுப்பிச் சீதையை வரவழைத்ததும், அச்சீதை மீண்டும் உறுதியான கற்புள்ளவள் என்பதைக் காட்ட வேண்டும் என இராமன் கூறியபடி தன் கற்பினை நிறுவிப் பின் பூமிதேவியின் அணைப்பில் மறைந்ததும் ஆகிய, நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளன.

இறுதியில் சந்திரகேது நகர்ப்படலத்தில், இராமன் தன்னரசைத் தன் மக்கள் குசலவர்களுக்குக் கொடுத்தலும், பிறகு தானும் தம்பியரும் நாட்டு மக்களுமாகச் சரயுவில் மூழ்கி வைகுந்தம் அடைதலும் ஆகிய நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளன. இராமன் வரலாறு உத்தர காண்டத்தில் நன்கு நிறைவுறுகின்றது. அவன் பழைய தெய்வ வடிவில் வைகுண்டம் எய்துகின்றான்.

உத்தரகாண்டத்தில் வரும் செய்யுட்களின் அழகும், சந்தமும், இனியநடையும், புலவர்களின் உள்ளங் கவர்வனவாகும். உவமைகள் உருவகங்கள் தற்குறிப்பேற்றங்கள் போன்ற அணிகள் நன்கு அமைந்துள்ளன. நகைச்சுவை முதலிய சுவைகளும் நிரம்பியுள்ளன. இராமாயணத்தில் உத்தர காண்டமும், பெருமைமிக்க காண்டம்-தெய்வத் தன்மை மிக்க காண்டம் என்பது மேலோர் கருத்தாகும்.

ஆண்டாள் நாச்சியாரின் வாக்கும் வாழ்வும்

பேராசிரியர் திரு. கா. அ. மணவாளன், எம்.ஏ.,
வைஷ்ணவக் கல்லூரி, சென்னை.

ஆண்டவன் அன்புப் பூஞ்சோலையிற் பூத்த ஒரு கற்பகமலர் ஆண்டாள். திருமால் சூடிக் களைந்த திருத்துழாய் மாலையைத் தங்கள் சென்னிக்கு அணியாகச் சூடுவார்கள் தொண்டர்கள். ஆனால் ஆண்டாள் சூடிக் களைந்த துழாய் மாலைக்குத் திருமாலே ஆசைப் பட்டான் என்றால் ஆண்டாளின் பெருமையை என்னென்று கூறுவது!

ஆண்டாளுக்கும் ஆழ்வாருக்கும் பலவகையில் வேற்றுமை உண்டு. இவ்வுலகத் துன்பங்களில் உழன்று உறங்கிக் கிடந்த ஆழ்வார்களை இறைவன் எழுப்பி, ஞானம் கனிந்த நலங்களால் உய்வித்தான், ஆனால் ஆண்டாளோ எம்பிரான் திறத்து ஆராத பக்திக் காதலுடன் ''உம்பர் கோமானே உறங்காது எழுந்திராய்'' என்று அவனையே எழுப்பினாள். மேலும் ஆடவரை ஆடவர் கண்டு காமுறுவதைவிடப் பெண்கள் கண்டு காமுறுவது மிகவும் பொருத்தமாகும். கடவுளைத் தலைவனாகவும் தங்களைத் தலைவியர்களாகவும் பாவித்துக் கொண்டு, ஆழ்வார்கள் பாடிய பாடல்களைக் காட்டிலும் இயற்கையிலேயே பெண்தன்மையுடைய ஆண்டாள் பாடிய தலைவிப் பாசுரங்கள் சிறந்தனவன்றோ? எனவே ஆண்டாளுடைய தெய்வீகக் காதல் பள்ளமடை, ஆழ்வார்களுடைய புனிதக் காதல் மேட்டுமடை என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

ஆறு, பெருங்கடலை நோக்கிப் பாய்கிறது. தாமரை கதிரவனை நோக்கி மலர்கிறது. அதுபோல ஆண்டாளுடைய மனம் ஒண்தாமரையாள் கேள்வனாகிய திருமாலையே நாடுகிறது. திருவில்லிபுத்தூரில் திருத்துழாய்ச் செடியின் அடியில் கண்டெடுக்கப்பட்ட ஆண்டாள் அத்திருத்துழாய் போலவே மணத்தோடு விளங்கினாள். வளர்ப்புத் தந்தையான பெரியாழ்வார், தம் மகளுக்கு நல்ல வரன் கிடைக்க வேண்டுமே என்று கவலைப்பட்டார். நன்முறையில் திருமணத்தை மிகவும் விமரிசையாகச் செய்யவேண்டும் என்றும் பாரித்திருந்தார். ஆனால் ஆண்டாளோ இறைவனுக்கென்றே படைக்கப்பட்டவளாகத் தன்னைக் கருதுகிறாள். ''மானிடவர்க்கென்று பேச்சுப் படில் வாழகில்லேன்' என்று வெறுத்துக் கூறுகிறாள். பாவம் பெரியாழ்வார் என்ன செய்வார்?

தான் விரும்பும் கண்ணனை இதற்கு முன்பு யாரேனும் கண்டு அனுபவித்திருக்கிறார்களா என்று சிந்தித்தாள். திருவாய்ப்பாடியிலுள்ள ஆயர் மங்கையர் அக்கண்ணனுடன் கலந்து களித்தார்கள் என்பதைப் பெரியோர்கள் சொல்லக் கேட்டாள். ஆனால் அக்கலவி எப்பொழுதோ நடந்ததாகையால், இப்பொழுது யாது பயன் என்று வாளாவிருந்தாள். ஆயினும் நாளுக்குநாள் அக்கண்ணன்மேல் காதல் அதிகமாயிற்று. ஆண்டாள் ஓர் உபாயம் செய்தாள். அக்கண்ணன் உலாவிப் போன அடிச்சுவடும், அவன் கோபிமார்களோடு திளைத்த யமுனையாறும், குடையாகப்பிடித்த கோவர்த்தனகிரியும் கிடந்தனவாகில், அவற்றைக் கொண்டாகிலும் அவனை அடையலாம் என்று முடிவு செய்தாள். ஆயினும் அக்கண்ணன் பிறந்த வடமதுரையும், அவன் விளையாடிய கோகுலமும் வடக்கே வெகு தொலைவிலிருந்ததால் அவளால் அங்குச் செல்ல முடியவில்லை. மனம் தேறி இருக்கவும் முடியவில்லை.

ஆதலால் ஆண்டாள் தான் பிறந்த வில்லிபுத்தூரையே திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள இறைவனாகிய வடபெருங்கோயிலுடையானையே கண்ணனாகவும், தன்னை இடைக்குலப் பெண்ணாகவும் பாவனை செய்து கொண்டு, தோழியருடன் மார்கழி நோன்பிருக்கத் தலைப்பட்டாள். பொழுது விடியு முன்னே ஒவ்வொரு வீடாகச் சென்று ஆயர் சிறுமியரை எழுப்புகிறாள். முடிவில் ஆண்டவனை அடைவதுதான் ஒவ்வொருவரின் குறிக்கோளாய்த் திகழ வேண்டும் என்பதையும், மற்ற காமங்களை மாற்றி இறைவனின் திருவடிகளைப் போற்ற வேண்டும் என்பதையும்

உணர்த்தித் திருப்பாவை யாகிற நோன்புப் பாடல்களை முடித்துள்ளாள்.

ஆண்டவனையே, கண்ணனையே கணவனாகப் பெறவேண்டுமென்று விரும்புகிற ஆண்டாள், அவன் கலவி கிடைக்காமையால் வருந்துகிறாள். உலகில் காணும் காதல் நெறியைத் துன்பமும் இடையூறும் பொருந்திய தென்றால் ஆண்டாள் பரமனிடம் கொண்ட காதல் அவளுக்கு எவ்வளவு பெருந் துன்பத்தைக் கொடுத்திருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? ஆயர்பாடிக்கு அணிவிளக்காக விளங்கிய எம்பெருமான் இந்த ஆண்டாளுக்கு அல்லல் விளைத்த பெருமானாக விளங்கினான்.

அப்படிப்பட்டவனை மறந்திருக்க முயன்றாலும் முடியவில்லை. அம் மாயக் கண்ணன் எப்படியோ அவள் நெஞ்சத்துள் புகுந்து அவளைத் தழுவிக் கொள்கிறான், அணைத்துக் கொள்கிறான், சுற்றிச் சுற்றி வருகிறான். அவளால் விழித்திருக்கவும் முடியவில்லை, உறக்கம் கொள்ளவும் முடியவில்லை.

அழிலும் தொழிலும் உருக்காட்டான்
அஞ்சேல் என்னான் அவனொருவன்
தழுவி முழுகிப் புகுந்தென்னைச்
சுற்றிச் சுழன்று போகானால்''

என்று வேதனையோடு பாடியுள்ள இவ்வரிகள் ஆண்டாளுடைய உள்ளக்கிடக்கையை நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன.

இவ்விதம் கண்ணனின் கலவி கிடைக்காமல் கஷ்டப்படுகிற ஆண்டாள், எப்படியோ ஓரிரவு உறங்கிக் கனவும் கண்டுவிட்டாள். பெரியாழ்வாரின் வீட்டு வாசலில் பெரிய பூப்பந்தல்கள் போடப்பட்டன. வாழைகளும் கமுகுகளும் அணி அணியாக நாட்டப்பட்டன. தோரணங்கள் கட்டப்பட்டன. எங்கும் முத்துமாலைகள் தொங்கின. பூரண கும்பங்களும், பொற்பாலிகைகளும் வைக்கப்பட்டன. முகூர்த்தம் நெருங்கிவிட்டது. தன்னை மணக்கத் தான் விரும்பும் மணவாளன் வருவானோ வாரானோ என்று வேதனைப்பட்டாள். விரக வேதனையால் கைகளினின்றும் வளையல்களை விழாமல் பிடித்துக் கொண்டாள்.

''வந்தானோ திருவரங்கன் வாரானோ
என்றென்றே வளையும் சோரும்''

என்ற வரிகள் அவள் அடைந்த துன்பத்தைக் காட்டுகின்றன. ஆனால் கண்ணன் அவளைச் சோதிக்கவில்லை. மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றுஊத, அழகிய மணவாளனாகக் காளையாக அவன் பந்தலுக்குள் நுழைந்தான். ஆண்டாளின் கையைப் பிடித்தான். பின்பு அவள் காலையும் பிடித்து அம்மி மிதிக்கச் செய்தான். அலங்கரிக்கப்பட்ட யானையின் மேல் மண்ணும் விண்ணும் களிக்க ஊர்வலம் நடந்தது. எங்கும் மங்கல ஒலி. ஆண்டாள் கண்விழித்தாள். தான் படுக்கையில் கிடப்பதையும் அருகே அருமைத் தோழி இருப்பதையும் உணர்ந்தாள். உடனே அத்தோழியைக் கெஞ்சிப் பிடித்துத் தான்கண்ட ஆனந்தக் கனவை ''வாரணமாயிரம் சூழ வலம்செய்து, நாரணன் நம்பி நடக்கின்றான்'' என்று தொடங்கிப் பத்துப்பாடல்களாலே விவரித்தாள்.

ஆண்டவனைக் கண்டு மணமாலை சூடக் கருதிய ஆண்டாளுக்கு, அவன் கனவுதான் கிடைத்ததே தவிர நேர்க்காட்சி கிடைக்கவில்லை. அதனால் என்பெல்லாம் உருகி இளைத்தாள். கண்கள் இமைக்காமல் பல நாள் நொந்தாள். துன்பக் கடலில் துவண்டாள். அக் கடலினின்றும் கரையேற 'வைகுந்தன்' என்னும் தோணி (படகு) பெறாது உழன்றாள். இவ்விதம் தான்படும் வேதனையைத் தன்னால் வளர்க்கப்பட்ட குயிலும் கிளியும் நன்கு அறியும் அன்றோ! என்று அவைகளிடம் முறையிடுகிறாள். மாதவனை வரக்கூவாய், புண்ணியனை வரக்கூவாய் என்று புலம்புகிறாள்.

என்புருகி இனவேல் நெடுங் கண்கள்
இமைபொருந்தா பல நாளும்
துன்பக்கடல் புக்கு வைகுந்தனென் பதோர்
தோணி பெறாது உழல்கின்றேன்
அன்புடை யாரைப் பிரிவுறு நோயது
நீயும் அறிதி குயிலே!
பொன்புரை மேனிக் கருளக் கொடியுடைப்
புண்ணியனை வரக்கூவாய்

என்று புலம்புகிறாள். இப்பாட்டில் ஆண்டாளுடைய உணர்ச்சி வெள்ளம் சுழித்தோடுவதைக் காணலாம். இவ்விதம் குயிலைத் தூதுவிட்டஆண்டாள் பின்பு மேகத்தையும் தூதுவிடக் கருதுகிறாள். அந்த மேகங்களுக்குத்தான் அவனைப் போன்ற கருநீல நிறம் எவ்வாறு வந்தது என்று சிந்திக்கிறாள். பின்பு ஆகாசமெங்கும் நீலநிறமான ஒரு மேற்கட்டு கட்டியிருப்பது போல விளங்கும் மேகங்களே என்று விளிக்கின்றாள். அப்படி அவள் மேகங்களை விளிப்பதற்கு அழகான காரணமும் உண்டு. அம்மேகங்கள் தன்னுடைய காதலனுடைய திறத்தையும், குணத்தையும் பெற்றிருக்கின்றன அல்லவா? ஆதலினால் தன் காதலன் நிறத்தையுடைய அவைகளைத் தன்னுடைய விரகவேதனையை எடுத்துச் சொல்லி, ஒரு அபலைப் பெண்ணின் நீர்மையை அழிப்பது நியாயமா? என்று கேட்கச் சொல்கிறாள்?

விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்
பெண்ணீர்மை ஈடழிக்குமது நுமக்கோர்
பெருமையே''

என்று பாடியுள்ளாள். மேலும் தன்னால் தூதாக அனுப்பப்படும் மேகத்தை ஆண்டாள் போற்றியிருக்கும் பாங்கும் போற்றத் தக்கதாகும். ''மா முத்தநிதி சொரியும் மாமுகில்காள்'' ''மதயானை போலெழுந்த மாமுகில்காள்'' ''தேன்கொண்ட மலர் சிதறப் பொழிவீர்காள்' என்ற தொடர்கள் உள்ளத்தைத் தொடுவனவாக அமைந்துள்ளன.

இவ்விதம் தூது விட்டும் அவைகளால் நற்பயன் விளையாததால், ஆண்டாள் அவனைப் பிரிந்து தரிக்கமாட்டாமல் வாடுகின்றாள். அவ்வாறு வாடிக்கிடக்கும் அவள் உடம்பில் அக்கண்ணனோடு தொடர்புள்ள பொருள்களைக் கொண்டு வீசினால் அவ்வாட்டம் தணியும் என்பதை உணர்கிறாள். அந்த அனுபவத்தை அவள் பாட்டாக வடித்துக் காட்டியுள்ளாள்.

கண்ணனென்றும் கருந்தெய்வம்
காட்சிப் பழகிக்கிடப்பேனை
பீதக வண்ணவாடை கொண்டு
என்னை வாட்டம் தணிய விசிரே''

என அப்பாட்டில், ஆண்டவனைப் பிரிந்து உளம் வருந்தும் பக்தருடைய அனுபவத்தைக் காண்கிறோம்.

ஆண்டாள எப்படியும் தான் விரும்பும் காதலனை அடைந்தே தீருவது என்று முடிவு செய்துவிட்டாள். நல்லமுறையில் அக்கண்ணனிடம் தன்னைக் கொண்டு சேர்த்து விடும்படி உற்றாரையும் தாயாரையும் வேண்டுகிறாள். இல்லையேல் தாய்தந்தையர் இருக்க இப்பெண் அவனோடு தனியாகப் போய்விட்டாள் என்ற பழிச்சொல் வரும் என்று எச்சரிக்கிறாள். அம்மாயவன் அடிக்கடி வந்து உருக்காட்டிச் செல்வதையும் கூறுகிறாள். ''நந்தகோபாலன் கடைத்தலைக்கே நள்ளிருட்கண் என்னை உய்த்திடுமின்'' என்று அவள் கூறும் பாட்டின் அவலநயம் கண்டு போற்றத் தக்கதாகும்.

இனி ஆண்டாள் இறைவன் கையில் உள்ள சங்குசக்கரங்களை விளித்துக் கூறுவனவாக அமைந்துள்ள பாடல்களும், அவளுடைய நாவன்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குவதைக் காணலாம். தன் காதலனான கண்ணன் ஊதி வந்த வெற்றிச் சங்கைப் பார்க்கிறாள் ஆண்டாள். அந்தக் கண்ணனின் வாய்ச்சுவையை அந்தச் சங்கைவிட வேறு பொருள்கள் அவ்வளவு அறிந்திருக்குமா? என்று தோன்றுகிறது அவளுக்கு. அந்த இறைவனுடைய, கண்ணனுடைய வாய்ச்சுவையும், வாசமும் எப்படி இருக்கும் என்ற ஐயம்! தித்தித்திருக்குமோ என்று கேட்கிறாள், விருப்புற்றுக் கேட்கின்றேன், சொல் சங்கே என்கிறாள்.

கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும்
நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல் ஆழி
வெண்சங்கே

இவ்விதம் சங்கத்தமிழ் பாடிய ஆண்டாள், தன் உள்ளமாகிய கோயிலில் கண்ட கண்ணனை அரங்கமாநகரில் காண்கிறாள். அப்பெருமானுக்குச் சூடிக் கொடுத்த பூமாலையோடு பாமாலையையும் பாடிக் கொடுத்தாள். அத்தெய்வப் பாவையின் திருப்பாவையும், நாச்சியார் திருமொழியும், ஓசை இன்பத்திற்கும் கற்பனை வளத்திற்கும் பக்திப்பெருக்கத்திற்கும் ஊற்றாய் உதவி உலகை வாழ்வித்து வருகின்றன.

பட்டரும் ஆலவாயுடையானும்

கள்ளக் குறளாய் மாவலியை வஞ்சித் துலகம் கைப்படுத்துப்
பொள்ளைக் கரத்த போதகத்தின் துன்பம் தவிர்த்த புனிதன்இடம்,
பள்ளச் செறுவில் கயலுகளப் பழனக் கழனி அதனுள்போய்ப்
புள்ளுப் பிள்ளைக்கு இரைதேடும் புள்ளம் பூதங் குடிதானே

—பெரியதிருமொழி, 5:2.

என்னும் பாசுரத்தைப் பற்றி ஆலவாய் உடையான் என்பானொரு தமிழன், பட்டரிடம் வந்து ஒரு கேள்வி கேட்டான். ''பள்ளச் செறுவில் கயலுகள என்ற பொழுதே, அவ்விடத்து வயல்களில் மீன்கள் அளவற்றுக் கிடத்தல் தெளிவு. அங்ஙனமாகவும் இரை தேடும் என்றது எவ்வாறு பொருந்தும்? ஏராளமாக மீன்கள் இருக்கும்போது தேட வேண்டிய இன்றியமையாமை யில்லையே'' என்பது வினா. அதற்குப் பட்டர் பின்வருமாறு விடை கூறினார்.

'பிள்ளாய்! நீ கற்றறிந்தவனாகத் தோன்றுகின்றாய். ஆயினும், சொல்லமைப்பின் போக்கை அறிந்துணரும் திறம் பெற்றிலை. 'இரை தேடும்' என்று வாளா கூறாமல், 'பிள்ளைக்கு இரை தேடும்' என்றன்றோ ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். புள்ளம்பூதங்குடிக் கழனியில் உள்ள மீன்கள் நிலவள நீர்வளங்களால் தூணும் துலாமும்போலே தடித்திருக்கும். அவை பறவைக் குஞ்சுகளின் வாய்க்குப் பொருந்தமாட்டா. ஆதலின், உரிய சிறுசிறு மீன்களைத் தேடிப் பிடிக்க வேண்டுவது தாய்ப் பறவைக்குக் கடமையாயிற்று. அதனாலேயே 'இரை எடுக்கும்' என்னாது, 'தேடும்' என்று ஆழ்வார் பணித்தருளினார். இளம் மாணவர்கள் புரிந்து கொள்ளக்கூடிய செய்திகளையே, பெரு நூல்களாகிய கலைக் கடலினின்று ஞானாசிரியர்கள் தேடித் தேர்ந்தெடுத்து அறிவுறுத்தும் திறன், இப்பாடற் பகுதியின் உள்ளுறை பொருளாகும்.

—ஆசிரியர்.

சித்தமருத்துவத்தின் சிறப்பும் வரலாறும்

"மருதமலைச் சித்தர்"

திரு டாக்டர் கே. வி. கிரி, R.I.M.P., R.M.P.,

மருத்துவ அதிகாரி, மருதமலைக் கோயில், கோவை-41.

மனிதனின் அடிப்படைத் தேவைகளில், மிக முக்கியமானது மருத்துவம். உயிரினங்களின் வளர்ச்சிதொட்டே, பிணியின் வரலாறும் தொடங்கிவிட்டது எனலாம். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த புகழ் படைத்த தமிழ், ஆயகலைகள் அறுபத்தி நான்கினையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இவற்றுள் முதன்மையானதும் முக்கியமானதுமே மருத்துவக்கலை. இக்கலையே தமிழரின் தனிப் பெரும் மருத்துவமான சித்தமருத்துவம். சித்தமருத்துவத்தைத் தமிழ்நாட்டுவைத்தியம் என்றும் கூறுவர். நவகோடி சித்தரில் 18 சித்தர்களான அகத்தியர், திருமூலர், நந்திதேவர், மச்சமுனி, கருவூரார், கமலமுனி, இராமதேவர், பாம்பாட்டிச்சித்தர், காலாங்கி, சுந்தரானந்தர், ரோமரிஷி, யூகிமுனி, தேரையர் ஆகியோர் முதன்மையானவர்கள்.

சித்தர்களின் சிறப்பு :

சித்தி பெற்றவன் சித்தன். சித்தம் என்பதற்கு அறிவு என்றும் பொருள் உண்டு. ஆகவே சித்தர்கள் என்றால் அறிவு படைத்தவர்கள். நுண்ணறிவு படைத்தவர்கள், விஞ்ஞானிகள், மெய்ஞ்ஞானிகள் என்று பொருள் சொல்வதே பொருத்தமாகும். இத்தகு சிறப்புப்பெற்ற 18 சித்தர்கள் தத்தமது ஆராய்ச்சிகளை, கண்டுபிடிப்புகளைப் பாடல்களாகப் பாடியுள்ளனர். அவற்றில் மனிதன் நோய்நீக்கும் மருத்துவம் மட்டுமின்றி மனிதன் சாகாமல் நீண்டநாட்கள் வாழக் காயகற்ப முறைகளையும், யோகப் பயிற்சிகளையும் கூறியுள்ளனர். இக்காரணம் கொண்டே பாரதி, 'செத்தவர் தம்மை எழுப்பித் தருகின்ற சித்தர் பிறந்த தமிழ்நாடு' என்று கூறினார்.

சித்த மருத்துவம் தோன்றிய காலம் :

சித்த மருத்துவம் தோன்றிய காலத்தை எவராலும் அறுதியிட்டுக் கூற இயலாது. முதற் சங்ககாலமாகிய கி.மு. 1200 ஆண்டுக்கு முந்தியது என்பது கடைச்சங்கப் புலவர், மருத்துவன் தாமோதரனார் என்ற புலவரின் பாடல்களிலிருந்து தெரிகிறது.

சித்த மருத்துவத்தில் நோயை நிதானிக்கும் விதம் :

நோயின் குணங் குறிகளைக் கொண்டு நோய் இன்னதென்று தீர்மானிப்பது மேனாட்டு வைத்திய முறையான அலோபதி வைத்திய முறை. இம்முறைப்படி நோய் வெளிப்படையாகக் குணம் குறிகாட்டும் அளவுக்கு வளர்ந்த பின்னர்தான் நோய் இன்னதென்று நிதானிக்க முடியும். ஆனால் சித்த மருத்துவத்தில் மருத்துவர்கள் நாடியைப் பார்த்தே வியாதியையும், அதன் காரணத்தையும் அறிந்து கூறிவிடுவார்கள். சித்த மருத்துவத் துறையில் நாடிகளின் கணிப்பு மிக முக்கியமானது. வியாதிகள் தோன்றியபின் காண்பதைவிட நோய் காணுமுன் காட்டுவித்தல் ஆகிய அரிய குணம் நாடியிலுண்டு.

சித்தமருத்துவத்தில் நோய் அறியப் பரிசோதனை முறைகள்

நாடி, நோயாளியின் கண், நாக்கு, உடல், மலம், நீர் (சிறுநீர்), தொட்டுப்பார்த்தல், ஒலி (நோயாளியின் சப்தம்) என்ற எட்டுவகைத் தேர்வுகளால் சித்தமருத்துவர்கள் நோய் கண்டறிந்து நோயை நிதானிப்பார்கள். மற்றும் மூச்சு (சுவாசம்) இயங்கும் வகையைக்கொண்டே இன்னநோய்வரும் என்பதை அறிந்து, அந்நோயை வராவண்ணம் தடுத்துக் கொள்ளுகின்ற திறன்படைத்த யோகமுறைச் சித்தர்களும் இருக்கின்றனர். வலதுபுற நாசியில் (மூக்கில்) சரம் (சுவாசம்) நடைபெறுவதைச் சூரிய நாடி என்றும், இடதுபுற நாசியில் (மூக்கில்) சுவாசம் நடைபெறுவதைச் சந்திரநாடி என்றும் கூறுவர். இந்தச் சுவாசப் பயிற்சியால் தன்னிடம்வரும் நோயாளிக்கு நோய்தீரும் அல்லது தீராது என்றும், முற்காலத்தில்சித்த மருத்துவர்கள் கூறினார்கள். இன்றும் சரநூல் பயின்ற சித்தமருத்துவர்கள் கூறிவருவதைக் காணலாம்.

நாடி என்றால் என்ன? அதன் சிறப்பு யாது?

நாடி அறிந்தால் நமனை அறியலாம் என்பது ஆன்றோர் வாக்கு. சித்த மருத்துவத்தின் சிகரம் எண்வகைத் தேர்வுக்கு மிகவும் முக்கியமானது. நாடிபார்த்தல் ஆகும். உடலையும் உயிரையும் இணைத்து நடத்துகின்ற சக்தி எதுவோ அந்தச்சக்தியை நாடிக் கணிப்பதுவே, நாடி என்பது சித்த மருத்துவத்தின் அழுத்தமான முடிவான கொள்கையாகும். இதில் ஆங்கில மருத்துவமுறை அமைப்பாகிய இதயத் துடிப்பும், இரத்த அழுத்தம் முதலியனவும் இதனுள் அடங்கும். இவற்றிற்கு மேலாக வாதம், பித்தம், கபம் என்ற உயிர்த்தாதுக்களை மட்டுமே குறித்து அமையாமல் இந்த உடலுக்கும் - உடலுக்குள் உறையும் உயிருக்கும் உள்ள உண்மையான தொடர்பை இயக்கும் உயிர்நிலையைப் படம்பிடித்துக் காட்டுவதே நாடியாகும். இது இந்திய மருத்துவ முறைகளான சித்த மருத்துவம், ஆயுர்வேத மருத்துவம், யுனானி மருத்துவம் இவைகளில் தேர்ச்சிபெற்ற மருத்துவர்களுக்கு மட்டுமே தெரிந்த ஒன்றாகும்.

நோயாளியின் உடல்வன்மையும் மருத்துவமும்:

நாடியால் நோயைக் கணித்தால் மட்டும் போதாது. மருத்துவம் செய்வதற்கு முன்னதாக நோயாளியின் திடம் (வலிமை) எத்தகையது என்பதை முதலில் கருத்திற்கொண்டு சிகிச்சையளித்தால்தான் அவனது உடலுக்கு எத்தகைய மருந்துகள் கொடுக்கலாம் என்பது தெரியும்.

நோயாளியின் உடல்வன்மையில் மூன்று பிரிவுகள்

ஒவ்வொரு மனிதனுடைய வலிமையையும் மூன்றுவிதத்தில் நோக்க வேண்டும். அவை (1) இயற்கைவன்மை. இது தாய் தந்தையர்களின் உடல் நலனுக்கு ஏற்பக் குழந்தைகளுக்குப் பிறப்பிலேயே இயற்கையாக அமையக்கூடிய வன்மை.

காலவன்மை:

ஒருவன் தன் வயதிற்கும் பருவ காலங்களான கார்காலம், கூதிர்காலம், முன்பனிக் காலம், பின்பனிக்காலம் இவைகளின் மாறுதல்களுக்கும் ஏற்ப அமைந்திருக்கிற வன்மை. இதில் சோதிட கிரக காலங்களும் தொனிக்கின்றன.

செயற்கை வன்மை

இயற்கை வன்மை காலவன்மை இவற்றால் உடல்வன்மை நன்கு அமையாத நிலையில் மருந்து உணவு முதலியவற்றால் ஒருவன் அடைந்திருக்கும் வன்மை செயற்கை வன்மையாகும். இதனையே திருக்குறளில் வள்ளுவர் 'உற்றான் அளவும் பிணியளவும் காலமும் கற்றான் கருதிச் செயல்' என்கிறார்.

சித்த மருத்துவத்தில் சிகிச்சை முறைகள் :

சித்தமருத்துவத்தில் சிகிச்சை முறைகள் மூன்று. அவைகள் தேவசிகிச்சை, மனித சிகிச்சை, அசுரசிகிச்சை என்பன. அவற்றில் தேவசிகிச்சை என்பது பாதரசம், கந்தகம்,முதலிய தாதுப்பொருட்களைச் சுத்திசெய்து,அதன் மூலம் தயார்செய்த பற்பம், செந்தூரம், சுண்ணம், கட்டு, பதங்கம் போன்றவைகளாகச் செய்து அதன்மூலம் சிகிச்சை அளிப்பது. இம்முறையே சித்தமருத்துவர்களின் முக்கிய சிகிச்சையாகும். அடுத்து மனித சிகிச்சை என்பது மூலிகைகளைக்கொண்டு சூர்ணம், குடிநீர் முதலியன செய்து அதன்மூலம் சிகிச்சை அளிப்பது. இது சாதாரணமாகக் கிராமங்களில் இன்றும் வயது முதிர்ந்த பெரியவர்கள் வீட்டுவைத்தியமாகக் கையாண்டு வருகின்றனர். மூன்றாவதாக அசுர சிகிச்சை என்பது, இரண சாஸ்திரங்களைக் கற்று (அகத்தியர் அறுவை மருத்துவ ஏடுகளைக் கற்று) அதற்குரிய உபகரணங்களைக்கொண்டு கீறல், ஊசிகளைக்கொண்டு பீச்சுமுறையில் மருந்து ஏற்றல், கட்டிகள்,பிளவைகள் முதலியவற்றைக் குணமாக்குதல். இது ஏறக்குறைய 500 ஆண்டுகளுக்கு முன்பே தென்னாட்டில் பழக்கத்திலிருந்து வருகிறது. அகத்தியர் அசுர மருத்துவ சிகிச்சையிலே அறுவை மருத்துவம் செய்து தேரையர் தலை, மண்டையோட்டினைப் பிளந்து உள்ளிருந்து தேரையை அகற்றியதாகவும், அதன் காரணமாகவே தமது சீடருக்குத் தேரையர் எனப் பெயரிட்டார் என்று அகத்தியர் அசுர சிகிச்சைகையேடு கூறுகிறது.

இதில் தேவசிகிச்சை முறை ரசாயனக் கலப்பு சிகிச்சையாதலால், இக்கால நவீன மருத்துவமான ஆங்கில முறை மருத்துவத்தை ஒத்திருக்கின்ற காரணத்தால் அதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

தேவசிகிச்சை, மனிதசிகிச்சை, அசுர சிகிச்சை மூன்றையும் கலந்து, இன்றுள்ள அடிப்படைச் சித்த மருத்துவசிகிச்சை முறை:

1. ஒப்புரை: நோய்க்கு ஒத்த குணமுடைய மருந்துகளைக் கொடுத்துப்பிணியகற்றுவது
2. எதிருரை: நோய்க்கு நேர் எதிர் குணமுடைய மருந்துகளைக் கொடுத்துப் பிணி அகற்றுவது

3\. கலப்புரை: மேற்கூறிய இரண்டுவித மருந்துகளையும் கலந்து கொடுத்துப் பிணியகற்றுவது.

சித்த மருத்துவர்கள் பெரும்பாலும் மூலிகைகள், உபரசங்கள், உலோகங்கள் பாடாணம் போன்றவற்றை அவற்றின் நச்சுத்தன்மை நீங்குமாறு சுத்திசெய்து தூய்மையாக்கி, சூர்ணம், பற்பம், கியாழம், செந்தூரம், சுண்ணம் லேகியம், மாத்திரை, எண்ணை இவைகளாக மாற்றிக்கொடுத்துச் சிகிச்சை அளிப்பார்கள். இடத்தைவிட்டுப் புண்ணிய ஸ்தல யாத்திரை போகச் சொல்வதும், உடல் பிணியாளர்களுக்கு மருத்துவம் செய்வதும் வழக்கமாகக் கொண்டார்கள் சித்த மருத்துவர்கள்.

மேற்கண்ட அடிப்படைப் பிடிப்புள்ளதும், நவீன விஞ்ஞானத்தை உள்ளடக்கியதும் பல ஆயிரம் வருடங்களுக்கும் முன்னால் மனித இனத்துக்கு உடல்நோயை அகற்றவும், பலத்தைக்கொடுத்துத் திடமாக உடலைப் பெறவும் நம் தமிழ்நாட்டுச் சித்தர்களால் உருவாக்கப்பட்டு, இன்று நவீன மருந்துகளைப்போல், அரசினர் மருத்துவமனைகளில் தனி இடம்பெற்றுவிட்ட சித்த மருத்துவத் தமிழ்மருந்துகளை உபயோகித்து உடல் நலிவைப்போக்கி உடல்நலத்தையும் உளவளத்தையும் நாம் அனைவரும் பெறுவோம்.

நூல்கள் அறிமுகம்

சிவஞானபோதம் (ஆங்கில மொழி பெயர்ப்பு): தமிழிலுள்ள தத்துவ நூல்களில் தலைசிறந்தது, மெய்கண்டதேவர் அருளிச் செய்த சிவஞானபோதம் என்னும் சைவ சித்தாந்த தத்துவத் தலைமணி நூல்! இந்நாளில் மேலைநாடுகளில் சைவ சித்தாந்தம் பெரிதும் பரவி வளரத் தலைப்பட்டு வருகின்றது. டாக்டர் எல். டி. பார்நெட், டாக்டர் மாக்சுமுல்லர், ரெரெண்ட் எச். டபிள்யூ. ஷோமரெஸ், டாக்டர் ஜி. யு. போப், திருமதி வயலெட் பரஞ்சோதி முதலிய பலர், சைவசித்தாந்த தத்துவத்தினைப் பெரிதும் புகழ்ந்து போற்றியுள்ளனர். திரு. ஜே. எம். நல்லசாமிபிள்ளை, திரு. ஜான். எச். பியட் ஆகியோர், சிவஞானபோதத்தினை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளனர். இலங்கையில் கிறித்தவ சமயப் பணி புரிந்திருந்த, ரெவரெண்ட் **எச். ஆர். ஒய்சிங்ட்டன்** என்பவர், இவர்களுக்கு முன்பே, சென்ற நூற்றாண்டில், சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னரே, சிவஞானபோதத்தினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார் (1854). அம்மொழி பெயர்ப்பு ''அமெரிக்கக் கீழைநாடுகள் சங்கத்தின்'' சார்பில், அதன் இதழில் வெளிவந்தது. அதனைப் பின் வந்த அறிஞர்கள் எல்லோரும், தம் நூல்களில் குறிப்பிட்டுப் பாராட்டி உள்ளனர். ரெவரெண்ட் எச். ஆர். ஒய்சிங்ட்டன் அவர்கள், சிவஞானபோதச் சூத்திரங்களையும், உதாரண வெண்பாக்களையும், எளிய இனிய நல்ல ஆங்கிலத்தில் சிறப்புற மொழிபெயர்த்துள்ளார். தமிழ் தெரியாமல், ஆங்கிலத்தின் மூலமாகச் சைவசித்தாந்தம் கற்க விரும்பும் அறிஞர்களுக்கு இந்நூல் மிகப் பெரிதும் பயன்படும்.

நெடுங்காலமாகக் கிடைக்காமல் இருந்த இந்த ஆங்கில மொழிபெயர்ப்பு நூலினை, சைவப்பெருஞ் சான்றோர் இராவ்சாகிப் திரு **நல். முருகேச முதலியார்,** பி. ஏ. அவர்கள் அமெரிக்கக் கீழைநாடுகள் சங்கத்தின் செயலாளருக்குக் கடிதம் எழுதித் தொடர்பு கொண்டு, அச்சங்கத்தின் இசைவு பெற்று விரிவான முகவுரை, விளக்கக்குறிப்புக்கள் ஆகியவற்றுடன் மிகவும் நல்லமுறையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்கள். சிவஞானபோதச் சூத்திரங்களின் மூலம், தமிழில் மட்டுமின்றி, வடமொழி கன்னடம் ஆங்கிலம் ஃபிரஞ்சு என்னும் மொழிகளிலும் தரப்பட்டுள்ளது. இஃது அந்தந்த மொழிகளிற் பயிற்சியுடையவர்களுக்குப் பெரிதும் பயன்படும்.

முன்னரே சங்கற்ப நிராகரணம், அவிரோதவுந்தியார் முதலிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ள, திரு. நல். முருகேச முதலியார் அவர்களின் அறிவாராய்ச்சித் திறமும், அளவிலா உழைப்பும், சிறந்தபெரும் தொண்டுகளும், வியந்து நயந்து பெரிதும் போற்றத்தக்கன. தருமையாதீனத்தின் 26-வது குருமகா சந்நிதானம் திருவார்திரு சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் அவர்கள், தமது ஆதீனத்தின் குருபூசை விழா மலராக, இந்நூலினை வெளியிட்டுள்ளார்கள். சுமார் 200 பக்கங்கள் கொண்ட இந்நூல், மிகவும் நல்லமுறையில் திருத்தமாக அழகுற வெளிவந்துள்ளது. கிடைக்குமிடம் : ''ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயூரம்-609001—, தமிழ்நாடு''.

—**ஆசிரியர்.**

திருக்குறள் – ஒரு தெய்விக நூல்!....

[திரு புலவர் நா. மயில்சாமி, வேட்டைக்காரன்புதூர்.]

மக்கட் பிறப்பு :

பெறுதற்கரிய பிறவிகளுள் தலையாயது மானிடப் பிறவியாகும். ''அரிதரிது மானிடர் ஆதல் அரிது'' என்றார் அவ்வைப் பெருமாட்டியாரும். ''வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்'' என்று அப்பர் பெருமானும், ''பெறுமவற்றுள் யாம் அறிவதில்லை; அறிவறிந்த, மக்கட்பேறு அல்ல பிற'' என்று வள்ளுவர் பெருமானும், ''எண்ணரிய பிறவி தனில் மானுடப் பிறவிதான் யாதினும் அரிதரிது காண்'' என்று சிவானுபூதிச் செல்வராம் தாயுமான அடிகளும், மக்கட்பிறவியினை மதித்துப் போற்றியிருத்தல் எண்ணுதற்கு உரித்து.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் ஒருவனாக மதித்துப் போற்றப்பட வேண்டும் எனில், இப்பிறவியில் நல்லார் இணக்கமும், நூல்களின் பெருந்துணையும் இறையருளுமே பெறுதல் இன்றியமையாததாகும். நல்லாரைப் பெறுதல் என்பதோ இறையருளை அடைதல் என்பதோ அத்துணை எளியது அன்று. ஆனால் நூல்களின் துணையினைப் பெற்று உய்யும் நெறி அடைதல் என்பது எளியது.

கற்கும் நூல்கள் :

நூல்கள் என்றவுடனே எத்தகைய நூல்களைக் கற்றல் வேண்டும் என்னும் வினா மனத்தில் எழுவது இயற்கை. ''கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக'' என்னும் குறளுக்கு உரை எழுதிப் போந்த பரிமேலழகர் ''கற்பவை'' என்னும் சொல்லுக்கு ''அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள் உணர்த்துவன அன்றிப் பிற பொருள் உணர்த்துவன சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினர்க்கு ஆகாது'' என்று குறிப்பிட்டுள்ளமை நோக்குக. இதனல், அறம் பொருள் இன்பம் வீடு அடையும் நெறிகளைக் காட்டும் நூல்களையே கற்றல் வேண்டும் என்பது புலனாகின்பது அன்றோ? அதனால்தான் பவணந்திமுனிவர் ''அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்றயனே'' என்று நன்னூலில் உணர்த்தினார் போலும்.

உறுதிப் பொருள்களை (அஃதாவது அறம் பொருள் இன்பம் வீடு) உணர்த்தும், நூல்களில் இருவகை உண்டு. ஒன்று சாத்திர நூல்கள் ; மற்றொன்று தோத்திர நூல்கள். இறைவனை அறிவதற்குத் துணைபோவன சாத்திர நூல்கள் என்றும், அவனை வழிபடுவதற்குத் துணை போவன தோத்திர நூல்கள் என்றும் சான்றோர் செப்புவர். அவ்விரு நூல்களையும் முதல் நூல், வழி நூல், சார்பு நூல் என்று வகைப்படுத்துவர். இவற்றிற்கு மேலாக, எதிர் நூல் என்ற ஒன்றை இறையனார் களவியல் உரைக்கும்.

திருக்குறள் முதல்நூல் :

முதல் நூல் என்பது இறைவன் தந்த நூலாகும். ''வினையின் நீங்கி விளங்கிய அறிவின், முனைவன் கண்டது முதல் நூல் ஆகும்'' என்று முழுதுணர் ஞானியாகிய தொல்காப்பியர் கூறுவார். இம்முறையில் நோக்கினால் திருக்குறள் முதல் நூல் என்பதற்கு ஐயமில்லை. ''தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால் ஆனா அறமுதலா அந்நான்கும்-ஏனோருக்கு, ஊழின் உரைத்தாற்கும் ஒண்ணீர் முகிலுக்கும், வாழி உலகு என்னாற்றும் மற்று'' என்று திருவள்ளுவமாலையில் நக்கீரர் பெருமான் கூறியவாற்றால் புலனாகும். தானே முழுதும் உணர்ந்தவன் இறைவன் தானே! அவனையன்றி முழுதும் உணர்வோர் உலகில் யாரும் இல்லையன்றோ? ''முற்றும் உணர்ந்தவர் இல்லை'' என்று நீதிநெறி விளக்கமும் இதனை வலியுறுத்தும், திருவள்ளுவர் முழுதும் உணர்ந்து தண்டமிழில் குறள் யாத்து உலகிற்கு மழைபோலக் கைம்மாறு கருதாது, கடப்பாடு புரிந்தார் என்றால், அவர்தம் திருக்குறள், முதல் நூல் என்பது வெள்ளிடைமலை.

மனங் கரைப்பது:

திருக்குறள் முதல் நூல் மட்டும் அன்று. தெய்வத்தைக் காட்டும் திருவருள் நூலும் ஆகும். மலங்கெடுத்து மனங்கரைக்கும் வாசகத்தைக் கொண்டது மணிவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய தேனூறும் திருவாசகச் செழுமாமறையாம். ''திருவாசகம் இங்கு ஒரு கால் ஓதின், கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள் தொடுமணல் கேணியில் சுரந்து நீர் பாயும்'' என்று கற்பனைக் களஞ்சியமாகிய சிவப்பிரகாசர் கூறுவார். ஓதினால் திருவாசகம் மனங் கரைக்கும். ஆனால் தெய்வமாமறையாம் திருக்குறளை நினைத்தாலே உள்ளத்தை உருக்கும் என்று சான்றோர் கூறுவர்.

''ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாகி வேதப்பொருளை மிக விளக்கித் தீதற்றோர், உள்ளுதொறு உள்ளுதொறு உள்ளம் உருக்குமே வள்ளுவர் வாய்மொழி மாண்பு'' என்று மாங்குடி மருதனார் பொதுமறையாம் திருக்குறளைப் போற்றுவதை ஓர்க.

திருக்குறள் ஓதுதற்கு எளியது. அதன் பொருளை உணர்வது அரியது; அறம், பொருள் இன்பம், வீடு என்னும் வேதப் பொருளை மிக விளக்குவது. குற்றம் அற்றோர்கள் நினைக்கும்தோறும் நினைக்கும்தோறும் அவர்களுடைய மனத்தைக் கரைப்பது, திருவள்ளுவரின் வாய்மொழியாகிய தமிழ்மறையாம் என்பது அதன் பொருளாம்.

பாராயணப் பனுவல்:

தெய்வ மாமறையாம் திருக்குறள் திருமுறைகளாகிய தேவார, திருவாசகங்களைப் போல ஓதி உணர்தற்கு, அஃதாவது பாராயணம் செய்வதற்கு உரியதாம். எண்ணாத எண்ணம் எல்லாம் எண்ணி எண்ணி ஏழை நெஞ்சம் புண்ணாகச் செய்து கொள்கின்றது. இதனை ஒருவழிப்படுத்த இறைவனை இடையறாது நினைத்தலும், வாழ்த்தலும் வழுத்தலும் வேண்டும். ''வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச் சூழ்த்த மாமலர் கொண்டு தூவித்துதித்தல்'' வேண்டும். உடலின் உறுப்புக்கள் செய்ய வேண்டிய செயலைப்பற்றித் திருநாவுக்கரசர் பெருமான் திருஅங்கமாலைப் பதிகத்தில் சிறப்புறக் கூறியுள்ளதை அனைவரும் அறிவர். திருக்குறளையும் நான்முறை என்றே சொல்லும் திறம் உணரற்பாற்று. பன்னிரு திருமுறைகளைப் போன்றே தமிழ்மறையாம் திருக்குறளையும் போற்றித் துதித்து வணங்கி வாழ்த்துக என்பது சொல்லாமலே விளங்குமன்றே.

புலமை பெறலாம்:

பல நூல்களைக் கற்றால்தான் அறிவின் முழுப்பயன் பெறமுடியும். ஆனால் திருக்குறளை ஓதுதலாலே எல்லா நூல்களின் பயனையும் பெறலாம். ''எல்லாப் பொருளும் இதன்பால் உள இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்'' என்று மதுரைத் தமிழ்நாகனார் குறளைப் பற்றிக் கூறுவதை ஆய்க. நத்தத்தனார் என்னும் நல்லிசைப் புலவர் ''ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறள்களையும் பாயிரத்தினோடு ஓதி உணர்க; அவ்வாறு ஓதி உணர்ந்த பின்பு வேறொருவரிடம் சென்று நூல் கேட்க வேண்டுமோ? இல்லை ; நிலை பெற்ற தமிழிலே புலமை நிரம்பியோராகிப் பிறர் தம்மிடத்து வந்து கேட்க வீற்றிருக்கலாம்'' என்று பகர்கின்றார். ''ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளும், பாயிரத்தினனோடு பகர்ந்ததற்பின்-போய் ஒருத்தர், வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவராய்க் கேட்க வீற்றிருக்கலாம்'' என்பது அவர்தம் பாட்டு.

சான்றோர் உரைகள் :

இலக்கியச் சமயச் சான்றோர்கள் திருக்குறளையும் அதனை இயற்றிய தெய்வப் புலவர் திருவள்ளுவரையும் பொன்னேபோல் போற்றியுள்ளனர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? திருவள்ளுவரைத் தேவர் என்றும், தெய்வப் புலவர் என்றும் போற்றிய திறத்தால் அவர்தம் நூலும் தெய்வ மணங்கமழும் என்பதில் தடையுளதோ? 'திரு' என்றும் 'தெய்வப்புலவர்' என்றும் வேறு எப்புலவருக்கும் அடைமொழி கொடுக்கப்படவில்லை. இவ்விரு அடைமொழிகளையும் திருவள்ளுவருக்கே தமிழ்கூறும் நல்லுலகு அளித்துள்ளது. ''தேவர் குறளும் திருநான் மறை முடிவும், மூவர் தமிழும் முனி மொழியும்-கோவை திருவா சகமும் திருமூலர் சொல்லும் ஒருவாசகம் என்று உணர்'' என்றும் ''பழகுதமிழ்ச் சொல்லருமை நால் இரண்டில்'' என்றும், திருவள்ளுவரைத் தேவர் என்றும், இரண்டு என்று திருக்குறளையும் அவ்வைப் பெருமாட்டியார் போற்றியுள்ளார்.

தெய்வ ஒண்தீந்தமிழின்கண் அமைந்துள்ள மேலாம் தரமுள்ள நூல்களைக் கூற வந்த சமயச் சான்றோராகிய உமாபதி சிவம்அவர்கள் ''வள்ளுவர் நூல் அன்பர் மொழி வாசகம், தொல்காப்பியமே, தெள்ளு பரிமேலழகன் செய்த உரை ஒள்ளியசீர்த் தொண்டர்புராணம், தொகுசித்தி ஓராறும் தண்டமிழின் மேலாம் தரம்'' என்று விதந்து கூறியுள்ளார். வாழ்விக்கும் நூலாகத் திருக்குறளைக் கூறுவதை உற்று நோக்குங்கள்.

பல நூல்களை ஆய்ந்து பார்த்தும்பொருள் விளக்கம் கிட்டவில்லையெனில் தொல்காப்பியம், திருக்குறள், திருச்சிற்றம்பலக்கோவையார் ஆகிய முந்நூல்களை ஆராய்க. அவற்றில் இல்லாத பொருளே உலகில் இல்லையென்று இலக்கணக்கொத்துரையாசிரியர் இயம்புகின்றார். ''பல்காற் பழகினும் தெரியாஉளவேல். தொல்காப்பியம், திருவள்ளுவர், கோவையார், மூன்றினும் முழங்கும்'' என்பது பாட்டு. ''வள்ளுவர்செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள் உள்ளுவரோ மநுவாதி ஒருகுலத்துக்கு ஒருநீதி'' என்று மனோன்மணியம் இயற்றிய பேராசிரியர் சுந்தரம்பிள்ளையவர்கள் நீதிநூலாகக் குறளைப் போற்றுவதை நினைவு கூர்க.

பிற்காலத்தே தோன்றிய தேசீய கவிஞர் சுப்பிரமணிய பாரதியார், ''யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவர்போல், இளங்கோவைப்போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை'' என்று கூறுமிடத்துத் தலையாய புலவர்களிலே திருவள்ளுவரையும் கூறியுள்ளார். தமிழ்நாட்டில் வழங்கும் பழமொழியிலும் திருக்குறள் போற்றப்பட்டுள்ளது. ''ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி'' என்று நாலடியாரோடு திருக்குறளையும் ஒப்பிட்டுக் கூறியுள்ளதைக் காண்மின்.

முடிவுரை :

இதுகாறும் கூறியவற்றால் திருக்குறள், அறம்பொருள் இன்பம் வீடு அடைதற்குரிய நூல் என்றும், முதல் நூல் என்றும், மனங்கரைப்பது என்றும், பாராயணப் பனுவல் என்றும், பெரும் புலமை நல்குவது என்றும், திருமுறைபோல்வது என்றும், தெய்வப் புலவர் திருவள்ளுவரே என்றும், பல நூல்களும் திருவள்ளுவரையும் திருக்குறளையுமே போற்றுகின்றன என்றும், திருக்குறளை ஓதி உணர்ந்தால் அனைத்து நூல்களின் பயனையும் அறிய முடியும் என்றும், அதனால் திருக்குறள் தெய்வ மாமறையாம் என்றும் தெளிவு கொள்வோமாக. வாழ்க திருக்குறள்! வளர்க தெய்வ ஒண் தீந்தமிழ்!'

திருக்கேதார யாத்திரை

'திருமுறைச் செல்வர்' — 'சித்தாந்த தினகரன்'

பேராசிரியர் திரு. மறை. திருநாவுக்கரசு அவர்கள்

முன்னுரை :

எனக்குப் பதினான்கு அல்லது பதினைந்து வயது இருக்கும். அப்போது எங்கள் தந்தை யார் ஆகிய மறைமலை அடிகளார் அவர்களைக் காணும் பொருட்டுப் பல்லவபுரத்திலுள்ள எங்கள் மாளிகைக்குத் துறவியார் ஒருவர் வந்திருந்தார். அவருக்கு 60 வயது இருக்கலாம். இழுப்பிருமல் (ஆஸ்துமா) நோய் உடையவர். ஒரு நூலைப் பதிப்பிடும் பணியை முன்னிட்டு, அவர் எந்தையாரின் உதவியை நாடி வந்தார். அதனால் சிலகாலம் எங்கள் மாளிகையில் தங்கியிருந்தார். அவருக்குப் பணிவிடைகள் செய்யும் பேறு எனக்கு வாய்த்தது. நல்ல தமிழறிஞரான அப்பெரியவர், பல்லாண்டுகள் காசியில் சென்று வாழ்ந்திருந்தவர். தம் யாத்திரையால் வடநாட்டிலுள்ள தலங்களையெல்லாம் வழிபட்டவர்; நன்கறிந்தவர். அத்துடன் இமயமால்வரையில் உள்ள கேதாரநாதம், பதரிநாதம் முதலிய சிறந்த தலங்களையும் சென்று தரிசித்து வழிபட்டவர். அவருடைய ஊர் திருச்சி மாவட்டத்திலுள்ள கொடுமுடியாகும். பெயர் சுப்பிரமணியத் தம்பிரான். 'காசிவாசி' எனும் பட்டம் கொண்டவர். கேதாரநாதம்-பதரிநாதம் பற்றி அறிய விரும்பி எந்தையார், அத்துறவியாரை அத்தல யாத்திரைகள் பற்றி விவரமாகக் கூறுமாறு கேட்டுக் கொண்டார். அதற்கு இணங்கி அவர், ஒருசில நாட்களில், மாலை நேரங்களில், தாம் செய்த கேதாரநாத-பதரிநாத யாத்திரைகளைப் பற்றி விரிவாகச் சொல்லி முடித்தார். அவர் யாத்திரை செய்த காலத்தில், ரிஷிகேசத்திலிருந்து கேதாரம் பதரிநாதம் ஆகிய தலங்களுக்குக் கால்நடையாகத்தான் செல்லுதல் வேண்டும். உந்தூர்திகள் கிடையாது. குதிரை, பல்லக்கு முதலிய வசதிகள் இருந்திருக்கலாம்.

துறவியார் சொல்லி வந்த இத்தலயாத்திரைச் செய்திகளை எந்தையாரும், எங்கள் குடும்பத்தினரும், யானும் மிக்க ஆர்வமுடன் கேட்டோம். இயல்பாகவே எங்கள் குடும்பத்தின் பெரும் பண்பாட்டுச் செல்வமாக, எங்களுக்குக் கிடைத்தவை, சைவ சமயப் பற்றும், சிவநேயமும், தலயாத்திரைகளும் ஆகும். ஆதலின் துறவியார் கூறிய கேதாரநாதம் பதரிநாதம் பற்றிய யாத்திரைக் கதைகள், அழியாத ஓவியங்களையும், அழகிய காட்சிகளையும், என் உள்ளத்தில் உருவாக்கிவிட்டன.

எனது ஆர்வக் கனவு:

அதனால் கேதாரம் பதரிநாதம் செல்லுதல் வேண்டும்; இமயமால் வரையின் இணையில்லாத இன்பக் காட்சிகளையெல்லாம் காணுதல் வேண்டும் என்னும் அளவிலாப் பேரார்வம், என் உள்ளத்தே கிளர்ந்து எழுந்து நாளும் பெரிதாக வளர்ந்தது வந்தது. 1,500 கற்களுக்கு அப்பால், நெடுந்தொலைவில் பல்லாயிரம் அடி உயரத்தில் உள்ள அத்தலங்களுக்கு, பெரும் செலவு செய்து கொண்டு, பல தொல்லைகளுக்கு இடையில் நெடுந்தூரம் நடந்து, பனிபடர்ந்த மலைநிலப் பகுதிகளில் உலவுவது என்பது, எளிதில் இயலாத செயல் என்று அறிந்தேன். ஆயினும் எப்படியும் எப்போதாயினும், அவ் இன்ப யாத்திரையைச் செய்து மகிழ வேண்டும் என்று எண்ணிவந்தேன்.

எனது இந்த யாத்திரையின் நோக்கம், அக்காலத்தில் இறைவழிபாட்டை மட்டும் விரும்பியதன்று. இயற்கைக்காட்சிகளைக் கண்டு களித்தல் வேண்டும் என்னும் பெரு விருப்பமே யாகும். எனக்கு வடநாட்டைப் பற்றிய செய்திகளும், எண்ணங்களும் தோன்றும்போதெல்லாம், துறவியார் சொன்ன இமயமலைக் காட்சிகள், என் அகத்தே தோன்றிப் பெரிதும் மகிழ்வளிக்கும். எனக்கு வயது ஏற ஏறக் கேதாரம் பதரிநாதம் காசுமீரம் ஆகியவற்றின் அழகிய இனிய இயற்கைக் காட்சிகளைப் பற்றிய மிகுதியான செய்திகளும், நூல்களும் கிடைத்தன. அவற்றுடன் திருக்கயிலாயமலை யாத்திரை, அமரநாத யாத்திரை, நேபாள யாத்திரை முதலிய நூல்களும் கிடைத்தன. அவற்றையெல்லாம் படித்ததோடு, ஆழங்காணா ஆர்வத்தால் உந்தப்பட்டு, அத்தலங்களையெல்லாம் கண்டு இயற்கையெழிலாம் இன்பம் உண்டு மகிழ்ந்து திளைக்கப் பெரிதும் விரும்பி, ஆர்வம் கொண்டிருந்தேன்.

ஆயினும் எனக்கு வயது முதிர முதிரக் கயிலாய யாத்திரை, அமரநாத யாத்திரை, கேதார யாத்திரை ஆகியவைகள் மிகவும் கடுமையானவை ; அவ்விடங்களுக்கு நம்மாற் செல்ல இயலாது என முடிவு கட்டிவிட்டேன். எனினும் பதரி கேதார காசுமீரக் காட்சிகளை, எவ்வாறேனும் கண்டு விட வேண்டுமென்று மிகவும் உறுதி பூண்டேன். உறுதி பூண்டும் பயன்

என்ன ? வாய்ப்பும் வசதிகளும் அமையவேண்டாவா ? ஏறத்தாழ 40 ஆண்டுகள் வரையில், என்னுடைய இந்த எண்ணங்கள் வெறும் பகற்கனவாகவே இருந்து வந்தன. காசுமீரத்தின் அளவிலாத இயற்கை இன்ப அழகுக் காட்சிகளையெல்லாம், என் வாழ்க்கையின் இடைப்பட்ட காலத்தில் அறியலானேன். எனவே, என் ஆர்வத்தில் பதரி கேதார யாத்திரைஇரண்டாவது இடத்தைப் பெற்றது; காசுமீரம் முதலிடம் பெற்றது.

மேலே தெரிவித்தவாறு, சிறுபருவத்தில் என் உள்ளத்தே முகிழ்த்துத் தோன்றிய யாத்திரை விருப்பம், இயற்கைக் காட்சிகளைக் கண்டு இன்புறும் பெருவிருப்பத்தாலேயே ஏற்பட்டது. ஆனால் பின்னர், அத்திருத்தலங்களிலுள்ள இறைவனை வழிபட வேண்டும்என்னும் பேரார்வமும் எனக்கு ஏற்படலாயிற்று. அப்போது எனக்குக் கட்டிளமைப் பருவம், நிகழ்ந்து கொண்டிருந்தது. திருவையாற்றில் அரசர் கல்லூரியில் யான் தமிழ் பயின்று கொண்டிருந்தேன். (1926-1932).

கடவுட் காதல் :

பண்டு செய்த நல்வினைப் பயனாலும், என் தந்தையாரின் அருளாலும், யான் சிறு பருவத்திலிருந்தே, எல்லா உயிர்களுக்கும் உலகங்களுக்கும் தேவர்களுக்கும் உயிர்க்குயிராய், தலைவனாய் நின்று, அருளாட்சி புரிந்து உய்வித்து வரும் எல்லாம் வல்ல முழுமுதற் பெரும்பொருளாம் சிவபெருமானை வழிபடும் ஆர்வம் பெரிதும் உடையவனானேன். அந்த ஆர்வம் நாள்நாளும் பெருகி வளர்ந்தோங்கி வரலாயிற்று. ஆதலின் திருவையாற்றில் தமிழ் பயின்று வந்தபோது, நாள்தோறும் காலையில் காவிரியில் நீராடி, வெண்ணீறு அணிந்து, உருத்திராக்க மாலை சூடி, திருவைந்தெழுத்து ஓதிச் சிவபூசை புரிந்து, திருமுறைகளை ஓதுவதும், மாலை திருக்கோயில் சென்று முறைப்படி ஐயாற்றப்பரை வணங்கி வழிபடுவதும் ஆகிய சிவபுண்ணியச் செயல்களை, எனது உயிர்க் கடமைகளாகக் கொண்டிருந்தேன்.

திருவிழாக் காண்பதும், இறைவன் எழுந்தருளும்போது தண்டினைச் சிறிது தொலைவு தாங்கிச் செல்வதும், எனக்குப் பெருவிருப்பமாகும். கல்லூரிப் பாடங்களைப் படிப்பதைவிட, தேவாரத்திருமுறைகளை ஓதுவதிலும் படிப்பதிலும் எனக்கு அளவில்லாக் காதல் ஏற்பட்டுவிட்டது. தேர்வுக் காலங்களிலும்கூட அதற்குரிய பாடங்களைப் படிப்பதைக் காட்டிலும், தேவார திருவாசகங்களை ஓதுவதிலும், மனப்பாடம் செய்வதிலுமே. என் மனம் பெரிதும் ஈடுபடும்.

பெரியபுராணத்தில் உள்ள நாயன்மார்கள் வரலாற்றில் என் உள்ளம் பெரிதும் ஈடுபட்டுத் தோய்ந்து நெக்குருகும். சமயப் பெரியோர்களிடத்திலும், சமயச் சொற்பொழிவுகளிலும், என் நெஞ்சம் கொண்ட ஆர்வம் அளப்பரியது. ஓதுவாமூர்த்திகள் இசையுடன் தேவாரம் ஓதுவதைக் கேட்பதில், எல்லையில்லா இன்பம் பெறுவேன். இவற்றோடு நம் பாரத தேசத்தின் விடுதலை ஆர்வமும், என் உள்ளத்தில் வளர்ந்தோங்கி வந்தது. காந்தியடிகள் என் ஆன்ம நாயகனாகி விட்டார். அவரோ கடவுட் பற்றின் உண்மை உருவினராவார் !

திருக்கேதாரத் தேவாரம் :

செந்தமிழ்ச் சிவநெறியின் தனிப் பெருந் தலைவரான திருஞானசம்பந்தப் பிள்ளையார், வடநாட்டுத் திருத்தலங்களை வணங்க விரும்பினாராயினும், அந்நாட்டில் தமிழ்மொழிவளர்ச்சி இல்லாமையால், ஆங்குச் செல்லக் கருதாமல், காளத்தியில் இருந்தபடியே, திருக்கயிலாயம், திருக்கேதாரம், அனேகதங்காவதம், இந்திர நீலப்பருப்பதம், திருக்கோகர்ணம், திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்) என்னும் வடநாட்டுத் தலங்களில் எழுந்தருளி விளங்கும் சிவபெருமான்மீது தேவாரப் பாடல்களை அருளிச் செய்தனர். அவற்றில் திருக்கேதாரத்தினைப் பற்றியமுதல் திருப்பாட்டு,

பண் — செவ்வழி

''தொண்டர் அஞ்சு களிறும் அடக்கிச்
சுரும்பார் மலர்
இண்டை கட்டி வழிபாடுசெய்யும்
இடம் என்பரால் ;
வண்டு பாட மயில் ஆட
மான்கன்று துள்ளவரிக்
கெண்டை பாயச் சுனைநீலம்
மொட்டலரும் கேதாரமே''

என்பதாகும். இப்பாட்டின் பொருளாவது : ''அடியார்கள், தமது ஐம்புலன்களாகிய யானைகள், தாம் விரும்பியவாறு வெறிகொண்டு வேண்டிய இடங்களில் ஓடித் திரியாதபடி அடக்கியவர்களாய், வண்டுகள் மொய்க்கின்ற அழகிய நல்ல மலர்களை இண்டை முதலிய மாலைகளாகக் கட்டிச் சென்று சிவபெருமானுக்கு அணிந்து வழிபடுவர். அத்தகைய இடமாவது, வண்டுகள் பாட, அதற்கு ஏற்றபடி மயில்கள் ஆட, அக்காட்சியைக் கண்டு மகிழ்ந்து மான் கன்றுகள் துள்ளிக் குதித்து மகிழ, தம் உடலின் மீது வரிகள் அமைந்த கெண்டைமீன்கள் பாய்ந்துவிழ, அதனால் நீர்ச்சுனைகளில் அரும்பாகவுள்ள நீலமலர்கள் அழகாக மலரும்படியான திருக்கேதாரம்'' என்பதாகும்.

மற்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும், திருக்காளத்திப்பதியிலிருந்தவாறே திருக்கேதாரத்தைப் பாடியருளி யிருக்கின்றார். அதில் முதல் திருப்பாட்டு,

பண் — நட்டபாடை

''வாழ்வாவது மாயம், இது
மண்ணாவது திண்ணம் ;
பாழ்போவது பிறவிக்கடல்;
பசிநோய் செய்தபறிதான்;
தாழாது அறம்செய்மின்;
தடங்கண்ணான் மலரோனும்,
கீழ்மேலுற நின்றான்;
திருக்கேதாரம் என்னீரே''

இத்தேவாரத் தமிழ்ப் பாடல்களை இசையுடன் உணரக் கேட்ட யான், கற்றுணர்ந்த யான், பேருணர்ச்சி கொண்டேன். திருக்கேதாரத்தை வழிபட வேண்டும், காணவேண்டும் என்னும் அளவிலா ஆர்வம் என் உள்ளத்தில் மேலும் மேலும் மிகுவதாயிற்று.

பதரியின் பெருமை அறிதல்:

மேலே கூறியவாறு, வித்துவான் வகுப்பில் யான் பயின்று கொண்டிருந்தபோது, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில், ஓராயிரம் பாடல்கள், நாங்கள் செய்த நல்வினைப் பயனால் எங்களுக்குப் பாடமாக வந்தன. அப்பாடல்கள் திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழியில் உள்ளவை.

பெரிய திருமொழியின் முதற்பத்தில், மூன்று நாலாம் திருமொழிகளாக உள்ள முப்பது பாடல்கள், பதரிநாராயணன் மீது பாடப்பெற்றவை. பாடல்களில் வதரி, வதரியாச்சிரமம் என்று, பதரிதலம் தமிழ் மரபுப்படி குறிக்கப்பட்டுள்ளது. பதரி அல்லது பத்ரி என்பது இலந்தை மரம். இலந்தை மரத்தால் ஆன சோலையில் அமைதியிடங் கொண்டான் என்ற பொருளில் பதரிகாச்சிரமம் என்ற பெயர் வடமொழியில் அமைந்துள்ளது.

எங்கள் ஆசிரியர், திரு. சுந்தரராகவாச்சாரியார் என்பவர். அவர் உள்ளும் புறம்பும், ஒத்த உறுதியான வீரவைணவப் பெருந்தகையார், புலன் அழுக்கற்ற அந்தணாளர். அவர் அப்பாடல்களைப் பக்திமை உணர்ச்சியுடன் ஓதி ஓதி உரை விரித்து, எங்கள் உள்ளத்தைப் புனிதமாக்கினார். அருந்தமிழ்ச் செல்வமான அப்பாடல்களுள், இரண்டை மட்டும் ஈண்டுக் காண்போம்.

''உறிகள்போல் மெய்ந் நரம்பெழுந்து
ஊன்தளர்ந்து உள்ளமெள்கி,
நெறியை நோக்கிக் கண்சுழன்று
நின்று நடுங்காமுன்,
அறிதி யாகில் நெஞ்சம் அன்பாய்
ஆயிர நாமஞ்சொல்லி,
வெறிகொள் வண்டு பண்கள்பாடும்
வதரி வணங்குதுமே''

''துணிவினி யுனக்குச் சொல்லுவன் மனமே!
தொழுதெழு தொண்டர்கள் தமக்குப்,
பிணியொழித் தமரர் பெருவிசும் பருளும்
பேரரு ளாளனெம் பெருமான்,
அணிமலர்க் குழலா ரரம்பையர் துகிலும்
ஆரமும் வாரிவந்து, அணிநீர்
மணிகொழித் திழிந்த கங்கையின் கரைமேல்
வதரியாச் சிரமத்துள் ளானே.''

இப்பாடல்களையும், பதரியின் பெருமையையும் அறிந்த யான், முன்னம்கொண்ட ஆர்வத்திற்கு மேலாகவே, அத்தலத்தினைக் கண்டு வணங்கும் அவாமிக உடையவன் ஆனேன்.

யாத்திரைப் பேறுகள்:

இவ்விருப்பம் சிவநேசச் செல்வர்கள் சிலரின் துணையாலும், சிவபிரான் அருளாலும் நிறைவு எய்தும் பேறு கிடைத்தது. அதனால் ஒரு கோடை விடுமுறையில், கேதாரப் பயணத்தை மேற்கொண்டேன். கேதார நாதனையும், பதரி நாராயணனையும் வழிபட்டு உய்ந்தேன். அத்துடன் பாரதநாட்டு இந்துப் பெருமக்கள் அனைவர் உள்ளத்தின் பக்திமை உணர்ச்சிக்கும் வித்தாயுள்ள காசிவிசுவநாதப் பெருமானையும், புண்ணிய கங்கைநதியில் மூழ்கி வழிபட்டேன். பேரின்பப் பெரு வாழ்வை இம்மையிலேயே பெற்றாற்போல இன்பம் மேற்கொண்டேன். உலகம் புகழும் நம் இந்தியத் தலைநகராகிய தில்லிமாநகரையும் கண்டு களிப்புற்றேன். மற்றும் நமது இந்திய நாட்டின் பெருநகரங்களாகிய கல்கத்தா, பம்பாய் முதலிய நகரங்களையும் கண்டு மகிழ்ந்தேன். அரித்துவாரம் ரிஷிகேசம் ஆகியவற்றில் தூய குளிர்ந்த கங்கையில் நீராடி, அளவிறந்த கருணைப் பெருந்தகையாகிய சிவானந்த முனிவரின் தூய திருவடிகளில், என் எளிய தலையை வைத்து வழிபடும் பெரும்பேறும் எனக்கு வாய்க்கப் பெற்றேன்.

இவ்வுலகில் எழில்மிகச் சிறந்த இனிய நாடான காசுமீரத்தையும், அழகு மாளிகையான தாஜ்மகாலையும் கண்டு, அளவிலா ஆனந்தம் அடைந்தேன். கல்கத்தா, தில்லி, பம்பாய் முதலிய மாநகரங்களில் உள்ள தமிழ்ச் சங்கங்களில் சொற்பொழிவுகள் ஆற்றி, பெரியோர்கள் அறிஞர்கள் ஆகிய பலரின் பாராட்டுதலையும், பேரன்பையும் பெற்றுப் பெருங்களிகூர்ந்தேன்.

இங்ஙனம் யாத்திரையால், யான் பெற்ற இன்பத்தையும், அறிவனுபவங்களையும் இக்கட்டுரைத் தொடரில், எடுத்துக்கூற முயலுகின்றேன்; இதனைப் படிப்பவர்களும், யான் பெற்ற இன்ப அறிவு அனுபவங்களை எய்தி மகிழவேண்டும் என்பது, என்பெரு விருப்பம்.

—தொடரும்.

சௌராட்டிரப் பிரபந்தம்

திரு. கே. ஆர். கிருஷ்ணமாச்சாரியார், ஈரோடு

ஆழ்வார்கள் அருளிச் செய்த நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் இயற்றியருளிய அஷ்டப் பிரபந்தம் எனக் கேட்டிருக்கும் நமக்கு, சௌராட்டிரப் பிரபந்தம் என்னும் பெயர் சற்றுப் புதுமையானதாகத் தோன்றும். திவ்வியப் பிரபந்தமும், அஷ்டப் பிரபந்தமும் தமிழில்அமைந்தவையெனில், இதுவோ பிராகிருத மொழிகள் ஐந்தில் ஒன்றான சௌரசேனியிலிருந்து கிளைத்த மொழியாம் சௌராட்டிர மொழியில் உள்ளதாகும்.

வளமையான இலக்கியம் கொண்ட வடமொழி, இலக்கியவளமுடைய செந்தமிழ் மொழி, இவற்றோடு ஒப்பிடும்போது சௌராட்டிரமொழி இலக்கியங்கள், மிகமிகக் குறைவேயாகும். அவ்விலக்கியங்களிலும் பெரும்பாலானவை பக்தி இலக்கியங்களே. இம்மொழிக் கவிஞர்கள் சௌராட்டிர மொழியின் இலக்கிய வளர்ச்சியில் ஈடுபட்டதோடு, தமிழ் வடமொழி தெலுங்கு மொழிக்கும் சேவை செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. இச் சௌராட்டிர பக்தி இலக்கியங்களில் மக்களிடையே பிரபலமானவை, மதுரையின் ஜோதி, எனப் போற்றப்படும் ஸ்ரீமந் நடனகோபால நாயகி சுவாமிகளின் பாடல்களே.

நைட்டிகப் பிரம்மச்சாரியாக வாழ்ந்த இம்மகான், ஆண்டாள் திருவவதாரமாகப் போற்றப்பட்டவர். ஒன்பது வித பக்தி நெறிகளில் நாயகி பாவத்தைக் கொண்டு, கண்ணனிடம் மாறாத காதல் பூண்டவர். ஆழ்வார் திருநகரியில் உறைந்த வடபத்ரார்யரிடம் சீடராக இருந்து ஆழ்வார்களின் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், கீதை, இராமாநுச பாஷ்யங்கள் இவற்றைக் கசடறக் கற்றார். பன்னிரு திருநாமங்கள் துலங்கக் காட்சியளித்த இவர், தமது தாய்மொழியான சௌராட்டிர மொழியிலும் தமிழிலும் நூற்றுக்கணக்கானபாடல்கள் இயற்றியுள்ளார். இவற்றில் பிரபந்தப்பாணியில் பாடத்தக்கதாகவுள்ள சுமார் 60 நான்கடிப் பாடல்கள் கொண்ட தொகுப்பே 'சௌராட்டிரப் பிரபந்தம்' என்று குறிப்பிடப் பெறுகின்றது. ஆழ்வார்கள் தங்கள் பாடல்களில் பக்திநெறி, நன்னெறி போதித்திருப்பது போன்று இவரும் இப்பாடல்களில் மக்களுக்கு வைணவ பக்தி நெறி போன்றவற்றை உபதேசித்துள்ளார். சான்றுக்கு ஒன்றிரண்டு பாடல்களைப் பார்ப்போம்.

ஸ்ரீமந் நாராயணா ஹரி புஜெ நீ:ஸ்தக் கான்
ஹோநா
ஸ்ரீவிஷ்ணு கவி நசெதீஸ் ஜெலுமவ்நா
நசிதகய் கேளும் ஜான் ஹோநா நமோ
நாராயணா மெனஸ்தெங்க துக்கு அவ்நா

சமைத்த உணவை இறைவனுக்கு அர்ப்பணித்து அருந்துவதென்பது ஓர் சிறந்த பழக்கமாகும். சுவாமிகள் நாராயண பூசையின்றி உண்ணலாகாது என்று கூறுகின்றார். மேலும் விஷ்ணுவைப் பாடித் துதித்தால்தான், மறு பிறவி கிடையாது என்றும் சொல்கிறார். கேள் என்ற சௌராட்டிரச் சொல்லிற்குப் பொருள் 'விளையாட்டு' என்பதாகும். விளையாட்டில் ஈடுபடலாகாது; அது அழித்து விடும் என்கிறார். இவர் குறிப்பிடும் விளையாட்டு மனிதனுக்குத் துன்பத்தினை உண்டாக்கும் சீட்டு விளையாட்டு, மற்றும் சிற்றின்ப விளையாட்டுக்களே. அதில் ஈடுபட்டால் மனிதனின் உடல் மற்றும் மன ஆரோக்கியம் அழிந்துபட்டுப் போகின்றது. இதைத்தான் சுவாமிகள் குறிப்பிடுகின்றார். நாராயண மந்திரத்தை உச்சரிப்பவர்கட்குத் துன்பம் இல்லை என்கிறார். 'நலம் தரும் நாராயண நாமம் கண்டு கொண்டேன்' எனும் ஆழ்வார் கருத்து, ஈண்டு ஒப்பிடத்தக்கது. மேலும் கூறுகிறார்

அசி ஹொயெஹால் மொ:ட்டொ ஹோநா
ஆத்ம க்யான் சளைலியாஸ் தெநு:ஸ் ஹோன்
மொ:டொ

ஒருவர் வயதானவர் என்பதால் பெரியவர் ஆக மாட்டார். 80 வயது ஆகிவிட்டால் பெரியவர் என்ற பெயர் கிட்டாது. உண்மையில் பெரியவர் யார் எனில், ஆன்ம அறிவை அறிந்தவரே பெரியவர் என்கிறார்.

மகான்கள் பக்தி நெறியோடு இல்லற நெறிகளையும் உபதேசம் செய்வர். நாயகி சுவாமிகளும் அவ்வழியில் அறவுரை பகர்ந்துள்ளார். எடுத்துக் காட்டாக ஒன்றைப் பார்ப்போம்.

ஸர்வுநாஸ்ரம் ஹந்தன் றோநா
ஸர்வி லிக்கெஸ்ராம் ஸொடி ஸ்ரீலக்ஷ்மி ஜாநா

பசுஞ்சாணம் கொண்டு வீட்டை மெழுகிடும், குறிப்பாக சமையலறையை மெழுகிடும் பழக்கம் மிகப் பழங்காலந்தொட்டே இருந்துவரும்

ஓர் நற்பழக்கமாகும். கோமாதா எனப் போற்றப்படும் பசுவின் சாணம் ஓர் சிறந்த கிருமி நாசினியாகும். அண்மைக் காலத்தில் இந் நற்பழக்கம் நலிந்து, வருகின்றது. இதை அறிந்த சுவாமிகள் தாய்மார்கட்கு இப்பழக்கத்தைக் கடைப்பிடிக்குமாறு கூறுகின்றார். மேலும் சாணி மெழுகிடாத இடத்தில் சமையல் செய்யலாகாது என்கிறார். ஏன்? சாணி மெழுகிடப்பெற்ற இடமானது தூய்மை பெறுவதோடு லட்சுமியின் அருள் நிறைந்த இடமாகின்றது. இது இந்துக்களின் பெரும் நம்பிக்கையாகும். இதைத்தான் சுவாமிகள் குறிப்பிடுகின்றார்.

கிரி தராக் பொவெத் அவ்னா ரா:நா
கோர் தெக்கி தெரஸ்தக் வாட் துஸர் நீ:நா

தமிழில் ஆண்டாள் போன்று, விரஜமொழியில் மீரா ஓர் சிறந்த கிருஷ்ண பக்தை. இவள் தமது பாடல்களில் கிரிதரா என்ற சொல்லை அதிகம் பிரயோகம் செய்திருக்கிறாள். கிரிதரன் என்ற சொல்லிற்கு மலையைத் தாங்கியவன் என்பது பொருள். இந்திரனின் கோபத்தால் பெரும் மழையினால் ஏற்பட்ட துன்பத்திலிருந்து கோவர்த்தன கிரியைத் தனது விரலால் தாங்கி மக்களைக் காப்பாற்றியவன் கண்ணன். துன்பத்தினின்று காப்பாற்றுபவன் கண்ணன் ஆவான். அவனை உள்ளன்போடு அழைத்தால் கண்டிப்பாக வருவான் என்கிறார் சுவாமிகள். தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்ற நான்கினைத் தமிழில் அறம், பொருள், இன்பம், வீடு என்று குறிப்பிடுவர். இதில் வீடு என்ற சொல்லானது இல்லத்தினைக் குறிப்பிடுவதோடு இறைவனின் திருவருள் நிரம்பிய மோட்ச உலகினையும் குறிக்கின்றது. நாயகி சுவாமிகள் இவ்வடியில் வீட்டைத் தேடிப் பிடிக்க இதைத் தவிர வேறு வழியில்லை என்கிறார். சுவாமிகள் வீடு என ஈண்டுக் குறிப்பிடுவது மோட்சம் என்னும் விடுதலைப் பேறே. இதில் சிறப்பு என்னவெனில் தமிழில் போன்று 'கோர்' என்ற இச் சௌராட்டிரச் சொல்லும் இல்லத்தினைக் குறிப்பதோடு மோட்சத்தைக் குறிக்கவும் பயன்படுகின்றது. கண்ணனின் நாமத்தை உச்சரித்தல், அவனை வழிபடல் இவையே வீடுபேறு அடைய உதவும். மாற்றுவழி பிறிதொன்றும் இல்லை என்கிறார்.

நாயகி சுவாமிகள் சௌராட்டிர மொழியில் மட்டுமின்றித் தமிழிலும் பல பாடல்கள் பாடியுள்ளார்கள். இதில் அகத்துறையில் கண்ணன் காதலின்பத்தில் இவர் பாடியுள்ள சுமார் 250 ஈரடிக் கண்ணி வகைப் பாடல்கள் ஜெயதேவர் இயற்றிய கீதகோவிந்தம் என்னும் அஷ்டபதி எனும் வடமொழிக் காவியத்திற்கு ஒப்பானது. கண்ணனைப் பிரிந்து விரகதாப நிலையில் தோழியிடம் கூறுவதாக அமைந்துள்ள இப் பாடல்களில் சிருங்கார ரசமும் காணப்படுகின்றது. படித்துச் சுவைத்து இன்புறத்தக்கது. ஒன்றிரண்டு பாடல்களைப் பாருங்கள்.

கண்ணன் எப்போது வருவானடி கலந்து சுகம் பெறவே
நண்ணியவித் துன்பவினை நாசமதாயறவே (1)

மால்செய்தே நம்மைப் பிரிந்த மாதவனெங்கேடி
கால்கள் நோவச் சென்றானே கண்ணனைத் தேடிப்போடி (2)

பிரிவதற்கான பிழைநாம் என்செய்தோம்கூறு
எரியுதே சர்வாங்கமு மிங்கென் செய்வோம் தேறு (3)

கண்பஞ்சம்தீர எப்போ தடைகுவானோ கண்ணன்
விண்கதிர் மதி கண்களாய் விளங்கும் பச்சை வண்ணன் (4)

திருவடிப்பொடியைக் கொணர்ந்து தேகமெங்கும் பூசு
வரும்வினையை அறுத்துவிடும் மாலடியைப் பேசு(5)

சுவாமிகளின் சௌராட்டிர மொழிக்கிருதிகள், தியாகப் பிரம்மத்தின் தெலுங்குக் கிருதிகளுக்கு இணையானவை. இசையுலகினர் போற்றிப் பாடத்தக்கவைகளாகும். மதுரையின் ஜோதி வழியில் நடந்து, உயர்பேறும் பேரின்பமும் பெறுவோமாக!

"பிஞ்ஞகன்"

'பிஞ்ஞகன்' என்று சிவபெருமானுக்குப் பெயர். பிஞ்ஞகம் என்பது தலைக்கோலத்தைக் குறிக்கும். 'பிஞ்ஞகம் தலைக்கோலம்' என்பது திவாகர நிகண்டு. சிவபெருமான் சடைமுடியும், அம்முடிமேல் அழகிய வெண் பிறையும், குளிர்ந்த கங்கை நீரும், உடையவராதல் பற்றிப் பிஞ்ஞகன் எனப்பட்டார். மெல்லின எழுத்துக்களை ஒலிப்பதற்கு இடமாகிய நாசியை (மூக்கை)ப் பெற்றதன் பயன், மெல்லின எழுத்துக்களாலாகிய பிஞ்ஞகன் முதலிய இறைவனின் திருப்பெயர்களை ஓதுதலேயாகும். பிஞ்ஞகன் என்னும் திருப்பெயரிலுள்ள மெல்லின எழுத்துக்களின் நல்லிசையைப் பொருந்த ஒலிக்காத மூக்கின் துளையை இழிந்த சாக்கடையின் துளை என்று சொல்வதா? புற்று என்று சொல்வதா? அல்லது பசுமட் கலத்தில் துளை என்று சொல்வதா? என்று இராமலிங்க அடிகளார் குறிப்பிடுதல் காணலாம்.

''புல்லங் கணநீர்ப் புழைஎன்கோ? புற்றென்கோ?
சொல்லும் பசுமண் துளைஎன்கோ ?—வெல்லுஞ்சீர்
வீயாத பிஞ்ஞகப்பேர் மெல்லினத்தின் நல்லிசைதான்
தோயாத நாசித் துளை''

—சிவநேச வெண்பா,
இராமலிங்க அடிகளார்.

கலையின் தோற்றமும், வளர்ச்சியும்

திரு. க. சி. கமலையா, B.A., அசோக நகர்.

கலைத் தோற்றம் :

'கல்' என்ற வேர்ச் சொல்லிலிருந்துதோன்றிய சொற்கள் பல. 'கல்வி' 'கலை' 'கற்பு' என்பவை அவற்றுட் சில. கலை என்பது பன்மையில் செவிநுகர் இசையையும், கண் கண்டு களிக்கும் காட்சிப் பொருள்களையும், குறிப்பதாகும். செவிக்குணவாகும் இசையும், கண்ணுக்கு இன்பம் தரும் ஆடல், ஓவியம், சிற்பம் என்ற இவை போன்றவையும் நுண்கலைகளாகும். பொறிகள்வழிக் கலைகளை நுகர்ந்தாலும் புலன்களை உலுக்கிக் கலை இன்பம் தருகிறது. உள்ளத்தில் அலைமோதும் கருத்துக்கள் செவிகேட்கக் கண்காணக் கலைகளாய் மிளிர்கின்றன.

கலையும் வாழ்க்கையும் :

கலை வாழ்க்கையுடன் ஒன்றியது. கலை ஒரு சிலர் கேட்பதற்கும், மற்றும் சிலர் பார்ப்பதற்கென்றும் எழுந்ததல்ல. அது ஒரு பொதுச் சொத்து. மனிதன் காட்டுமிராண்டியாயிருந்து நாகரிகமடைந்தவரையும் அதன் பின்னும் அவனுடைய ஒவ்வொரு படைப்பும் கலைப் பொருளே. கலைஞன், இல்லாத ஒன்றைப் படைக்கிறதில்லை. முன்னமே உள்ள ஒன்றைக் கண்டு பிடிக்கிறான். எவ்வாறு விஞ்ஞானி தெரிந்திராத ஒன்றைத் தெரியப்படுத்துகிறானோ, அது போலத்தான் கலைஞனும். ஒளிக்கற்றை நீரையடைந்ததும் திசைமாறிச் செல்வதைப் பார்த்த விஞ்ஞானி, தான் கண்ட ஒன்றைக் கொண்டு சில உண்மைகளை ஆராய்ச்சியால் நிறுவுகிறான். நீருக்குள் அமுங்கியுள்ள பாத்திரம் வெளியே எடுக்கும்பொழுது முன்னை விடப் பளுவாக இருக்கிறது. அதாவது நீருக்குள் செல்லும்போது அப்பாத்திரம் தன்னுடைய எடையை இழக்கிறது. இந்த உண்மையை அறிந்த விஞ்ஞானி அதைக் கொண்டு பல சாதனைகளைச் செய்கிறான். எனவே கலை, இல்லாத ஒன்றின் படைப்பல்ல. 'கலை இயற்கைப் பொருளல்ல. அது செயற்கை' என்பது ஆனந்தக் குமாரசாமியின் ஆழ்ந்தகருத்து.

நிழலை நாடியும் புயற்காற்று பெருமழை ஆகியவற்றினின்றும் புகலிடம் தேடிய ஆதி மனிதன், இயற்கையாய் அமைந்த மலைக்குகைகளை அடைந்து ஆறுதல் பெற்றான். வளைவாய் அமைந்த கூரைகளைத் தோற்றுவிக்கக் குகைகள் அவன் கருத்துக்களுக்கு முன்னோடி. இயற்கைக் குகைகள் இல்லாத இடத்தில் பாறையைக் குடைந்து குகைகளாக மாற்றலாம் என்ற எண்ணம் பிறந்து உருப்பெற்றதில் வியப்பொன்றுமில்லை. இந்தியாவில் காணப்படும் வளைந்த கூரைகள் உலகின் பிறபகுதிகளில் காணப்படுவதில்லை. திராவிடர்களுடைய மூங்கில் கட்டுமானம் தோடர்களுடையகுடிசையைப் பின்பற்றியதாகும். பக்கவாட்டில் மலையைக் குடைந்த மனிதன், மேலிருந்து கற்களை உடைத்தெறிந்து ஒரே கல்லாலான மண்டபம், தேர், கோயில் ஆகியவற்றைக் காலப்போக்கில் எழுப்பினான்.

கலைக்கருவூலங்கள் :

'கலை விரவா உழைப்பு காட்டுமிராண்டித் தனம்' என்கிறார் ஆங்கில ஆசிரியர் ஜான் ரஸ்கின். தொன்று தொட்டுத் தமிழகத்தில் ஒவ்வொரு வீடும் ஒரு கலைக்களஞ்சியம், குடம் குத்துவிளக்கு, உண்ணும்கலம், குடிக்க உதவும் 'தம்ளர்கள்', குளிக்க எடுக்கும் செம்புகள், மிளகு சீரகம் முதலியவை வைத்துக் கொள்ளும் அஞ்சறைப்பெட்டி, உப்புமரவை இன்னும் இவை போன்றவை எத்தனையோ வீடுகளில் அன்றாடம் கையாளப்படும் பொருள்கள். தமிழ் நாட்டு இல்லங்களை அணிசெய்யும் குடம் போன்ற தாமரைப்பூ அமைப்பிலுள்ள கலைப் பொருளை வேறு எங்கும் காண்பதரிது. இவையனைத்தையும் அநாகரிகம் என்று கருதிஅகற்றி வரும் தமிழ் இல்லங்கள் பெருகி வருகின்றன. பறக்கும் பறவை, மலர்கள், காய்கள் ஆகியவையெல்லாம் நம் வாழ்க்கையில் இடம் பெறுகின்பன. தங்க அணிகளான பிச்சிப்பூமாலை, மாங்காய்மாலை ஆகியவை இன்றும், - நாகரிகம் முதிர்ந்த காலத்திலும்-பெரிதும் விரும்பி அணியப்படுகின்றன. பட்டுச்சேலைகளில் முதன்மையாக நிற்கின்ற காஞ்சிபுரம்-மதுரை வகைகள் போர்வைகள் பலவகைகளில் நெய்யப்பட்டு உலகப் புகழ் பெற்று உலவுகின்றன. சென்னிமலை விரிப்புகள் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. சின்னாளப்பட்டி ஆடைகளை அமெரிக்காவில் ஆர்வத்தோடு அணிகின்றனர். ஆண்களும் பெண்களும், நம் கலையை ஒளிப்

பதிவு செய்யும் இவை, தொன்றுதொட்டு வந்த நம் கலைச்செல்வங்களைப் பின்பற்றி எழுந்தன வாகும். இன்று மண்பாண்டங்கள் படிப்படி யாக மறைந்து வருகின்றன. அவைதாம் எத் தனை வகை ?

''குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்
குசவன் மனத்துள்ள தெல்லாம் வனைவன்''

என்று திருமூலர்பெருமான் திருவாய் மலர்ந் தருளியது புனைந்துரையல்ல. குசவன் வனைந்த மட்பாண்டங்களையொட்டி எழுந் தவைகளே பிற்காலச் செம்பு, ஈய, வெள்ளிப் பாத்திரங்கள். பனையோலையைச் செம்மைப் படுத்திப் பல வண்ணம் கொடுத்துக் குறுக்கும் நெடுக்குமாக ஓடவிட்டு, முடைந்த ஓலைப் பெட்டிகள் கண்ணைக் கவர்வன. அத்தகைய பெட்டிகளைப் பின்பற்றி உண்டான வெண்கல- பித்தளை-வெள்ளிப்பெட்டிகள் வீடுகளில் இன் றும் உள.

கலைப் பொருள்கள் :

இறைவனை ஏத்தி எழுந்த தமிழ்நாட்டுக் கோயில்கள் கலைக்கோயில்களாகும். பிராகாரங் களுடனும் மண்டபங்களுடனும் விமானங்களு டனும் கோபுரங்களுடனும் விளங்கும்கோயில் கள் அருங்காட்சியகங்களாகும். வழிபாட்டு மூர்த்திகள், வழிபாட்டுக்குதவும் பொருள்கள், சிற்பவேலைப்பாடமைந்த தூண்கள், செப்புத் திருமேனிகள், அத்திருமேனிகளை அழகுசெய் யும் அணிகள், ஒளி வீசி நிற்கும் திருவிளக்கு நாச்சியார்கள், மூர்த்தி ஊர்ந்து செல்லும் தேர்கள் - சப்பரங்கள்- வாகனங்கள், கோயில் களையொட்டி வெட்டப்பட்ட தெப்பக் குளங்கள் - இவ்வாறாக ஆயிரம் வகைக் கலைச் சாதனைகளை வேறெங்கும் காண முடியாது. கலையின் நோக்கும் போக்கும் தமிழ்நாட்டில் கோயிலை மையமாகக் கொண்டவை. அங்குக் காணும் ஆயிரமாயிரம் கலைப்பொருள்களை உண்டாக்கிய வினைஞர் எவரென்று தெரியாது. தமிழ்நாட்டுக் கலைகளில் கலைஞன் ஒரு மனி தனே தவிர அவனுக்கென்ற 'தனித்துவம்' கிடையாது. அவன் தன்னையழித்துக் கொண் டவன். சோழர் காலத்தில் முழுமை பெற்ற நடராஜத் திருமேனி இன்றும் வடிக்கப்பட்டால் அதே போன்றுதான் அமையும்; மாறுதலிருக் காது; இருக்க முடியாது. பல நூற்றாண்டு களாக முழுமை பெற்ற அத் திருவுருவத்தை மாற்றியமைக்கப் புரட்சிகரமான தீவிரவாதி கூட விரும்பமாட்டான்.

தமிழ்நாட்டின் கலை சமயச் சார்புடையது. நாயன்மார்கள் புகழ்ந்த பாடல் பெற்ற தலங் களும், ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த ருளிய திருப்பதிகளும், கலையின் கருவூலங் களாய் இன்றும் திகழ்கின்றன. எல்லையில் லாப் பரம்பொருளுக்குத் தன் அறியாமையைப் பொருட்படுத்தாது மனிதன் உருவம் கொடுக்க முயல்கின்றான்; மாபெருங் கோயில்கள் கட்டி மகிழ்கின்றான். இறைவன் திருவுருவங்களுக் கும் உறுப்புகள் கையாளும் பொருள்களுக்கும் உட்பொருள் உண்டு. தமிழ்நாட்டுக்கலை- இந்தியக்கலை, ஏன் மேனாட்டில் பெரும்பா லோர் பார்த்துப் பழகிய கிறிஸ்தவக் கலையில் கூட சில பொருள்களுக்கு உள்ளுருத்தம் உண்டு. உட்பொருளையும் அடையாளத்தையும் குழப் பிக் கொள்ளக் கூடாது. பறக்கும் இறக்கை கிறிஸ்தவக் கலையில் தேவதைகளைக் குறிக் கும். இறக்கையின் உட்பொருள் வானுலகத் தேவதை. காக்கிச் சட்டை அணிந்தவன் தோளில் இறக்கை அமைந்தால் விமானம் ஓட்டு கிறவன் என்பதற்கு அடையாளம். தமிழ் நாட்டுக் கலையில் உட்பொருள் சிறப்பாக அமைகிறது. முருகன் கைவேல் அறியாமையைக் குத்தி அழிக்கும் ஞானவேல். நடராஜப் பெரு மானின் கையிலுள்ள துடி அவன் ஆற்றுகின்ற படைப்புத் தொழிலைக் குறிக்கும். இப்படி யாக எதற்கும் உட்பொருள் உண்டு. தமிழ் நாட்டுக் கலைகளைவிட இலக்கியம் பழமை யானது. தொல்காப்பியம் விதித்துள்ள முறை களின்படி ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட புல வர்கள், காலத்தால் வேறுபட்டாலும், வழுவாது சில முறைகளைப் பின்பற்றியுள்ளனர். இதுவே சங்க இலக்கியத்தின் சிறப்பு. உலகில் வேறெங் கும் காணா நெறிமுறையைச் சங்க இலக்கியத் தில் காணலாம். கலையில் உட்பொருள் (Symbolism in Art) தமிழ்நாட்டுக் கலைகளில் சிறப் பான இடம் பெறுவதற்கு இது ஒரு காரண மாயிருக்கலாம்.

கலைஞனும சமூகமும் :

கலைப்பொருள், வண்ணக் கலவைகளைக் கையாளும் முறையாலோ, ஒலிகளை எழுப்பும் வகையாலோ, மரம், கல், உலோகம், ஆகிய வற்றைப் பயன்படுத்திச் சமைக்கும் உருவங் களாலோ, மனத்துக்கு உகந்ததாகலாம். அறிவு முதிர்ச்சியின் விளைவு கலை எனலாம். கலை ஞன் மற்றைய மனிதர்களுக்கு மாறான மனித னல்லன். ஏனெனில் ஒவ்வொரு மனிதனுமே ஒரு சிறப்பான குணம் படைத்த கலைஞன். அவ் வாறில்லையெனில் அவன் மனிதனில்லை. பொறியியல் துறையில் வல்லவனாயினும், கணி தம் பயில்கின்றவனாயினும், சமையற்காரனா யினும், அறுவைச் சிகிச்சை மருத்துவனாயினும், அனைவருமே கலைஞர்கள். நெல்வயலில் நாற்றை நடும் பெண்களினும் சிறந்த கலை ஞர்கள் உண்டா? எல்லாருமே கலைஞர்களாத லால் கலையை உணர்ந்து கொள்ளும் பகுத் தறிவு மக்களிடம் உண்டு. முன்னால் படைக் கப்படாத ஒன்றைக் கலைஞன் படைக்கிறான் என்பது ஒப்புக்கொள்ள முடியாதது. உள்ளு ணர்வால் உந்தப்பட்டதைக் கலைஞன் படைக் கிறான். இதற்கு முன்னால் பல்லாயிரம் தடவை கள் ஒரு முறையில் கலைப் பொருள் படைக்கப் பட்டு வந்தது என்பதனால் மட்டும், கலைஞன் சிறப்பு குறைந்துவிடாது. கருத்துக்கள் எவ ருடைய உரிமையும் இல்லை. அவை மனித இனத்தின் பொதுச் சொத்து. காலைக் கதிரவ னும் மாலைப் பகலவனும், எழுவதையும் மறை வதையும் நாள்தோறும் கண்ட காட்சிகள் தானே என்று, கலைஞர்கள் அக்காட்சிகளை ஓவியம் தீட்டுகின்றதை நிறுத்திக்கொண்டு விட் டார்களா ? ஆடல்வல்லான் செப்புத் திரு

மேனிகள் ஒரேபடியாக அமைந்துள்ளன என்பதால் கலைஞன் அத்திருமேனிகளை ஆக்குவதை நிறுத்திக் கொண்டு விட்டானா? இல்லையே. அப்படி நிகழ்ந்திருந்தால் தமிழ்நாட்டுக் கலை வற்றிப் போயிருக்கும். சிவபுரம் நடராசர் முதல் பிறநாட்டு அருங்காட்சியகங்களை அணி செய்யும் நூற்றுக்கணக்கான செப்புத் திருமேனிகள் வடிக்கப்பட்டிரா. கலையில் பேர் தெரியாமை (அநாமதேயம்) அதாவது கலைப்பொருள் எவரால் ஆக்கப்பட்டது என்பதைப் பெரும்பாலும் அறியோம். ''இந்துப் பண்பாடு எவ்வித மாறுதலுமின்றித் தெற்கில் தழைத்தது. தென்னிந்தியாவின் கோயில் மாநகரங்களில் பழங்கால உலகம் உள்ளும் புறமும் மாற்றத்துக்குள்ளாகாமல் நிலவி வருவதைக் காட்டிலும் வியப்பான காட்சியை உலகில் வேறெங்கும் காண முடியாது''*(1)* என்பது ஆனந்தக் குமாரசாமியின் பொன்னுரை.

அழகு, சமயம், கலை :

புறக்கண் கொண்டு காண்பதை அகக்கண்ணால் கண்டு கலைஞன் ஓவியமாய்த் தீட்டுகிறான். அல்லது சிற்பமாய்ச் செதுக்குகிறான். இயற்கையின் கொள்ளை அழகைக் காணக் கண் கோடி வேண்டும். என்றாலும் அவ்வழகைத் தான் நுகர்ந்தவழிக் கலைஞன் தன் மன நிறைவை வெளிப்படுத்துகிறான். கிரேக்கக் கலையில் அழகு இயற்கையுடன் போட்டியிடும் அளவுக்கு உண்மையாகத் தோன்றுகிறது. கிறிஸ்தவக் கலையில் அன்பின் கனிவு தோன்றும். தமிழ்க் கலையில் கலைஞன் தன்னை வழிபடுபவனாய்க் கருதி இறைவனுக்குக் காணிக்கை செலுத்தி, அவன் பேராற்றலுக்குத் தலை வணங்கி அஞ்சலி செலுத்துகிறான். தன்னை மறந்த நிலையிலிருந்து அழகைக் கலைஞன் வழிபடுகிறான். சமயம், மரபு என்பவைகளைச் சிக்கெனப் பிடித்து மக்கள் மனத்து எழும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் கருவியாய்க் கலைஞன் விளங்குகிறான். அவன் சமூகம் ஊற்றுகிற நீரைக் குடித்து நாற்றாக வளர்கிறான். கலைஞன் ஒரு துணைக் காரணம். முதற்காரணம் சமூகமே. சமூகம் நினைப்பதைக் கலைஞன் செயற்படுத்துகிறான். தமிழ்நாட்டுக் கலைஞன் வழிச் சமூகம் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது என்று சொன்னால் அது மிகைபடக் கூறியதன்று.

'அழகு' என்பது பற்றி நிலவும் கருத்து எவ்விதமாயினும் கலைஞன் அழகைக் காண்பது உள்ளத்தெழும் உணர்ச்சியைப் பொறுத்தது. அனுபவத்தின் பல தோற்றங்களே 'நவரசங்கள்'-ஒன்பது சுவைகள் அல்லது சாறுகள். ரசம் அல்லது சாறு சுவைக்கப்படுகிறது. அழகு உணரப்படுகிறது. அழகு ஒருவனுடைய விருப்பத்தைப் பொறுத்ததல்ல. இன்பத்தைத் தருகிறதோ வெறுப்பைக் கிளறுகிறதோ, உயர்ந்ததோ தாழ்ந்ததோ, கொடியதோ அன்றி அன்பைப் பொழிகிறதோ, புரியாததோ அன்றிச் செம்மையானதோ, உள்ளதோ அல்லது கற்பனையோ மனிதன் நெஞ்சில் சுவையை எழுப்பாத பொருளே இல்லையெனலாம். *(2).*

''சமயம் கலை என்பவை' ஒரே அனுபவத்தின் இரு பெயர்களாகும்-உளதாகி ஒன்றுபடும் உள்ளுணர்வு. இது இந்து சமயக் கருத்து மட்டுமல்ல. வெளிநாட்டவர்க்கும் உடன்பாடு. காதல் எவ்வாறு காதலன் நேரிடை அனுபவமோ, உண்மை எவ்வாறு தத்துவ ஞானியின் நேரிடை அனுபவமோ, அவ்வாறே அழகு என்பதும் கலைஞனுடைய நேரிடை அனுபவம். இவை இறைவனின் மூன்று தோற்றங்கள். காய்தல் உவத்தல் இன்றிக் கையாளும் கலைப்பணியின் வழியேதான், அவன் தன்னுடைய அனுபவத்தை உரைக்க முடியும். எனவே எந்தப் பொருளையும் கலைஞன் கையாளலாம். ஏனெனில் அங்கிங்கெனாதபடி இறைவன் பெரியவரிடமும் சிறியவரிடமும், உயிரினங்களிலும் உயிரற்றவைகளிலும், நல்லவைகளிலும் தீயவைகளிலும் ஒருங்கே உறைகிறான்''*(3)* என்பது ஆனந்தக் குமாரசாமியின் உரையாகும்.

1 Ananda K. Coomaraswamy: Introduction to Indian Art.

2 Dasarupa, IV, 45 (Quoted by Ananda K. Coomaraswamy in 'The Dance of Siva' in Hindu View of Art: Theory)

3 Ananda K. Coomaraswamy: Hindu View of Art : Theory.

கடவுளின் படைப்பும், மனிதனின் படைப்பும்

(வெண்பா)

சத்தியத்தைப் போற்றும்உயர் சான்றோனே, ஈசன்றன்
வித்தகநற் படைப்பில் மேலோனாம்(1); — அத்தகையில்,
ஈசன்அருட் பண்புநலன் எண்ணி வகுத்ததுவே,
மாசில்மணி தன்மாட்சி யாம்(2)!

—ந. ரா. முருகவேள்.

(1) "An honest man is the noblest work of God."

(2) "The noblest conception of God is the highest achievement of Man."

சேக்கிழார் செந்தமிழ்

''மகாவித்துவான்''

திரு. பண்டித வி. நடேசனார், B.A., J.P., சென்னை

திருவாரூரில் சுந்தரருக்கும், பரவையார்க்கும் திருமணம் நடந்தது. சிவனாரும் சிவனடியாரும் மகிழ்ந்தனர். பரவையாரை வழங்கிய பரமனைப் பாட வழக்கம்போல் ஒரு நாள் கையிற் பொற்கோலும், காதுகளில் கவச குண்டலங்களும், மார்பிற் பூணூலும் நெற்றியில் விபூதியும் உடைய திருக்கோலத்துடன் நம்பியாரூரர் பூங்கோயிலை அடைந்தார். அப்போது தேவாசிரிய மண்டபத்திலே (ஆயிரக்கால் மண்டபம்) அடியார்கள் அமர்ந்திருத்தலைக் கண்டார். ''இவர்களுக்கு யான் அடியனாகும் நாள் எந்நாளோ?'' என எண்ணிக்கொண்டே, தியாகராசர் சந்நிதியில் நின்றார். இறைவன் காட்சியளித்தார். ''அடியவர்களை அடைக, பாடுக'' என்றார். 'பாடும் வல்லமை தருக' என்று, சுந்தரர் இறைவனை வேண்டினார். தியாகேசப் பெருமான் ''தில்லை வாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்னும் அடியினை அடியெடுத்துக் கொடுத்துப் பாடுமாறு சொல்லி மறைந்தார்.

நம்பியாரூரர் தேவாசிரிய மண்டபம் அருகு சென்றார்; நின்றார். மகா வீரர்களாம் (ஐம்புலனடக்கமே மாவீரம்) அடியார்களின் திருப்பெயர்களைச் சொல்லி அறுபத்து மூவர்க்கும் தொகையடியார் ஒன்பதின்மர்க்கும் 'அடியேன்' எனக் கூறும் திருத்தொண்டத்தொகையைப் பாடினார். சுந்தரரும் சிவனாரும் கூடிச் சொற்ற ''தில்லை வாழ் அந்தணர்'' யாரைக் குறிக்கும் என்பதே, இக்கட்டுரையின் நோக்கமாகும்.

'தேவாசிரியன்' என்றும் ''தேவாசிரியன் எனும் காவணம்'' என்றும் கூறுப. இது ஒரு மண்டபம். இஃது இன்று ஆயிரக்கால்மண்டபம் என்ப. திருவாரூர்ப் பூங்கோயிலுள் திருவாயின் முன்றிலில் உள்ளது. அடியார்கூட்டம் நிறைந்துள்ள சபை. இங்கு நம்பியாரூரர் திருத்தொண்டத்தொகைப் பதிகத்தைப் பாடியருளினார்; திருக்கூட்டத்தின் அருகு அணைந்தார். திருமால் நான்முகன் முதலிய தேவர்கள் தரிசனத்துக்குக் காத்திருக்கையில் காலம் பார்த்து அடியார்களை ஆசிரயித்து இருக்குமிடம் ''தேவாசிரியன்'' என்பது.

திருவாரூர்த் தியாகேசர் திருவாக்கை முதலாகக்கொண்டு, தமிழ்மாலைச் செம்பொருளால் திருத்தொண்டத் தொகையான திருப்பதிகம், உம்பர்பிரான் தானருளும் உணர்வுபெற உலகு ஏத்த, சுந்தரர் பாடினார். தில்லையே சுந்தரரையும் சேக்கிழாரையும் கவர்ந்த ஊர். சுந்தரரின் நினைவு தியாகேசர்க்கும் தெரியும். எனவே ''தில்லைவாழந்தணர்'' எனச் சுந்தரர்க்கு அடியெடுத்துக் கொடுத்தார். அதனையே முதலாகக்கொண்டு வியாபாரம் செய்தார் சுந்தரர். தியாகேசர் வாக்கு எனினும், நடேசர் வாக்கு எனினும் ஒக்கும். சுந்தரர் தில்லையில் கண்ட நடேசர் தரிசனம் பற்றிக் கூறும் சேக்கிழார் செந்தமிழ்ப்பா, ''ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள'' என்பதே சாலும்.

திருவெண்ணெய்நல்லூரில் சுந்தரரை நோக்கி ''முன்பெனைப் பித்தன் என்றே மொழிந்தனை ; ஆதலால் என்பெயர் பித்தன் என்றே பாடுவாய்'' என்றார் அந்தணர். அவ்வாறே திருவாரூரில் தம்மைப் பாடுதற்கும் தம் அடியாரைப் பாடுதற்கும் இவ்வாறு இப்பாட்டில் ஒரு பாதி அடியினை (''தில்லை வாழந்தணர்) முதலாக எடுத்துத் தந்தருளினார். இஃது அடியார் பெருமை விளக்க வந்த பாட்டும் தொடருமாம். ''அந்தணர்க்கடியேன்'' என்னாது ''அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்றது ஊன்றியறியத்தக்கது. அடியாரின் அருமையையும் பெருமையையும் குறித்தற்கே பாடினார் சுந்தரர் என்க.

''தில்லைவாழந்தணர்'' என்றது உலகில் முதல் அந்தணராகிய நடராச மூர்த்தியையே குறிக்கும். ''தில்லை வாழந்தணர்தம் அடியார்'' என்றது, நடராசரை முதல்வராகக் கொண்ட தில்லை மூவாயிர முனிவர்களையும் குறிக்கலாம். 'அந்தணர்' என்றது ''அறவாழி அந்தணன்'' என்ற திருக்குறளிற் போலாம். எனவே தில்லைவாழ் அந்தணர் என்பது முதற்கண் இறைவனை உணர்த்தும்; அதன் பின்னர் இரட்டுற மொழிதலால் மூவாயிரவோரையும் உணர்த்தும். தில்லையில் என்றும் வாழ்பவன் நடராஜா ஒருவனே. ஏனையோர் நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை எனும்பெருமையுடையோராவர். அப்பு, வாயு, தேயு, பிருதுவி என்னும் நான்கு பூதங்களும் ஆகாசத்தில் அடங்கும். பிருதுவித் தலமாகிய ஆரூரும் ஆகாயத் தலமாகிய தில்லை (சிதம்பரம்) யில் ஒடுங்கும். இவ்வுண்மையைக் குறிக்கவே திருவாரூரி

தியாகர், தில்லை வாழ் அந்தணர் என்று கூறினார் போலும். தில்லை வாழ்ந்தணர்க்கும் அடியேன், அவர்தம் அடியார்களுக்கும் நான் அடியேனாயுள்ளேன் என்றார் சுந்தரர். சிவனுக்கு மாத்திரம் அடிமை இல்லை. சிவனடியார்க்கும் அடிமை என்பதே இதன் பொருள்.

''தில்லை வாழ் அந்தணர்'' என்பது வினைத்தொகை. பண்டும் இன்றும் என்றும் உள்ளவராதலின் (சிவன்), முக்காலத்தும் வரும் வினைத்தொகையாற் கூறினார் நாயனார்என்க. 'தம் அடியார்' தமக்கே உரிய அடிமைத் தொழிலைச் செய்பவர். அடியார்க்கும்-உம்மை எச்சவும்மை. ''அந்தணர்க்கே (சிவன்) யன்றி அடியார்க்கும் அடிமை'' என்க. அந்தணரியலும் (சிவன்), அவர்தம் அடியாரியலும் சேக்கிழார் தம் பெரியபுராணத்தில் வேறு வேறு பிரித்திருத்தல் காண்க! இதயம் இயங்கவில்லையெனில் மனிதன் இயங்கான். விராட்புருடனது இதயமே தில்லை ; தில்லைநாயகன் ஆடினால் அணுவும் அசையும். எனவே ''தில்லைவாழ் அந்தணரே'' முதல் அந்தணர்; முதல் தொண்டருமாவர்.

இங்கும் ''வேதியர்'' என்பது நடராசப் பெருமானையே குறிக்கும். ''திருமார்பன் முதலாய தேவருக்கெல்லாம் மறையோன் சிவனேயாம் என்று ஒரு வாய்மை மறை கரைந்தது'' என்பது பேரூர்ப் புராணம்.

''தீதிலாத் திருத்தொண்டத் தொகை தரப் போதுவார்'' எனவே, திருத்தொண்டத் தொகைப் பொருள் யாவும் இறைவனருளிய பதிஞானத்தாற் பாடியதாலும், அவனே தந்த மொழி கொண்டு பாடியதாலும், அது முற்றும் தியாகேசருடைய வாக்கேயாய் பதிவாக்காகிய வேதமே; அழகிய அருளே எனத்துணியலாம். தில்லை மூவாயிரவரைக் குறிக்கும் இடங்களில் ''அந்தணர்கள் விதித்தமுறை வழிநிறுத்தல் அதிசயித்தார்'' (திருநாளைப் போவார் புராணம் 36). ''அந்தணனாம் எந்தை பிரான்'' (சிவன்)-திருநீலகண்டர் புராணம் 32. ''திருவுடைய தில்லை வாழ் அந்தணர்கள் கைதொழுதார்''-திருநாளைப் போவார் புராணம் 35. ''உம்பர் நாயகரடியார் பேருவகை நாமெய்த நம்பியாரூரர் திருக்கூட்டத்தின் நடுவணைந்தார், தம்பிரான் தோழரவர் தாம் மொழிந்த தமிழ் முறையே எம்பிரான் தமர்கள் திருத்தொண்டேத்தல் உறுகின்றேன்''

தம்பிரான் தோழர் - உம்மைத் தொகை. தம்பிரானும் தோழருமாகிய அவர்கள் சேர்ந்து பாடிய திருப்பதிகம்; இது திருத்தொண்டத் தொகை. இப்பதிகத்தில் ''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்ற தொடர், தம்பிரானுடையதாதலாலும், இதனை ஓதும் உணர்வு சிவனவன் அருளியதாதலானும், இஃது இருவரும் அத்துவிதமாய்க் கலந்த நிலையில் மொழிந்த பொய்யாத்தமிழ் (பதிகம்) என்றறிக.

**

திருமால்நெறிக்குத் திருமதில்கள்

நண்ணா அசுரர் நலிவெய்த, நல்லஅமரர் பொலிவெய்த
எண்ணா தனகள் எண்ணும் நன்முனிவர் இன்பம் தலைசிறப்ப,
பண்ணார் பாடல் இன்கவிகள் யானாய்த் தன்னைத் தான்பாடித்
தென்னா என்னும் என்னம்மான் திருமாலிருஞ் சோலையானே

என்னும் திருவாய்மொழிப் பாசுரத்தின் வியாக்கியானத்தில், நம்பிள்ளை என்னும் வைணவப் பேராசிரியர் அருளிச் செய்திருக்கும் இனிய செய்தியாவது :—

திருவரங்கம் பெரிய கோயிலில், கிருமிகண்ட சோழன் என்னும் சோழ அரசன் ஒருவன், திருமதில்களை இடித்துப் பாழ் செய்தான். அவனுக்குப் பின்னர்ப் பட்டம் சூடி அரசாட்சி செய்யப் போந்த அவனுடைய மகன், தன் தந்தை செய்த செயலைக் கேட்டு வருந்தி, ''அந்தோ! என் தந்தைக்கு இங்ஙனமும் ஒரு அறிவுகேடு நேர்ந்ததோ ? ஒரு மதிலை இடித்துப் பாழ் செய்வதனால், வைணவ சித்தாந்தம் குலைந்ததாய் விடுமோ? திருவாய்மொழி, இராமாயணம் என்னும் இரண்டு பெரிய வலிய மதில்கள் வைணவ சித்தாந்தத்துக்குப் பாதுகாப்பாக உண்டே! அவைகளை ஒருவர் அசைக்கப் போமோ? அவைகள் என்றென்றும் நின்று நிலைபெற்று, ஸ்ரீ வைணவ சித்தாந்தத்தைப் பரப்பி வளர்த்துப் போதரும் மாட்சிமை வாய்ந்தன என்னும் உண்மையை, எந்தையார் அறிந்திலரே !'' என்று கூறி வருந்தி நின்றானாம்.

இவ்வரலாற்றுச் செய்தியைக் குறிப்பிட்டு, நம்பிள்ளை அவர்கள், ''நண்ணா அசுரர் நலிவெய்த நல்லஅமரர் பொலிவெய்த ஆய்த்துத் திருவாய் மொழிதான் அவதரித்தது. துதிக்கப்படுபவனுடைய அவதாரம் போலவே ஆயிற்று, துதியினுடைய அவதாரமும்'' என்று அருளிச் செய்துள்ளார். திருவாய்மொழியின் சிறப்பை விளக்கும் அரிய குறிப்புக்களுள், இது சிறப்புடையது ஒன்றாகும் என்பது, நாம் உணர்ந்து மகிழ்தற்குரியது.

—ஆசிரியர்.

அமுதனார் பெருமை

''மகாமகிமோபாத்தியாய'' ''மகாவித்துவான்''

திரு பி. ப. அண்ணங்கராச்சார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்.

உலகுக்கெல்லாம் ஓர் உயிராய், அறிஞர்களுக்கெல்லாம் ஆருயிரான எம்பெருமானார் பெருமைகளைக் குறித்துக் கவிபாடின புலவர்கள் பலர் இருந்தாலும், அவர்களுள் திருவரங்கத்தமுதனார் என்னும் ஆசிரியர்க்கு உண்டான ஏற்றம் ஒப்புயர்வற்றதாகும். மணவாள மாமுனிகளின் திருவடிகளைப் பணிந்து உய்ந்தவரான எறும்பியப்பாவின் பெருமையைச் சொல்லவந்த ஒரு சுலோகம் பிரசித்தமானது: அதன் பொருள் யாதெனில், ''திருமகள் கொழுநனான சர்வேசுவரனைக் கவிபாடித் துதித்தவர்களுள் நம்மாழ்வார் எப்படி சிறப்புப்பெற்றவரோ, அந்த நம்மாழ்வாரைக் கவிபாடித் துதித்தவர்களுள் மதுரகவிகள் எப்படி சிறப்புப் பெற்றவரோ, எம்பெருமானாரைக் கவிபாடித் துதித்தவர்களுள் திருவரங்கத்தமுதனார் எப்படி சிறப்புப்பெற்றவரோ, அப்படியே மணவாள மாமுனிகளைக் கவிபாடித் துதித்தவர்களுள் எறும்பியப்பா சிறப்புப்பெற்றவர்'' என்பதாகும். உண்மையில் எம்பெருமானாருடைய திருக்குணங்களைப் புகழ்ந்து பேசப் பிறந்த நூல்களுள், திருவரங்கத்தமுதனார் திருவாய் மலர்ந்தருளிய இராமாநுச நூற்றந்தாதிக்கு இணையானது எதுவும் இல்லை என்று சபதம் இட்டுரைப்பர் பெரியோர். சொல்நோக்கும் பொருள்நோக்கும் தொடைநோக்கும் நடைநோக்குமாகிய எந்நோக்கும் மிக அற்புதமாக அன்றோ, நூற்றந்தாதியில் அமைந்துள்ளது! அமுதனாருடைய வரலாற்றைப் பற்றிச் சிறிது கூறுவோம்.

இவர் பங்குனித் திருநாளில் அஸ்த நட்சத்திரத்தில், மூங்கிற்குடி என்னும் சிறந்த திருவம்சத்தில் தோன்றித் திருவரங்கம் பெரிய கோயிலில் இருந்துவந்தார். பெரியகோயில் நம்பி என்று, முதலில் இவர்க்குப் பிரசித்தி இருந்துவந்தது. அட்டப்பிரபந்தம் செய்தருளினவரும், பட்டர்திருவடிகளில் ஆசிரயித்து உய்ந்தவருமான பிள்ளைப்பெருமாள் அய்யங்கார்க்கு இவர் திருத்தகப்பனார் என்று சிலரும், பாட்டனார் என்று சிலரும் சொல்லுவர். அமுதனார் கூரத்தாழ்வானை அடிபணிந்து வாழ்ந்துவரும் நாளில், ஆழ்வானுடைய திருவுள்ள மகிழ்ச்சிக்காக அவருடைய ஆசிரியரான எம்பெருமானார் பற்றிச் சில பிரபந்தங்கள் இயற்ற வேண்டும் என்னும் அவா, இவர்க்கு உண்டாயிற்று. அதனால் ஒன்றிரண்டு பிரபந்தங்களைச் செய்து, அவற்றை எம்பெருமானார் திருமுன்னர்க் கொண்டுபோய் வைத்தார். எம்பெருமானாரும் அவற்றை அவிழ்த்துக் கடைக்கணிக்க, அவை தம் திருவுள்ளத்திற்கு இசைந்திராமையாலே புறக்கணித்திருந்தார். அப்படி சுவாமியின் திருவுள்ளத்தில் வெறுப்பு உண்டானதற்கு யாதுகாரணம் என்று இவர் எண்ணிப் பார்க்கையில், தாம் இயற்றிய பிரபந்தங்கள் சுவாமியின் திருவுள்ளத்திற்குப் பாங்காக அமைந்திலது என்று தெரிந்துகொண்டார். சுவாமி (இராமாநுசர்) கற்ற கல்விகளின் விரிவையும், அவர் புறச்சமயங்களைக் களைந்தொழித்து வெற்றிபெற்ற வரலாறுகளையும் பரக்கப் பாடியிருந்தாராம் அப்பிரபந்தங்களில். ஆழ்வார்கள் பக்கலிலும், அவர்களது ஈரச் சொற்களிலும் சுவாமி இராமாநுசர்க்கு இருந்த ஈடுபாடு மிகவும் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருந்ததாம். இத்தகைய துதிவகையில் சுவாமியின் திருவுள்ளம் சிறிதும் உகப்புக் கொள்ளவில்லைஎன்று தெரிந்தபின்னர், அவர்தம் திருவுள்ளத்திற்குப் பாங்காக வேறொரு பிரபந்தத்தைப் பணித்து அவர்தம் திருவடி வாரத்தில் கொணர்ந்து சமர்ப்பித்தார். இப்போது அநுசந்தானத்தில் உள்ள, இராமாநுச நூற்றந்தாதியே அது.

இராமாநுசர் அதனைக் கடைக்கணித்தருளிப் புன்முறுவல் கொண்டிருந்தார். அப்போது ஆழ்வான், ஆண்டான், எம்பார் முதலான அந்தரங்க சீடர்கள் யாவரும் அப்பிரபந்தத்தை உற்றுநோக்கி, அதில் சுவாமியின் திருவுள்ள உகப்பையும் விசேடித்தறிந்து, மிக்க குதூகலம் கொண்டு, ''இப்பிரபந்தம் ஆழ்வார்களின் திவ்வியப்பிரபந்தங்களுக்கு நிகராக எல்லோராலும் கைக்கொள்ளப் பெறும்படி நியமித்தருளவேண்டும்'' என்று திருவடிகளைப் பிடித்துக்கொண்டு பிரார்த்தித்துப் பணிந்தனர். சுவாமி அதற்கு எளிதில் இசைந்தருளவில்லை. குசலவர்கள் பாடினதை இராமபிரான் கேட்டருளி மிகவும் உவந்து கொண்டாடிய வரலாற்றை எடுத்துரைத்து, அனைவரும் வற்புறுத்தி வேண்டிக்கொள்ள, இத்தனைபேருடைய குதூகலத்திற்கு நாம் கேடு விளைத்தல் ஆகாதென்று திருவுள்ளம்பற்றி, அழகிய மணவாளனுடைய நியமனத்தையும் பெற்று,

சுவாமி இராமாநுசர் அப்படியே நியமித்தருளினார். இராமாநுசர் எழுந்தருளியிருந்த காலத்திலேயே இப்பிரபந்தம் சந்நிதிகளிலும், திருமாளிகைகளிலும் சேவிக்கப்பெறத் தொடங்குவதாயிற்று. திருக்கார்த்திகைக்குப் பிறகு அநத்தியயனக்கிரமம் திவ்வியப்பிரபந்தங்களுக்குப் போலவே, இந்த நூற்றந்தாதிக்கும் அன்று தொட்டு எங்கும் நிகழ்ந்துவரக் காண்கையாலே, இதற்குத் திவ்வியப்பிரபந்தத்தோடு எல்லாவகையிலும் சமத்துவம் ஏற்பட்டமை, பூர்வாச்சார்யர்களின் சம்மதமாயிற்று என்பது அறியத்தக்கது.

உபதேசரத்தினமாலையில் ''கண்ணிநுண் சிறுத்தாம்பை''க் குறிப்பிட்டு ''வாய்த்த திருமந்திரத்தின் மத்திமாம் பதம்போல், சீர்த்த மதுரகவி செய்கலையை, ஆர்த்தபுகழ் ஆரியர்கள் தாங்கள் அருளிச்செயல் நடுவே, சேர்வித்தார் தாற்பரியம் தேர்ந்து'' என்று அருளிச்செய்த மணவாளமாமுனிகள், இராமாநுச நூற்றந்தாதியைப் பற்றி ஒன்றும் அருளிச்செய்யாததேன்? திருவரங்கத்தமுதனார்க்கு நாள்பாட்டும் பணிக்கவில்லையே, ஏன் ? என்று சிலர் கேட்பதுண்டு. சந்நிதிகளில் விக்கிரகப் பிரதிட்டை பெற்றிருந்தவர்களுக்கு மட்டுமே, நாள் பாட்டு அருளிச்செய்யல் ஆயிற்று என்பது சாரமான சமாதானம்.

நூற்றந்தாதிக்கும் அமுதனார்க்குமாகவே உபதேசரத்தினமாலையில் ''இன்றுலகீர் சித்திரையில் ஏய்ந்த திருவாதிரைநாள்'' என்று தொடங்கி, மூன்று பாசுரங்கள் அருளிச் செய்தது. திருக்குருகைப்பிரான்பிள்ளான், நஞ்சீயர் பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத்திருவீதிப் பிள்ளை, பிள்ளைலோகாச்சாரியர், முதலான ஆசார்யர்களைப் பற்றியும் உபதேசரத்தின மாலையில் குறிக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் அவதரித்த மாதமோ நட்சத்திரமோ அதில் பேசப்படவில்லை. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்கள் பணித்தவர்களுக்கு மாத்திரமே ''மாதங்கள் நாள்கள் தமை மண்ணுலகோர் தாம் அறிய ஈது'' என்று சொல்லியுள்ளார். அந்த வரிசையில் ''சித்திரையில் செய்ய திருவாதிரை'' என்று நாள்பாட்டு அமைந்திருப்பதை ஆழ்ந்து நோக்கவேண்டும். திவ்வியப்பிரபந்தம் அருளிச் செய்யாத எம்பெருமானார்க்கு, மதுரகவிகளுக்கு அடுத்த படியாக நாள்பாட்டு அமைத்தது, இராமாநுச நூற்றந்தாதிக்காகவே என்பது சொல்லவும் வேண்டுமோ? எம்பெருமானார்க்கே யன்றோ, விக்கிரகப் பிரதிட்டை உள்ளது.

நாலாயிரத்துக்கும் வியாக்கியானம் செய்தருளின பெரியவாச்சான் பிள்ளை, நூற்றந்தாதிக்கு ஏன் வியாக்கியானம் செய்தருளவில்லை என்று, சிலர் விமர்சிப்பது உண்டு. தோத்திர ரத்தினத்திற்கு வியாக்கியானம் செய்தருளினவர், பஞ்சஸ்தவாதிகளுக்கு வியாக்கியானம் செய்தருளவில்லை என்பதனால் ஒரு குறையில்லையே, அதுபோலவே இங்கும் என்று நாம் கருதலாம். அமுதனாருடைய திருவம்சத்தில் ஒருவர் நூற்றந்தாதிக்கு வியாக்கியானம் செய்திருந்தார் என்றும், அது கிடைக்காமற் போயினமையால் மணவாளமாமுனிகள் வியாக்கியானித்தருளினர் என்றும் கேட்டிருந்ததுண்டு.

நூற்றந்தாதியின் திருவவதாரத்தைப் பற்றி மற்றொரு விதமான ஐதிகமும் பெரியோர் பக்கலில் கேட்டிருந்ததுண்டு. அமுதனார் இப்பிரபந்தம் இட்டருள்வதாக, அடையவளைந்தான் திருமதிலுக்கு இவ்வருகேயிருந்த ஒரு தென்னஞ்சோலைத் திருமண்டபத்தில் வீற்றிருந்து பட்டோலை கொண்டிருக்கும்போது, எம்பெருமானார் கூரத்தாழ்வான் முதலான சில அந்தரங்க சீடர்களோடு அவ்விடத்தே எழுந்தருளினாராம். அப்போது ''செழுந்திரைப் பாற்கடல்'' என்கிற நூற்றைந்தாம் பாசுரம் தலைக்கட்டி ''இருப்பிடம் வைகுந்தம்'' என்கிற பாசுரம் எழுதவேண்டிய தருணமாய் இருந்ததாம். அதுமுதலான மூன்று பாசுரங்களும் எம்பெருமானார் திருமுன்பே தொடுக்கப்பட்டனவாம். பிறகு அரங்கேற்றியானபின் ''இந்த விசேடத்திற்கு நினைவாக இப்பிரபந்தத்திற்கு மாத்திரம் சாற்றுப்பாசுரங்கள் மூன்றாய் இருக்கட்டும்'' என்று ஆழ்வான் நியமித்தருளினாராம். ஆனதுபற்றியே மற்றையே பிரபந்தங்களுக்கு இரண்டு பாசுரம், சாற்றுப்பாசுரமாய் இருப்பதுபோல் அல்லாமல், இப்பிரபந்தத்திற்கு மூன்று பாசுரம் சாற்றுப்பாசுரமாகச் சம்பிரதாயம் நிகழ்கின்றது என்று பெரியோர்கள் கூறுவர். இந்த ஐதிகம் ''இருப்பிடம் வைகுந்தம்'' என்கிற பாட்டின் பிரமேயத்திற்கு மிகவும் பொருந்தியிருக்கும்.

இந்த நூற்றந்தாதிபோல் மற்றும்பல பிரபந்தங்களும், சுவாமி இராமாநுசர் விஷயமாகத் திருவவதரித்திருந்தன என்பது, இதுதன்னில் ஆறாவது பாசுரத்தினால் அறியலாகிறது. ''இயலும் பொருளும் இசையத் தொடுத்து ஈன் கவிகள் அன்பால் மயல்கொண்டு வாழ்த்தும் இராமாநுசனே'' என்றது காண்க. அப்படிப்பட்ட பிரபந்தங்கள் எல்லாம் பகல்விளக்கும் மின்மினியும் ஆகி, இப்பிரபந்தம் ஒன்றே சிறப்புற்று விளங்குவதற்குக் காரணம், இதிலுள்ள சப்தகாம்பீரியமும், அர்த்தபுஷ்டியுமே ஆகும். சுவாமி காலத்திலே சுவாமியின் நியமனம் கொண்டு, கருடவாகன பண்டிதர் பணித்த திவ்யசூரி சரிதத்தில் பதினெட்டாம் சருக்கத்தில் 51-ஆம் சுலோகத்தில், இப்பிரபந்தத்தின் பெருமை பேசப்பட்டுள்ளது. இதன் பொருளானது, திருவரங்கத்தமுதனார் அமுதப் பெருக்கான தமிழ்மொழியாலே எம்பெருமானாருடைய வைபவங்களைப் பேசுகிற நூற்றந்தாதிப் பிரபந்தத்தை அருளிச்செய்தார் என்பதாம்.

இந்நூற்றந்தாதியில், சுவாமி இராமாநுசர்க்கு ஆழ்வார்கள் பக்கலிலும் ஆச்சாரியர்

கள் பக்கலிலும் இருந்த எல்லையற்ற ஈடுபாடு மிக அற்புதமாகப் பேசப்பட்டிருக்கின்றது. பாசுரம் தொடங்கும்போதே ''மாறன் அடி பணிந்து உய்ந்தவன்'' என்றும், உடனே ''குறையல் பிரான்அடிக்கீழ் விள்ளாத அன்பன் இராமாநுசன்'' என்றும் அருளிச் செய்தது, சுவாமியின் உண்மையான வைபவத்தை விளக்குகின்றது. பொய்கையார் பூதத்தார் முதலான ஒவ்வோர் ஆழ்வார் திறத்திலும், சுவாமிக்கு இருந்த பக்தியின்மிகுதி பல பாசுரங்களினால் பேசப்பட்டிருக்கின்றது. சிறப்பாக நம்மாழ்வார் பாசுரங்களையும் திருமங்கையாழ்வார் பாசுரங்களையும் கொண்டே, சுவாமி வாழ்ந்தருளினார் என்பது இப்பிரபந்தத்தில் அடிக்கடி காட்டப்படுகின்றது! ''உறுபெரும் செல்வமும் (19), 'கூட்டும்விதி என்று கூடுங்கொலோ' (29). 'கூறும் சமயங்கள் ஆறும் குலைய' (46), 'நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன' (54) 'பண்தரும் மாறன் பசுந்தமிழ்'' (64), 'கலிமிக்க செந்நெற் கழனிக் குறையல்' (88) என்கிற பாசுரங்கள், சிறப்பாக ஊன்றி நோக்கத்தக்கன. நாதமுனிகள், ஆளவந்தார் முதலான பரமாச்சாரியர்கள் திறத்தில் சுவாமிக்கிருந்த பக்திப் பெருங்காதல் 20, 21 முதலான சில பாசுரங்களில் பேசப்பட்டது. கோயில் திருமலை பெருமாள்கோயில் முதலான திவ்விய தேசங்களில், சுவாமிஇராமாநுசர் கொண்டிருந்த ஆதாராதிசயம் 31, 35, 42, 47, 49, 76, 81, 91 106 முதலான பாசுரங்களில் பேசப்பட்டுள்ளன.

—oOo—



மன்னார்குடி வட்டம், கோட்டூர் அருள்மிகு கொழுந்தீசுவரசுவாமிகோயில் திருமண மண்டபத்தினை, நமது அறநிலைய ஆணையர் திரு. யு. சுப்ரமணியன் அவர்கள் திறந்து வைத்தல்.

திருத்தேவனார்தொகை எம்பெருமான்

டாக்டர் திரு ந. சுப்புரெட்டியார், M.A., Ph.D.

வைணவக் கொள்கைப்படி சித்து எனப் பெறும் ஆன்மாவும், அசித்து எனப்பெறும் மக்கள் விலங்கு முதலியவற்றின் உடம்பு முதலிய உலகப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் காரண மான பிரகிருதியும் (மூலப்பகுதியும்), இறைவ னது உடலாக உள்ளன. இதனைச் சரீர-சரீரி பாவனை (உடல்-உயிர்-உறவு) என்று குறிப்பிடு வர் மெய்விளக்க நூலார். அதாவது பிரம்மம் எனப்படுவது உயிராகவும், இந்த அகிலம் உட லாகவும் உள்ளன. இராமாநுசர் இந்த உயிர், அகிலமாகிய உடலைத் தாங்கி அதற்கு ஆதாரப் பொருளாகவும், அதனைத் தன்னாட்சிக்குட் படுத்தும் பொருளாகவும் (நியந்தா), அந்தப் பொருளைப் பயன்படுத்தும் தலைவனாகவும் (சேஷி) உள்ளது என்பர். இதன் காரணமாகத் தான், உடல் தாங்கப் பெறும் பொருளாகவும் (ஆதேயம்), தன்னாட்சிக்குட்பட்ட பொரு ளாகவும் (நியாம்யா), தலைவனுக்காகவே நிலைபெற்றிருக்கும் பொருளாகவும் (சேஷன்) கொள்ளப் பெறுகின்றது. இதனால் இந்த உடல் உயிரினின்றும் பிரிந்தியங்க முடியாத பொருளாக (பிரகாரா) அமைந்து கிடக்கின்றது. உயிருள்ள ஆன்மாவிற்கு முற்றிலும் கட்டுப் பட்டதாகவும், தன் பயனுக்கு உட்பட்டதாக வும், முழுமை நிலையில் சார்ந்திருக்கும் தன்மை யுடையதாகவும் இருக்கும் எந்த ஒருபொருளும் அந்த ஆன்மாவின் உடல் என்று வழங்கப் பெறும்.

ஆகவே உயிருள்ள பொருள்களனைத்தும், உயிரற்ற பொருள்களனைத்தும் ஒரு சேரப் பர மான்மாவின் உடலாக உள்ளது; காரணம், அவை பரமான்மாவால்தான் உயிர் பெறுகின் றன, இயங்குகின்றன, அப்பரமான்மாவிற்கு மனநிறை வைத்தருவதற்காகவே நிலைபெற் றுள்ளன. மூலப்பகுதி விரிவடைந்து மக்கள், விலங்கு முதலியவற்றின் உடம்புகளாகவும், மற்றுமுள்ள பொருள்களாகவும் ஆகின்றது. உயிர், தன்னுடைய வினைகட்கேற்ப ஒவ் வோருடம்பை அடைகின்றது. அதுவே உயி ருக்குப் பிறப்பாகும். இறைவன் (பிரம்மம்) மூலப்பகுதியின் விகாரமாகிய எல்லாப் பொருள் களுள்ளும் அந்தர்யாமியாக மறைந்துள்ளான். மூலப்பகுதியின் விகாரமாகிய உடம்பிற்கு வளர்தல், பருத்தல், குறைதல் முதலிய விகா ரங்கள் உண்டு. அவ்வுடம்பினுள்ளிருக்கும் உயி ருக்கு அத்தகைய விகாரம் ஒன்றும் இல்லை. ஆயினும் தான் ஆற்றிய வினைகட்கேற்ப உடம்பைப் பெற்றிருத்தலால், இவ்வுடம்பைப் பற்றிய இன்ப துன்ப உணர்ச்சிகள் உயிருக்கு உண்டு. தனக்கு உடலாகவுள்ள இந்த உடம்பி னுள்ளும் உயிரினுள்ளும் அந்தர்யாமியாகவுள்ள இறைவன், உடம்பினுடைய விகாரங்களையும், உயிரினுடைய இன்ப துன்ப உணர்ச்சிகளையும் அடைவதில்லை. இறைவன் வினைகாரணமாக இல்லாமல், தன் விருப்பினால் இவ்விரண்ட னுள்ளும் அமைந்திருத்தலால், இவ்விரண்டின் தன்மைகளையும் அவன் அடைவதில்லை. இதுவே சரீர-சரீரி பாவனையின் தத்துவமாகும்.

திருத்தேவனார்தொகையை நோக்கி, நாம் மாட்டு வண்டியில் வந்து கொண்டிருக்கும்போது இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் குமிழியிட்ட வண்ணம் உள்ளன. இந்த ஊரின் பெயர் 'திருத் தேவனார்தொகை' என்று ஏற்பட்டதன் கார ணத்தையும் சிந்திக்கின்றோம். பாற்கடல் கடைந்தபோது வெளிவந்த திருமகளை இத் தலத்தில்தான் எம்பெருமான் திருமணம் புரிந்து கொண்டதாகவும், அத் திருக்கோலத்தில் இங்கு எழுந்தருளியுள்ளதாகவும் புராண வரலாற்றால் அறிகின்றோம். இத் திருமணத்திற்குத் தேவர்கள் திரண்டு வந்தனர் என்றும், அங்ங னம் இவர்கள் திரண்ட இடம் என்பது பற்றி இத்திருத்தலம் 'திருத்தேவனார்தொகை' என்று திருநாமம் பெற்றது போலும் என்றும் ஊகிக் கின்றோம். 'தேவனார்' என்பது தேவர்களை யும், 'தொகை' என்பது நெருங்கி நின்ற இடத் தையும் குறிப்பனவாகக் கொள்ளலாம். இந்த இடத்தைத் திருமங்கையாழ்வார்.

> ''கார்ஆர்ந்த திருமேனிக் கண்ணன்
> அமர்ந்து உறையும் இடம்
> சீர்ஆர்ந்த பொழில் நாங்கைத்
> திருத்தேவ னார்தொகை''(1)

[கார் ஆர்ந்த-மேகத்தோடொத்த ; சீர் ஆர்ந்த-அழகுபொருந்திய; பொழில்-சோலை]

என்று குறிப்பிடுவர். இத்திருத்தலம் திருநாங் கூர்த் திருப்பதிகளுள் நான்காவதாகும்.

இந்தத் திருத்தலம் சீகாழி இரயில் நிலை யத்திலிருந்து தென்கிழக்குத் திசையில் ஆறு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. நாம் திருநகரியிலிருந்து ஒரு மாட்டு வண்டியை அமர்த்திக்கொண்டு இத்திருக்கோயிலுக்கு வரு கின்றோம். இது கீழைச் சாலை மாதவப்பெரு மாள் கோயில் என்று பொது மக்களால் வழங்

---

1. பெரிய திருமொழி 4.1:10

கப் பெறுகின்றது. இத்திருக்கோயில் மண்ணியாற்றின் தென்கரையில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. இதனைத் திருமங்கையாழ்வாரும்,

''போது அலர்ந்த பொழில்சோலைப்
புறம்எங்கும் பொருதிரைகள்
தாது உதிர வந்து அலைக்கும்
தடமண்ணித் தென்கரைமேல்
மாதவன்தான் உறையும் இடம்''(2)

[போது-பூக்கள்; அலர்ந்த-மலரப்பெற்ற; தாது-மகரந்தப்பொடி; தடம்-பெரிய, மாதவன் திருமகள்நாதன்.]

என்று தம் பாசுரத்தில் குறிப்பிடுவர். இத்திருக்கோயில் மேற்கு நோக்கி அமைந்திருப்பது ஒரு தனிச் சிறப்பாகும். நுழைவாயிலில் இராசகோபுரம் இல்லை. இப்பகுதியிலுள்ள பெரும் பான்மையான திருக்கோயில்கட்கு இராசகோபுரம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் விமானம் இரண்டு தளமாக அமைந்து மிகவும் கம்பீரமான தோற்றத்துடன் இத்திருக்கோயிலுக்கு அழகூட்டுகின்றது. கருவறைக்கு முன்னர் விசாலமான மண்டபம்ஒன்று உள்ளது. இதனைக் கடந்துதான் கருவறைக்குச் செல்ல வேண்டும்.

எம்பெருமான் திருமணம் புரிந்துகொண்டு, பின்னானார் வணங்கும்சோதியாக நின்றருளும் இத்தலத்தில், திருமணமாகாதவர்கள்வந்து வழிபாடு செய்தால் திருமணம் செய்துகொள்ளும் வாய்ப்புப் பெறுவர் என்ற நம்பிக்கை மக்களிடையே இருந்து வருகின்றது. இதே போல் மகப்பேறு இல்லாதவர்களும் இங்கு வழிபட்டு மக்கட் செல்வம் பெற்று மகிழ்கின்றனர் என்ற நம்பிக்கையும் உள்ளது. திருக்கோயிலுக்குப் பின்புறத்தில் இவ்வூர்ச் சுடுகாடு உள்ளது. இத்திருக்கோயிலின் விமானத்தின் நிழல் விழுகின்றது என்றும், இது இத்தலத்தின் மற்றொரு தனிச் சிறப்பு என்றும் கூறுவர். இதனை அறிந்த நாம்,

''சரணமாகும் தனதாள்அடைந்
தார்க்கு எல்லாம்
மரணமானால் வைகுந்தம்
கொடுக்கும் பிரான்''(3)

என்ற திருவாய்மொழியை நினைவு கூர்கின்றோம். எம்பெருமானைச் சரணம் அடைந்தவர்கள் யாவரும் இவ்வுடல் முடியும்வரை (பிராரத்த கருமம் தீரும் வரை) பொறுத்திருக்க வேண்டும் என்பதனையும், அதன்பிறகு சஞ்சித கருமங்களைத் தீயினில் தூசாக்கி' வீடுபேற்றினை நல்குவான் இறைவன் என்பதனையும் சிந்திக்கின்றோம்.

2. பெரிய திருமொழி 4.1:1

3. திருவாய். 9.10:5

இத்திருக்கோயில் எழிலார்ந்த சோலைகள் சூழ்ந்த சூழ்நிலையில் அமைந்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் இருப்பது அல்லவா? திருமங்கையாழ்வாரும் இதனைப்''பொழில்சூழ் திருத்தேவனார் தொகை''4 ''தேனாரும் மலர்ப்பொழில் சூழ் திருத்தேவனார் தொகை'' 5 ''சுந்தரநற் பொழில்புடைசூழ் திருத்தேவனார் தொகை''6 ''சேடேறு பொழில்தழுவு திருத்தேவனார் தொகை''7 ''சீராரும் மலர்ப்பொழில்சூழ் திருத்தேவனார் தொகை''8 என்று குறிப்பிடுவர். திருக்கோயிலின் புறமெங்கும் பூக்கள் மலரப் பெற்ற சோலைகள் உள்ளன; அப்பூக்களின் தாது உதிரும்படியாக மண்ணியாற்றின் அலைகள் வீசுகின்றன. வண்டுகளும் ''தென்னா தென'' வென்று இசைபாடுகின்றன(1). இந்த மண்ணியாற்றங்கரையில் மிக்க பலசாலிகள் வசித்து வருகின்றனர்.(5) இதனைத் திடகாத்திரமுள்ள உழவர்களைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். இவர்களைத் தவிர திருநாங்கூரில் அக்காலத்தில் அந்தணர்களும் வாழ்ந்து வந்தனர் என்பதைப்''பெருஞ் செல்வத்துஎழில் மறையோர் நாங்கைதன்னுள்'' என்று இருமுறை (7, 8) குறிப்பிடுவதைக் காணலாம்.

இங்ஙனம் சிந்தித்த நிலையில் திருக்கோயிலின் முன்வாசலில் ஓய்வு கொண்ட பின்னர் எம்பெருமான் சந்நிதிக்குச் செல்லுகின்றோம். இத்திருக்கோயில் எம்பெருமானின் திருநாமம் தெய்வநாயகப் பெருமாள் என்பது. உற்சவரின் திருநாமம் மாதவப்பெருமாள்; தாயார், கடல்மகள் நாச்சியார். இவர் திருக்கோயிலின் தென்பகுதியில் தனிக்கோயிலில் எழுந்தருளித் திருவருள்பாலிக்கின்றார். இங்கு எம்பெருமானும் தாயாரும் சிறிய உருவத்தைக் கொண்டு திகழ்கின்றனர். மூலவர் மேற்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன், நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றார். அர்ச்சகர் கற்பூர தீபம் காட்டும்போது எம்பெருமானின் அழகிய திருமுக மண்டலமும் மந்தகாசமான தோற்றமும் நம்மைப் பரவசப்படுத்துகின்றன. உடனே திருமங்கையாழ்வாரின் பத்துப் பாசுரங்களையும் மிடற்றொலியால் ஓதி உளங்கரைகின்றோம். பின்னர் வெளிவந்து பிராகாரத்தை வலம் வருகின்றோம். அடுத்து, தாயார் சந்நிதிக்கு வந்து அவரைச் சேவித்து அவர்தம் திருவருளுக்கும் பாத்திரர்களாகின்றோம்.

பின்னர்த் திருமண்டபத்தில் ஓரிடத்தில் அமர்ந்து திருப்பாசுரத்திலுள்ள தத்துவக் கருத்துக்களில் அசைபோடுகின்றோம். ஒரு பாசுரத்தில் வரும்,

4. திருவாய் 4.1:2

5. ஷை 4.1:2

5. ஷை 4.1.3

6. ஷை 4.1:4

7. ஷை 4.1:7

8. ஷை 4.1:8

''யாவருமாய் யாவையுமாய்
எழில்வேதப் பொருள்களுமாய்
மூவருமாய் முதலாய
மூர்த்தி'' (9)

[யாவருமாய்—சேதனப் பொருள்களாய்; யாவையுமாய்-அசேதனப் பொருள்கள் எல்லாவற்றையும்; வேதப்பொருள்களுமாய்-வேதம் கூறும் பொருள்களுமாய்]

என்ற பாசுரப்பகுதி ''உயிருள் பொருள்களையும், உயிரில் பொருள்களையும் எம்பெருமான் உடலாகவுடையவன்; நான் மறைகளும் எம்பெருமானின் சொரூபம், உருவம், குணம், விபூதி முதலியவற்றைக் கூறுகின்றன. எம்பெருமான் நான்முகன் உருவத்தில் உலகைப் படைக்கின்றான்; தானான தன்மையில் காத்தல் தொழிலைச் செய்கின்றான்; உருத்திரன் உருவத்தில் அழிக்கும் தொழிலை மேற்கொள்ளுகின்றான்'' என்பதை உணர்த்துகின்றது. மேற்கூறிய சரீர-சரீரி பாவனையின் தத்துவத்தை,

''வானாடும் மண்ணாடும்
மற்றுள்ள பல்லுயிரும்
தானாய எம்பெருமான்'' (10)

என்று வேறொரு விதமாகக் கூறுவர் ஆழ்வார்.

இதில் ''பல்லுயிரும் தானான எம்பெருமான்'' என்பதற்குப் பெரியவாச்சான்பிள்ளை தரும் சிறப்பான விளக்கம்: ''தானும் குடும்பமுமாய்க் கலநெல் ஜீவிப்பானொருவனை 'உனக்கென்ன வேணும்?' என்றால், எனக்குத் கல நெல் வேணும்' என்னுமிறே தன்னபிமானத்துக்குள்ளே அடங்கு கையாலே. அப்படியே. தானே இதுக்கெல்லாம் அபிமாநியாயிருக்கிற ஸர்வேச்வரன் -ஸ்வ வ்யதிரிக்த ஸமஸ்த வஸ்துக்களும் (தன்னைத் தவிரப் பிறபொருள்களும்) தனக்கு ப்ரகாரமாய் புறம்பு ஒருவரின்றிக்கே உபயவிபூதியும் தன்னிழலிலே யொதுங்கும்படியிருக்கையாலே தலைவனானவன் வந்து நித்திய வாசம் பண்ணுகிற தேசம்'' என்பது.

இந்திரன், இமையவர், முனிவர்கள், நான்முகன், கதிரவன், சந்திரன் இவர்கட்குத் திருவருள் பாலித்தவன் இந்த எம்பெருமான். பிரளய ஆபத்தில் ஆகாயம், கடல்கள், தீவுகள், குலவரைகள் இவற்றையெல்லாம் திருவமுது செய்து உய்யக்கொண்டபிரான், பாலகனாய் ஏழுலகத்தையும் உண்டு ஆலிலையில் கனைப் பாறியவன். இரணியாசுரனைக் கிழித்தழிக்க நரசிம்மனாக எழுந்தருளியவன். குவலயாபீடம் என்ற மதக்களிற்றினைப் பாகனோடு அக்களிற்றின் தந்தத்தைக் கொண்டே அழித்தவன். சீதாப்பிராட்டியை மணம்புணர்வதற்காக வயிரம் பற்றித் திண்ணிதான வில்லை முறித்தவன். இந்த எம்பெருமான்களே திருத்தேவனார் தொகையில் எழுந்தருளியிருப்பவன் என்று பாசுரங்களில் தெரிய வைக்கின்றார் ஆழ்வார்.

இங்ஙனம் சிந்தித்த நிலையில் திவ்விய கவியின் திருப்பாசுரம் நினைவிற்கு வர அதனையும் ஓதுகின்றோம்.

''ஆர்க்கும் வலம்புரியால்
அண்டமும் எண்டிசையும்
கார்க்கடலும் வெற்பும்
கலங்கினவால்—சீர்க்கும்
திருத்தேவ னார்தொகைமால்
செவ்வாய்வைத்து ஊதத்
தருத்தேவ னார்தொகையும்
சாய்ந்து'' (11)

[ஆர்க்கும் - பேர்ஆரவாரம் செய்யும்; வலம்புரி-பாஞ்சசந்நியம்; அண்டம்-அண்டங்கள்; கார்-கரிய; வெற்பு-அஷ்டகுலபர்வதங்கள்; சீர்க்கும்-சிறப்புபெற்ற; மால்-திருமால்; தரு-கற்பகம்; தேவனார் தொகை-தேவர்களின் கூட்டம்; சாய்ந்து-மூர்ச்சித்துவிழ].

இதில் திருச்சங்கத்தின் சிறப்பு கூறப்பெறுகின்றது. பாரிசாத மரத்தை உம்பர் உலகினின்றும் கொணர்வதற்காக எம்பெருமான் தேவலோகம் சென்றபோது திருச்சங்கத்தைத் திருப்பவழ வாயில் வைத்து ஊதியவுடன் தேவர்களின் கூட்டம் மூர்ச்சித்து விழுந்தனர்; அண்டங்கள், எண்திசைகள், கார்க்கடல், குலபருவதங்கள் இவையாவும் நிலைகலங்கிப் போயின என்கின்றார் அய்யங்கார். அய்யங்காரின் அநுபவத்தையும் பாடலால் பெறுகின்றோம்.

பலச் சுருதிப் பாடலின் கருத்தைச் சிந்திக்கின்றோம். இந்தப் பத்துப் பாசுரங்களை ஓதுபவர்கள் திருநாட்டில் திருவனந்தாழ்வான் முதலிய நித்திய சூரிகளுடன் கூடிவாழப் பெறுவர் என்பதை நினைந்து, பரிபூர்ண பிரம்மாநந்தம் பெற்ற மனநிறைவுடன் காவளம்பாடிக்குச் செல்லுகின்றோம்.

9. திருவாய் 4.1:2
10. ஷை 4.1:3

11. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி-33



1-1-1979 முதல் 30-6-1980 முடிய

ஆலயங்களில் கும்பாபிஷேகம் நடைபெற்ற விபரம்

ஆணையாளர் அலுவலகம்,
இந்து சமய அறநிலைய
ஆட்சித்துறை,
சென்னை—600 034.

வரிசை எண்.	ஆலயத்தின் பெயர், கிராமம் மற்றும் வட்டம்.	கும்பாபிஷேகம் அல்லது சம்ப்ரோக்ஷணம் நடைபெற்ற தேதி	இதர விசேஷங்கள், முக்கிய திருவிழாக்கள் நடைபெற்ற விபரம்/தேதி
1.	2.	3.	4.
	அருள்மிகு		
1.	புருஷோத்தமப் பெருமாள் ஆலயம், நாங்கூர், சீர்காழி வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.	...	மங்களாசாசன உற்சவம் — ஜனவரி 79, 28-1-79 முதல் 30-1-79 வரை.
2.	மருந்தீஸ்வரர் ஆலயம், திருவான்மியூர், சைதைவட்டம், செங்கற்பட்டு மாவட்டம்	1—2—1979	அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்.
3.	கோட்டை மாரியம்மன் ஆலயம், திண்டுக்கல் நகர், மதுரை மாவட்டம்.	1—2—1979	திருக்குடநன்னீராட்டு விழா
4	இலட்சுமிநாராயணசுவாமி திருக்கோயில், குருவராயப்பேட்டை, அரக்கோணம் வட்டம், வடாற்காடு மாவட்டம்.	2—2—1979	அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்.
5.	ஏகாம்பரேஸ்வரர் ஆலயம், காஞ்சிபுரம் நகர் மற்றும் வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்.	1—2—1979	திருக்குட நன்னீராட்டு விழா.
6.	காமாட்சியம்மன் ஆலயம், காஞ்சிபுரம், செங்கற்பட்டு மாவட்டம்	1—2—1979	தங்க விமானத்தின் திருக்குட நன்னீராட்டு விழா.
7.	பொன்மலை வேலாயுதசுவாமி ஆலயம், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி வட்டம், சேலம் மாவட்டம்.	2—2—1979	அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்.
8.	காளமேகப் பெருமாள் ஆலயம், திருமோகூர், மேலூர் வட்டம், மதுரை மாவட்டம் (அழகர்கோயில் உப ஆலயம்)	7—2—1979	மகா சம்ப்ரோக்ஷனம்.
9.	சபாநாயகர் திருக்கோயிலில், அமைந்து இருக்கும் திருமூலநாதசுவாமி ஆலயம், சிதம்பரம் நகர் மற்றும் வட்டம், தென்னாற்காடு மாவட்டம்.	7—2—1979	அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்.
10.	இராமசாமி திருக்கோயில், ஆறுமுகனேரி, திருநெல்வேலி .மாவட்டம்.	7—2—1979	அஷ்டபந்தன மகா சம்ப்ரோக்ஷணம்.
11.	குமரன் குன்றம் திருக்கோயில், குரோம்பேட்டை, சென்னை-44.	9—2—1979	கும்பாபிஷேகம்.
12.	ஐயப்பசுவாமி திருக்கோயில், காஞ்சிபுரம் நகர் மற்றும் வட்டம், செங்கற்பட்டு, மாவட்டம்.	7—2—1979	மகா கும்பாபிஷேகம்.
13.	சித்திபுத்தி விநாயகர் கோயில், இராயப்பேட்டை, சென்னை-14.	9—2—1979	மகா கும்பாபிஷேகம்.

1.	2.	3.	4.
14.	மருந்தீஸ்வரர் கோயில், திருவான்மியூர், சென்னை—41.	1—2—1979	அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்.
15.	சண்முகநாதப் பெருமான் கோயில், இணைப்பு ஐந்துகோயில் தேவஸ்தானம், குன்றக்குடி, திருப்பத்தூர் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.	3—5—1979	கும்பாபிஷேகம்.
16.	சித்தேஸ்வரசுவாமி ஆலயம், கஞ்சமலை, சேலம் மாவட்டம்.	6—6—1979	அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்.
17.	அமிர்தவல்லித் தாயார் உடனுறையும் அருள்மிகு சௌமிய தாமோதரப்பெருமாள் ஆலயம், வில்லிவாக்கம்.	6—6—1979	இராஜகோபுரம் கும்பாபிஷேகம்.
18.	திருமுருகன்கோயில், உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.	7—C—1979	மகா கும்பாபிஷேகம்.
19.	மரகதாம்பிகை சமேத மண்ணீஸ்வரசுவாமி ஆலயம், மண்ணிவாக்கம், செங்கற்பட்டு மாவட்டம்	9—5—1979	கும்பாபிஷேகம்.
20.	சௌந்தரநாயகி அம்மன் சமேத ஸ்ரீவில்வாரண்யேஸ்வரர் ஆலயம், திருக்கொள்ளம்புதூர், தஞ்சாவூர் மாவட்டம்.	1—7—1979	திருக்குட நன்னீராட்டு விழா.
21.	செங்கழுநீர் விநாயகர் ஸ்ரீசுப்பிரமணியசுவாமி நூதன நவக்கிரகப் பிரதிஷ்டை-மாயூரம், கூறைநாடு கணியூர்.	7—6—1979	மகா கும்பாபிஷேகம்.
22.	அலமேலுமங்கை நாயகி உடனுறை கம்பராயப் பெருமாள் திருக்கோயில், கம்பம், மதுரை மாவட்டம்.	27—6—1979	நூதன துவஜஸ்தம்பம் சம்ப்ரோக்ஷணம்.
23.	திரௌபதி அம்மன் ஆலயம், அவலூர்ப்பேட்டை, செஞ்சி தாலுகா.	15—7—1979	மகா கும்பாபிஷேகம்.
24.	இலட்சுமிநாராயணப் பெருமாள் ஆலயம். செய்யாறு, வடாற்காடு மாவட்டம்.	11—7—1979	மகா கும்பாபிஷேகம்.
25.	ஸ்ரீஞானவல்லி உடனாய ஸ்ரீஞானலிங்கேஸ்வரர், ஸ்ரீவள்ளிதெய்வயானை உடனாய ஸ்ரீவெள்ளி வேலாயுத சுவாமி, மஞ்சள் கொல்லை, நாகப்பட்டினம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.	11—7—1979	குடமுழுக்கு விழா.
26.	ஆஞ்சநேயசுவாமி ஆலயம், திருமலைவையாவூர், மதுராந்தகம் வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்.	2—2—1979	கும்பாபிஷேகம்.
27.	பிரசன்ன வரதராஜப்பெருமாள் ஆலயம், சின்னக்கடைத்தெரு, சேலம்-1.	26—8—1979	மகா கும்பாபிஷேகம்.
28.	பூமிநீளா சமேத வரதராஜப்பெருமாள் ஆலயம், தேதியூர், நன்னிலம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.	29—8—1979	மகா சம்ப்ரோக்ஷணம்.
29.	விநாயகப் பெருமான் ஆலயம், வடபூதநத்தம், உடுமலை வட்டம், கோவை மாவட்டம்.	27—8—1979	மகா கும்பாபிஷேகம்.
30.	செல்லாண்டியம்மன் ஆலயம், வடபூதநத்தம், உடுமலை வட்டம், கோவை மாவட்டம்	28—8—1979	மகா கும்பாபிஷேகம்.

1.	2.	3.	4.
31.	கல்யாண வேங்கட்ரமணசுவாமி ஆலயம், தான் தோன்றிமலை, கரூர் வட்டம், திருச்சி மாவட்டம்.	29—8—1979	மகா சம்ப்ரோக்ஷணம்.
32.	செல்வவிநாயகர் ஆலயம், 2-வது குறுக்கு சாலை, இராமலிங்க நகர், உறையூர், திருச்சி—3.	9—9—1979	மகா கும்பாபிஷேகம்.
33.	தர்மராஜா திரௌபதியம்மன் ஆலயம், கருவேப்பிலைப் பாளையம், உளுந்தூர்ப் பேட்டை வட்டம், தென்னாற்காடு மாவட்டம்.	10—9—1979	திருக்குட நன்னீராட்டுவிழா.
34.	சுகந்த பரிமளேஸ்வரர் ஆலயம், திருமணஞ் சேரி, புதுக்கோட்டை மாவட்டம், (புதுக்கோட்டை திருக்கோயில்களைச் சேர்ந்தது)	10—9—1979	திருக்குட நன்னீராட்டு விழா.
35.	அபயப்பிரதான ரங்கனாத சுவாமி ஆலயம், கரூர் நகரம் & வட்டம் திருச்சி, மாவட்டம்.	9—9—1979	மகா சம்ப்ரோக்ஷணம்.
36.	நாகராஜ ஆலயத்தில் உள்ள முருகன் கோயில் (இணைப்பு) இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ் தானங்கள், சுசீந்திரம், கன்னியாகுமரி மாவட்டம்.	16—9—1979	கும்பாபிஷேகம்.
37.	பேயாழ்வார் சந்நிதி பார்த்தசாரதி சுவாமி ஆலயம், திருவல்லிக்கேணி, சென்னை-5.	10—9—1979	சம்ப்ரோக்ஷணம்.
38.	பாலசுந்தர விநாயகர் ஆலயம் மேலக்கஞ்சி மேடு, பாபநாசம் நகரம் & வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.	16—9—1979	கும்பாபிஷேகம்.
39.	சித்திபுத்தி உடனாய அருள்மிகு தட்சிணா மூர்த்தி விநாயகர் ஆலயம், உன்னத புரம் என்னும் மெலட்டூர், பாபநாசம் வட்டம், தஞ்சை மாவட்டம்.	1—11—1979	மகா கும்பாபிஷேகம்.
40.	நாடியம்மன் ஆலயம், ஆலங்குடி புதுக் கோட்டை மாவட்டம்.	7—10—1979	மகா கும்பாபிஷேகம்.
41.	செல்வவிநாயகர் ஆலயம், கெங்குரெட்டி சாலை, எழும்பூர், சென்னை-8.	7—12—1979	இராஜகோபுரம் கும்பாபிஷேகம்.
42.	அருள்மிகு பாண்டுரங்கா ஆலயம், சென்னை—5.	27—1—1980	கும்பாபிஷேகம்.
43.	அவினாசிலிங்கேஸ்வரர் ஆலயம், அவினாசி, கோவை மாவட்டம்.	28—1—1980	குட முழுக்கு விழா.
44.	ஓம்வெற்றி விநாயகர் ஆலயம், தெற்கு சாலியத்தெரு, கூரைநாடு, மாயூரம், தஞ்சாவூர் மாவட்டம்.	28—1—1980	அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்.
45.	அகிலாண்டவல்லி அம்மன் சமேத விசுவாமித்திர மகாலிங்க சுவாமி ஆலயம், விஜயாபதி, (இணைப்பு) அருள்மிகு வரகுண பாண்டியன் வகையறா ஆலயம், இராதாபுரம், நாங்குனேரி வட்டம்.	31—1—1980	அஷ்டபந்தன கும்பாபிஷேகம்.
46.	அங்காளபரமேஸ்வரி ஆலயம், ராங்கியம், திருமயம் வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்.	21—1—1980	மகா கும்பாபிஷேகம்.

1.	2.	3.	4.
47.	சோடசமகாலிங்கசுவாமி ஆலயம், கும்ப கோணம் நகரம் & வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.	8—2—1980	அஷ்டபந்தன மகா கும்பாபி ஷேகம்.
48.	பிடாரி அய்யனார் ஆலயத்துடம் இணைந்த சியாளம்மன் ஆலயம், தேனூர் பெரம்பலூர் வட்டம்.	8—2—1980	கும்பாபிஷேகம்.
49.	பத்திரகாளியம்மன் ஆலயம், பொள்ளாச்சி நகர் & வட்டம், கோவை மாவட்டம்.	28—2—1980	கும்பாபிஷேகம்.
50.	முத்துமாரியம்மன் ஆலயம், சோமரசம் பேட்டை, திருச்சிவட்டம் & மாவட்டம்.	26—3—1980	கும்பாபிஷேகம்.
51.	நெல்லுக்கடை மாரியம்மன் ஆலயம், நாகப் பட்டினம் நகரம் & வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.	3—4—1980	கும்பாபிஷேகம்.
52.	தேவி பவானி பத்தினியம்மன் ஆலயம், இரத்தினபுரி என்னும் கவர்ப்பேட்டை, கும்மிடிப்பூண்டி வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்.	3—4—1980	கும்பாபிஷேகம்.
53.	முத்துக்குமாரசுவாமி ஆலயம், பெரும்பேடு, பொன்னேரி வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்.	6—4—1980	மகா கும்பாபிஷேகம்.
54.	பிரகதீஸ்வரர் ஆலயம், தஞ்சாவூர் நகரம், வட்டம் & மாவட்டம்.	3—4—1980	அஷ்டபந்தன மகா கும்பாபி ஷேகம்.
55.	சக்தி வினாயகர் ஆலயம், செங்கற்பட்டு நகரம், வட்டம் & மாவட்டம்.	23—3—1980	மகா கும்பாபிஷேகம்.
56.	அருள்தேவி திருமணி அம்மன் ஆலயம், 13 வது மெயின் சாலை, அண்ணா நகர், சென்னை—40.	30—4—1980	அஷ்டபந்தன மகா கும்பாபி ஷேகம்.
57.	சிவலோகநாதர் ஆலயம், திருப்புன்கூர், சீர்காழி வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.	28—4—1980	நவக்கிரகப் பிரதிஷ்டை அஷ்டபந்தன மகா கும் பாபிஷேகம்.
58.	ஏகாம்பரநாதர் ஆலயம், தாண்டாம் பாளையம், ஈரோடு வட்டம், பெரியார் மாவட்டம்.	18—6—1980	அஷ்டபந்தன மகா கும்பாபி ஷேகம்.
59.	சௌந்தரேஸ்வரசுவாமி ஆலயம், பேட்டை, முத்துப் பேட்டை, திருத்துறைப்பூண்டி வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.	26—6—1980	அஷ்டபந்தன மகா கும்பாபி ஷேகம்.
60.	மதுரைவீரசுவாமி ஆலயம், செவந்தாம் பட்டி, தாத்தய்யங்கார்பேட்டை, துறையூர் வட்டம், திருச்சி மாவட்டம்.	26—6—1980	மகா கும்பாபிஷேகம்.
61.	அருள்மிகு செல்வவினாயகர் மற்றும் முத் தாலம்மன் ஆலயம், கோண்டூர், விழுப் புரம்.	26—6—80	கும்பாபிஷேகம்.
62.	ஆதிநாதர் ஆழ்வார் ஆலயம், ஆழ்வார் திருநகரி, திருச்செந்தூர் வட்டம், திரு நெல்வேலி மாவட்டம்.	3—4—1980	ஆலயக் கொடிமரம் கும்பாபி ஷேகம்.
63.	திருத்தாளீஸ்வரர் ஆலயம், அரன்வாயில் திருவள்ளூர் வட்டம்.	26—5—1980	கும்பாபிஷேகம்.
64.	நிர்த்தபுரீஸ்வரர் ஆலயம், புலவர்நந்தம், பாபநாசம் வட்டம், தஞ்சாவூர் மாவட் டம்.	2—5—1980	கும்பாபிஷேகம்.

1.	2.	3.	4.
65.	அருள்மிகு வேங்கடேசப் பெருமாள் ஆலயம், வேளுக்குடி, மன்னார்குடி வட்டம், நஞ்சை மாவட்டம்.	19—5—1980	கும்பாபிஷேகம்.
66.	ஆபத்திற்காத்த வினாயகர் ஆலயம், அய்யம்பேட்டை, பாபநாசம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.	1—4—1980	கும்பாபிஷேகம்.
67.	முள்ளி விநாயகர் ஆலயம், தட்டான் கோயில், மன்னார்குடி வட்டம், தஞ்சை மாவட்டம்.	28—4—1980	கும்பாபிஷேகம்.
68.	சுப்பிரமணியசுவாமி ஆலயம், விராலிமலை, புதுக்கோட்டை மாவட்டம்.	23—6—1980	கும்பாபிஷேகம்.
69.	கல்யாண வேங்கட்ரமணசுவாமி ஆலயம், இலுப்பூர், புதுக்கோட்டை மாவட்டம்.	26—6—1980	கும்பாபிஷேகம்.
70.	அமிர்தகடேஸ்வரர் ஆலயம், மேலக்கடம்பூர், காட்டுமன்னார்குடி வட்டம், தென்னாற்காடு மாவட்டம்.	3—4—1980	கும்பாபிஷேகம்.
71.	வடபத்ரகாளியம்மன் ஆலயம், சன்னாபுரம் கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம்.	23—6—1980	கும்பாபிஷேகம்.
72.	ஆம்பரவனேஸ்வரர் ஆலயம், கூகூர், கும்பகோணம் வட்டம், தஞ்சைமாவட்டம்.	26—6—1980	கும்பாபிஷேகம்.
73.	புல்நாயகியம்மன் ஆலயம், பாகனேரி சிவகெங்கை தேவஸ்தானம், இராமநாதபுரம் மாவட்டம்.	28—4—1980	கும்பாபிஷேகம்.
74.	இராமநாதசுவாமி வகையறா ஆலயங்கள், ஆரியனூர், திருத்துறைப்பூண்டிவட்டம்.	18—6—1980	கும்பாபிஷேகம்.
75.	வரதராஜப் பெருமாள் ஆலயம், ராராத்தி மங்கலம், நன்னிலம் வட்டம்.	26—6—1980	கும்பாபிஷேகம்
76.	பக்தவத்சலேஸ்வரர் ஆலயம், சிறுகமணி, திருச்சி வட்டம்.	8—6—1980	கும்பாபிஷேகம்.
77.	வரதராஜப் பெருமான் ஆலயம், பூவாளூர், லால்குடி வட்டம்.	23—6—1980	கும்பாபிஷேகம்.

—:o:—

1—7—1978 முதல் 30—6—1980 முடிய திருப்பணி மற்றும் கட்டுமான வேலைகளுக்காக நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை விபரம் (மொத்தம் 9,16,84,509)

		திருப்பணி	மராமத்தும் இதர வேலைகளுக்கும்	கூடுதல்
		ரூ.	ரூ.	ரூ.
1-7-78 முதல் 30-6-79 முடிய	...	...	...	5,16,79,391
1-7-79 முதல் 31-1-80 முடிய	...	...	...	2,52,96,340
1-2-80 முதல் 29-2-80 முடிய	...	29,12,909	12,61,500	41,74,409
1-3-80 முதல் 31-3-80 முடிய	...	15,57,331	35,23,500	50,80,831
1-4-80 முதல் 30-4-80 முடிய	...	20,15,863	1,83,000	21,98,863
கூடுதல்	...	64,86,103	49,68,000	8,84,29,834
1-5-80 முதல் 31-5-80 முடிய	...	16,25,975	4,30,000	20,55,975
1-6-80 முதல் 30-6-80 முடிய	...	8,46,000	3,52,700	11,98,700
மொத்தம்	...	89,58,078	57,50,700	**9,16,84,509**

திருவானைக்கா அருள்மிகு ஜம்புகேசுவரர்—அகிலாண்டேசுவரி திருகோயிலுக்கு, யுனெஸ்கோ டைரக்டர் ஜெனரல் டாக்டர் திரு. எ. எம் எம். பவ் அவர்களும், அவர்தம் குழுவினரும் வருகை தந்தபோது, நமது அறநிலைய ஆணையர் திரு. யு. சுப்ரமணியன் அவர்கள் அக்குழுவினரை வரவேற்றுக் கோயிலின் பல பகுதிகளையும் சுற்றிக் காண்பித்தல் (17.8.80).

பதிவு எண். எம். 7039

சென்னைக் கோடம்பாக்கம் வடபழநி அருள்மிகு பழநியாண்டவர் திருக் கோயிலுக்கு அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் வருகை தருதல். அறநிலைய ஆணையர் திரு யு. சுப்ரமணியன் அவர்களும், துணை ஆணையர் திரு. வி. செள. கோதண்டபாணி, பி.எஸ்ஸி.,பி.எல்., அவர்களும், நிர்வாக அதிகாரி திரு. எம். லிங்கமராஜா அவர்களும் உடன் உள்ளனர்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.,எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.